விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 28 செவ்வாய்க்கிழமை (10.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 113

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## புலிகள் மீள்வதை தடுக்க வடக்கில் தொடர்ந்தும் இராணுவத்தை நிலைநிறுத்த வேண்டும்

### பிரி.பாராளுமன்ற உறுப்பினர் நெசர்பே பிரபு கருத்து

கடந்த வாரம் ஜனாதிபதி ராஜ பக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தபோது நெசர்பே பிரபு...



வடக்கில் தொடர்ந்தும் இராணுவத்தினரை நிலைநிறுத்த வேண்டியது அவசியமானது என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் நெசர்பே பிரபு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத் தல்கள் முற்றுமுழுதாக நீங்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ;

மரபு ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்த மாட்டார்கள் என்ற போதி லும், படையினரை நிலைநிறுத்த வேண் டியது அவசியமானது.

எந்தக் காலத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் இயங்குவதினை தடுத்து நிறுத்த படையினரின் பிரசன்னம் தேவையா னதாகும்.

வட அயர்லாந்தில் கிளர்ச்சிக் குழுக்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்ட போதி லும் நீண்ட காலத்திற்கு பிரித்தானிய படை யினர் நிலைகொண்டிருந்தனர்.

இதேவேளை வடக்கு கிழக்கில் நடத்தப் பட்ட சனத்தொகை மதிப்பீடு தெளிவான விளக்ககங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண் டும்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஏற்பட்ட இழப்புகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப் பாடு வெளியிடப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். (ந-8;11)

# நாட்டிற்கு பொருத்தமான வகையில் தீர்வுத் திட்டம் அமுல்படுத்தப்படும்!

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை

*(கொழும்பு)*, இலங்கைக்கு பொருத்தமான வகையில் தீர்வுத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.


2011ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கி அறிக்கை வெளியிடும் வைபவம் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், [illegible]னங்களுக்கிடையில் நல்லிணக்கத் [illegible] ஒரே இரவில் ஏற்படுத்தி விட முடியாது. எமது நாட்டின் பிரச்சினைக்கு வெளிநாடுகளில் இரு ந்து தீர்வை இறக்குமதி செய்யவும் முடியாது.

30 வருட கொடூர யுத்தத்தின் பின்னணி யில் செயற்பட்ட சக்திகள் இன்று சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்று நாடு பல துறைகளிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. நாடு முழுவதிலும் அபி விருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. *(24ஆம் பக்கம் பார்க்க)*

## வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்ற போராடுவோம்-மாவை




வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற் காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் ஜனநாயக ரீதியில் போராட்டங்களை மேற்கொள்ளும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வுகள் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கில் இராணுவம் வெளியேறினால் தான் தமிழ் மக்களால் நிம்மதியாக வாழ முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சிகளின் *(24ஆம் பக்கம் பார்க்க)*

## கோத்தபாயவின் தடுப்புக்காவலில் பிரேம்குமார் லங்கா நியூஸ் இணையம் அதிர்ச்சித் தகவல்



படைத்துறை செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள விசேட பிரிவொன்றே முன்னிலை சோஷலிசக் கட்சியின் தலைவர் பிரேம்குமார் குணரட் ணத்தை தடுத்து வைத்துள்ளதாக லங்கா நியூஸ் வெப் இணையத் தளம் தெரிவித்துள்ளது.

பிரேம்குமார் குணரட்ணத்தை கைது செய்த இலங்கையின் தீவிர வாத விசாரணைப் பிரிவின் தலை வர், அவரை எம்பிலிப்பிட்டியவுக்கு கொண்டு செல்லவுள்ளதாக கூறியுள் ளதாக குறிப்பிட்டுள்ள இவ்வூடகம், எம்பிலிப்பிட்டிய என்பது ஓர் குறி யீட்டு சொல் எனவும் தெரிவித்துள் ளது.

அதேவேளை, காணாமல் போன முற்போக்கு சோஷலிச கட்சியின் முக்கிய செயற்பாட்டாளரான திமுது ஆட்டிகல குறித்து இதுவரை தகவல் கள் எதுவும் கிடைக்கவில்லை என் றும் இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

பிரேம்குமார் குணரட்ணம் தங்கி யிருந்த வீட்டுக்கு அயலில் வசித்து வந்த *(24ஆம் பக்கம் பார்க்க)*

## ரோஹணவின் இடத்தில் இருந்து நாங்கள் தொடர்வோம்! -முன்னிலை சோஷலிசக் கட்சி

ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலை வர் ரோஹண விஜேவீர நிறுத்திய இடத்திலிருந்து நாம் தொடர்வோம் என புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முன்னிலை சோஷலிசக் கட்சி அறி வித்துள்ளது. கொழும்பு சுகததாச அரங்கில் நேற்று நடைபெற்ற அக்கட்சியின் அங்குரார்ப்பண விழாவில் உரையாற்றிய அதன் சிரேஷ்ட உறுப்பினர் சேன தீர குணதிலக்க, தமது கட்சியின் உரு வாக்கமானது இந்த நாட்டில் முத லாளித்துவ நிர்வாகத்திற்கு எதிரான போராட்டத்திலும் சோஷலிச மறு சீர மைப்பிலும் புதிய சகாப்தமாகும் என்றார்.

முன்னிலை சோஷலிச கட்சி யின் உருவாக்கமானது தற்போது உலகெங்கும் முதலாளித்துவ ஆட்சிகளை முடிபுக்கு கொண்டு வருவதற்கான புதிய சமவுடமை இயக்கத்திற்குள்ள தேவையை நிறைவேற்றுவதாகும் எனத் தெரி வித்த *(24ஆம் பக்கம் பார்க்க)*

## குணரட்ணம் இருந்ததை நிரூபிக்க முடியுமாம்

குமார் குணரட்ணம் என்ற நபர் இலங்கைக்கு வந்தமை இன்று ஆவண ரீதியான ஆதாரங்கள் இல் லையென அரசாங்க அதி காரிகள் கூறியதை முன்னிலை சோஷலி சக் கட்சி நேற்று மறுத்துள்ளது.

மக்கள் போராட்ட இயக்கத்தின் முன்னாள் பிரசார செயலாளரான வருண ராஜபக்ஷ இது தொடர்பாக தெரிவிக்கையில்;

குணரட்ணம் கேகாலையில் பிறந்தார். சென்.மேரிஸ் கல்லூரியில் கல்வி *(24ஆம் பக்கம் பார்க்க)*

## ஒரு லட்சத்து 20 ஆயிரம் தமிழ் அகதிகள் இந்தியாவில்

(கொழும்பு)

யுத்த காலத்தில் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து இந்தியாவிற்குத் தப்பிச் சென்றவர்களில் 120,000 தமிழ் அகதிகள் முகாம்களிலும் உறவி னர்கள் வீடுகளிலும் தங்கியிருப் பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு மாகாணங்களிலும் உள்ள பிரதேச செயலங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இத் தகவல் தெரியவந்துள்ளது.

இவ்வாறு இந்தியாவில் உள்ள வர்களில் 23000 பேர் இலங்கைக்கு வர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

எனினும் தற்காலிக வீடுகள் இன்றி நிரந்தர வீடுகள் அமைத் துத் தருவதானால் மாத்திரமே இலங் கை வர விரும்புவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இருப்பினும் இந்தியாவில் உள்ள அகதிகளை இலங்கைக்கு அழை த்து வருவதில் அரசாங்கம் அக்க றையின்றி செயற்படுவதாக தமி ழ்க் கட்சிகள் குற்றம் சுமத்தி வரு கின்றன. (ந-8;11)

## ரணில் இந்தியாவில்



(புதுடில்லி)

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தனிப்பட்ட விஜ யம் ஒன்றை மேற்கொண்டு இந் தியா சென்றுள்ளார்.

இவர் வட இந்தியாவின் சிகிம் பகு தியில் *(24ஆம் பக்கம் பார்க்க)*

அன்பு வாசகர்களே!
உங்கள் வலம்புரியில்
நாளை முதல்
சிவல்புரி சிங்காரம்
எழுதும்
**நந்தன புத்தாண்டுப் பலன்**
வாசிக்கத் தவறாதீர்கள்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழரின் பிரச்சினைகளை சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தவே மே தின ஏற்பாடு!

## சுரேஸ் பிரேமச்சந்திரன் விளக்கம்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஓரளவுக்கு சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்த மே தினக் கூட்டம் நல்ல சந்தர்ப்பம். இதனை சிங்களத் தலைவர்களுடன் இணைந்து நடத்துவதையிட்டு யாரும் அச்சப்படத் தேவையில்லை. அத்தோடு தமிழினத்தை அடைவு வைத்து விட்டோம் எனக் கூறுவதிலும் அர்த்தமில்லை என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற மே தினம் தொடர்பான கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் எதிர்வரும் மேதினக் கூட்டத்தை நாட்டிலுள்ள சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்த திட்டமிட்டுள்ளது.

இந்த மே தினக் கூட்டம் தமிழ் மக்களின் உரிமைகளையும் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் வெளிக்கொண்டுவர நல்ல சந்தப்பமாக அமையும்.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் களம் அமைத்துக் கொடுக்கப் போகின்றது எனவும் பலர் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

இந்த அரசாங்கத்தின் ஆட்சியை தோற்கடிக்க சகல எதிர்க்கட்சிகளும் எம்மோடு இணைந்துள்ளன.

இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டு என்பதில் சிங்களவர்களை தலைவர்களாகக் கொண்ட கட்சிகளும் முனைப்புச் காட்டிவருகின்றன.

காரணம் இன, மத, மொழி, வேறுபாடின்றி சகல மக்களையும் மதிக்கும்வகையில் பொருளாதாரச் சுமையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்து செல்கின்றமையால் இந்த நாட்டில் வாழும் சகல மக்களும் பாதிப்படைந்துள்ளனர்.

இதுதவிர ஒவ்வொரு நாளும் கடத்தல், கொலை, கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றது.

கடந்த காலங்களில் வடபகுதியில் இருந்த நிலை தற்போது தென்பகுதியில் ஏற்பட்டுள்ளது. அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள், பெண்கள் எனப்பலரும் கடத்தப்பட்டு வருகின்றனர்.

ஆளும் கட்சிக்கு ஆதரவானவர்களையும் கடத்துகின்றனர். ஆனால் இது விடயத்தில் எவரும் கைது செய்யப்படவும் இல்லை கண்டு பிடிக்கப் படவும் இல்லை.

எனவே இதற்கெதிராக இணைந்து போராடுவதில் என்ன தப்பு? முக்கிய பிரச்சினைகளை வெளிக் கொண்டு வர வேண்டும்.

வன்னியில் வன்முறைகள் அதிகரித்து விட்டன. இராணுவத்தினரால் தமிழ்ப் பெண்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

வட பகுதியில் இராணுவ மயமாக்கல் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இன்னு பல இடங்கள் விடுவிக்கப்படாமல் உயர்பாதுகாப்பு வலயங்களாகவுள்ளன.

சிங்களத்தலைவர்கள் மேதினக் கூட்டத்தில் பங்குகொள்ளும் போது அவர்களை நம்பி வாக்களித்த பெரும்பான்மை இனத்தை சார்ந்த மக்களுக்கு தமிழ் மக்களின் நிலைமை தெரியவரும்.


அத்தோடு சிக்களத்தலைவர்களும் எமது பிரச்சினை தொடர்பில் எடுத்துரைப்பார்கள். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு சிங்களத் தலைவர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே எல்லா எதிர்க்கட்சிகளும் இணைந்து மேதினத்தை நடத்துவதில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது. அதில் எவரும் பயப்பட தேவையில்லை.

மேலும் இது ஐக்கிய தேசியக்கட்சியின் மேதினக் கூட்டம் இல்லை. தமிழ் மக்களின் நிலைமையை எடுத்துக் கூறக் கூடிய மேதினக் கூட்டமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, பேராசிரி யர் சி.க.சிற்றம்பலம், தமிழரசுக்கட்சியின் துணைச் செயலாளர் சீ.வி.கே.சிவஞானம், யாழ். மாநகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பிரதேச நகரசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந-6)

## பலஸ்தீன ஜனாதிபதி இலங்கை வருகை



(கொழும்பு)

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் இரண்டு நாள் அரச விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் ஏப்ரல் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கை வரவுள்ளார்.

இலங்கை வரும் அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் டி.எம்.ஜெயரட்ண ஆகியோரைச்சந்தித்து பேச்சு நடத்துவார். (ந-8,11)

## இராணுவ காவலரணை மோதியது கன்ரர் நால்வர் படுகாயம்

(பளை)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கன்ரர் வாகனம் இராணுவ காவலரணை மோதியதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று ஏ9 வீதி பளைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த காவலரணில் கடமையாற்றிக் கொண்டிருந்த இரண்டு இராணுவத்தினர் மற்றும் கன்ரர் வாகனத்தில் பயணித்த இருவர் உட்பட நால்வரே படுகாயமடைந்துள்ளனர்.

அவர்களில் இராணுவத்தினர் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக பளைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.பி.ராஜபக்ஷ தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-8,254)






## துணுக்காயில் நேற்று கடும் மழை ; மினி சூறாவளி

(மல்லாவி)

துணுக்காய் பகுதியில் நேற்று மாலை 4 மணி முதல் 5 மணிவரை கடும் மழை பெய்ததுடன் மினி சூறாவளியும் தாக்கியதால் தற்காலிக வீடுகளில் தங்கியிருந்த மக்கள் பெரும் பாதிப்படைந்தனர்.

அணிஞ்சம் குளம் 2ஆம் பகுதிக்கிராமத் தில் மினி சூறாவளியால் இருபதுக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

மழை மற்றும் மினி சூறாவளியால் ஏற்பட்ட சேதங்களை துணுக்காய் [illegible]தேச செயலாளர் சி.குணபாலன் நேரில் சென்று பார்வையிட்டார். (ந-8,15)

## தே.அ.அ. கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

838152597V என்ற இலக்கம் கொண்ட பூபாலசிங்கம் ஜனார்த்தினி என்பவருடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ந-11)

## பட்டாசுகளை வெடிக்க வைத்து தற்கொலை

(கொழும்பு)

தனது இடுப்புப்பெட்டியில் பட்டாசு வெடிகளை கட்டிக்கொண்டு அவற்றை வெடிக்கவைத்து ஓய்வு பெற்ற கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம, மாகுபுர பிரதேசத்தில் நேற்றுக் காலை 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகன கூறினார்.

59 வயதான நிஹால் பஸ்நாயக்க என்பவரே உயிரிழந்தவராவார்.

2005ஆம் ஆண்டு தனது மனைவி இறந்த பின்னர் அவர் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதன்போது மருத்துவ மாணவியாகஇருந்தஅவரின் மகள் பின்னர் பிக்குணியாக மாறினார். (ந-8,11)





வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி பகுதியில் 2 பரப்பு காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 0776181216

(8132)

# இன்று ஒரு தகவல்

## மாயை

நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

"இந்த உலகத்தை மகான்களெல்லாம் 'மாயை' என்று சொல்கிறார்களே. அதை நான் நம்பமாட்டேன் என்றார் அவர்.

''என்ன திடீரென்று இப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றேன்.

''இந்த உலகத்தில் எவ்வளவு காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும் போது இதைப் போய் மாயை என்று சொன்னால் எப்படி?'' என்றார்.

'மாயை' என்றால் ஏதோ அடியோடு இல்லாத ஒன்று என்று அவர் நினைக்கிறார் அதனால் அப்படிச் சொல்கிறார்.

'மாயை' என்று அடியோடு இல்லாத ஒன்று இல்லை. முயல் கொம்பு, குதிரை கொம்பு என்று சொல்கிறோம் அல்லவா. அப்படி ஒரு பொருள் அடியோடு இல்லை.

ஆனால், மாயை என்பது இருப்பதாக நினைக்கும் வரைக்கும் இருப்பதாகவே தோன்றும்.

'கானல்' நீர் மாதிரி. கானல் நீர் கண்ணுக்குத் தெரியும். அதாவது தூரத்தில் தண்ணீர் இருப்பது போல் தோன்றும். அங்கு தண்ணீர் இருக்காது. இருந்தாலும் தண்ணீர் இருப்பது போலவே தோன்றும். அதுதான் மாயை.

ஒரு கயிறு கீழே கிடக்கிறது. இருட்டு நேரத்தில் அதைப் பாம்பு என்று தவறாக நினைத்து விடுகிறோம். அப்பொழுது என்ன ஆகிறது?

நிஜமான பாம்பு உண்டாக்கும் அத்தனை பயத்தையும் பதற்றத்தையும் அது நம்மிடம் உண்டாக்கி விடுகிறது.

அதே மாதிரி... உலகம் உண்மையிலேயே நிரந்தர சத்தியமாக இல்லையென்றாலும் கூட, அதை நாம் சத்தியமாக நினைக்கும் வரைக்கும் அது மாதிரியே எல்லா காரியங்களும் நடக்கிறது.

நாம் கனவு காண்கிறோம். கனவு காணும் வரைக்கும் அந்தக் கனவு நிஜயமாகத்தான் இருக்கும். விழித்துக் கொண்டால் அது 'ஒன்றுமில்லை' என்று ஆகிவிடும்.

நாம் அஞ்ஞானத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் வரைக்கும் உலகம் மெய்யாக இருக்கும். நாம் ஞான நிலையில் முழித்துக் கொண்ட பின்னர் அது மறைந்து விடும்.

அதனால் இந்த உலகத்தில் நாம் எப்படி வாழ வேண்டும் என்று கேட்டால் தாமரை இலையில் தண்ணீர் போல் வாழ வேண்டும் என்கிறார்கள் பெரியவர்கள்.

ஒட்டாமல் வாழும் வாழ்வு அது. தாமரை இலை, தண்ணீரில் தான் இருக்கும். இருந்தாலும் தண்ணீர் இதில் ஒட்டாது. ஒரு துளி அதன் மேல் விழுந்தாலும் அது நிற்காது ஓடிப் போய்விடும்.

இந்தக் காலப் பிள்ளைகள் அதற்கு புதுவிளக்கம் கொடுக்கிறார்கள்.

கொஞ்ச நாளைக்கு முதல் ஒரு சின்னப் பையன் என்னிடம் வந்து, 'இன்று ஒரு தகவலில் என்னென்னமோ சொல்கிறீர்களே... தாமரை இலையில் தண்ணீர் நிற்காது. ஏன் தெரியுமா? சேர்? என்று கேட்டான்.

"நீயே சொல்லப்பா" என்றேன்.

"தாமரை இலையில் தண்ணீர் நிற்காது. ஏன்னா... அதுக்குக் கால் கிடையாது" என்றான்.

உலகமே மாயம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் மதுபானசாலைகள் மூடப்படும்

## நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடத்தப்பட்டு வரும் மதுபான சாலைகளின் அனுமதியை இரத்து செய்வதென நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் ஆரம்பமானது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தலைமையுரையைத் தொடர்ந்து சென்ற கூட்ட அறிக்கை தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதில் முதலாவதாக குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன்போது பொதுமக்களினாலும் கிராமசேவையாளர்களினாலும் மதுப்பிரியர்களின் அட்டகாசம் தொடர்பாக மிகவும் விரக்தியுடன் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதில் குறிப்பாக நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கோண்டாவில், அரியாலை, பூம்புகார் போன்ற பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் தமது பிரதேசத்தில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் தொடர்பாக எடுத்துரைத்தனர்.

அத்தோடு கோவில்கள், பாடசாலைகள், வீடுகள் என்பனவற்றைக் கருத்தில் எடுக்காது மதுபானச் சாலைகளை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் குற்றம் சாட்டினர்.

இதுதவிர கள்ளுத் தவறணைகளில் சாராயம், ரம், விஸ்கி போன்ற மதுபானங்களும் விற்பனை செய்கின்றனர்.

இதுதவிர வீடுகளில் வைத்து கஞ்சா, சாராயம், கசிப்பு போன்றவற்றை விற்பனை செய்கின்றனர்.

சிறுவயதினருக்கும் இவற்றை விற்பனை செய்கின்றனர். இதனால் பல சமூக விரோதச் செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர் எனவும் குற்றம் சாட்டினர்.

எனவே, மதுபானச்சாலைகளுக்கு அனுமதி வழங்கும்போது வருமானத்தை மட்டும் நோக்கமாக கொண்டு அனுமதி வழங்கக் கூடாது எனவும் அந்த இடத்தை சரிவர ஆராய்ந்து அந்தப் பகுதி மக்களின் கருத்துக்களை அறிந்து அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு . பதிலளித்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவருமான செல்வஸ்திரி அலென்ரின் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தொழிற்படும் மதுபான நிலையங்களின் அனுமதியை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வருடா வருடம் புதிப்பிக்கப்படும் அனுமதியின் போது மக்களுக்கு இடையூறாகவுள்ள மதுபான நிலையங்கள் மூடப்படும் எனவும் உறுதியளித்தார்.

அத்தோடு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் மதுப்பிரியர்களை பொலிஸார் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 30 |
| தக்காளி | 50 | 60 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 20 | 10 | 15 |
| கரட் | 40 | 50 | 40 |
| பூசணி | 35 | 30 | 30 |
| புடோல் | 30 | 40 | 20 |
| வாழைக்காய் | 35 | 20 | 25 |
| சின்ன வெங்காயம் | 50-70 | 40-60 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 60 |
| பாகற்காய் | 70 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | -- |
| பயற்றங்காய் | 60 | 100 | 50 |
| லீக்ஸ் | 50. | 70 | 60 |
| பீற்றூட் | 30 | 10 | 20 |
| கறிமிளகாய் | 50 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 |
| போஞ்சி | 40 | 70 | 40 |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | 20 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 30 |

# இராசி பலன்

*10.04.2012*
*(பங்குனி 28, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு*
*சதுர்த்தி பிற்பகல் 4.18 மணிவரை*
*அனுஷம் முன்னிரவு 7.12 மணிவரை*
*இராகுகாலம் 3.06-4.36 மணிவரை*
*சுபநேரம் 10.36-12.06 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம்.*

**மேடம்**

கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை,குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையலாம், உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள், கௌரவக்குறைவான நாள்.

**இடபம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், பெண்களால் பெருமை சேரும் நாள்,நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்,தொழில் நன்மையுண்டு.

**மிதுனம்**

உற்சாகமாக பணிபுரியும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எடுத்த காரியம் கைகூடும்,சுவாரஸ்யமான நாள், போசன சுகமுண்டு.

**கடகம்**

தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்,செய் தொழிலில் நன்மையடைவீர்கள்,தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**சிங்கம்**

தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரயாண சுகமுண்டு.

**கன்னி**

எப்படி நடக்குமோ என நினைத்த காரியமொன்று நல்லபடியாக நடந்தேறும், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும்,தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**

வாக்கு மேன்மையால் பிறரைக் கவர்வீர்கள்,தொழில் வளர்ச்சி மேலோங்கும், புதிய பாதை புலப்படும் நாள்,குடும்ப சுகமுண்டு, புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**

தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்,விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல விதமாக முடியும், போசன சுகமுண்டு.

**தனுசு**

கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கலாம்.

**மகரம்**

புதிய பொருட்கள் வாங்குவதில் பெரிதும் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் நடந்து கொள்வீர்கள், பணவரவு திருப்திகரமாக அமையும்.

**கும்பம்**

கடின உழைப்பால் முன்னேற்றம் காண முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்**

மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள்,மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

வளவன்

# திகதி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் இன்று நடைபெறவிருந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

எனவே கூட்டம் நடைபெறவுள்ள திகதி பின்னர் அறிவிக்கப்படும் என கரவெட்டி பிரதேச செயலாளர் இரா. வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

# யாழ்.நகரின் அங்காடி வியாபாரம் குறித்து மாநகரசபையில் வாதப்பிரதிவாதங்கள்

யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் உள்ள அங்காடி வியாபார நிலையங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாநகர சபை மேற்கொண்டு வருகின்றது.

அங்காடி வியாபார நிலையங்களினால் யாழ். மாநகரசபைக்கு உரிய முறையில் வரி செலுத்தி நிரந்தர கட்டடம் அமைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாகவும் நகரை அபிவிருத்தி செய்யும் போது அங்காடி வியாபார நிலையங்கள் கட்டாயம் அகற்றப்பட வேண்டியும் உள்ளது என யாழ். மாநகரசபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்ற மாதாந்தப்பொதுக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கூறுகையில்,

முனீஸ்வரர் வீதியில் உள்ள அங்காடி வியாபார நிலையங்களை அவ்விடத்திலிருந்து அகற்றி வேறு இடத்தில் அமைக்க அனுமதி வழங்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

இதன்போது யாழ். மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான எம். அஸ்வர் அங்காடி வியாபாரிகளின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாக்கப்படும் நிலையில் பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்காடி வியாபாரிகளின் நலனில் அக்கறை கொண்டு நகரை அபிவிருத்தி செய்யுமாறும் அந்தப் பகுதியில் முஸ்லிம் மக்களே அதிகளிவில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடு இன்றி அவர்களின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

இதன்போது யாழ். மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அ. பரஞ்சோதி தெரிவிக்கையில்,

நகர அபிவிருத்தியின் போது அங்காடி வியாபார நிலையங்கள் இருக்கக்கூடாது எனவும் அத்தோடு எதிர்காலத்தில் யாழ். அபிவிருத்தி செய்யப்படும் போது அங்காடி வியாபாரம் முற்றாக அகற்றப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

நான் அங்காடி வியாபாரிகளை முழுமையாக அகற்ற வேண்டும் என கூறவில்லை. அங்காடி வியாபாரத்தில் ஏனைய வர்த்தகர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது எனவும் நகர அபிவிருத்தியின் போது அங்காடி வியாபார நிலையங்கள் அகற்றப்பட வேண்டி ஏற்படும் எனவும் தான் நான் கூறுகின்றேன் என்றார் உஉறுப்பினர் பரஞ்சோதி.

பின்பு யாழ். மாநகர சபை முதல்வர் நகர்ப் பகுதியிலிருந்து அங்காடி வியாபாரிகள் அகற்றப்படும் போது அவர்களுக்கு மாற்றீடாக வேறு இடத்தில் காணிகள் வழங்கப் படும் எனவும் தெரிவித்திருந்தார்.

அத்தோடு அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தர்கள் சிலர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் இரவு வேளைகளில் யாழ். நகர்ப்பகுதியில் போதைப் பொருட்கள் விற்பனை செய்த சிலரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதேச திணைக்கள தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கேட்டுள்ளார். (அ)

# கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கு விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கு யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் பணிபுரியும் இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் வகுப்பு-1 அல்லது வகுப்பு 2-1 ஐச் சேர்ந்த அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுவதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார்.

சேவை நீடிப்பில் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியாது என்பதால் விண்ணப்பிக்க விரும்புவர்கள் நிர்வாக கிளையில் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

# தென்மராட்சி பி.செயலகத்தில் மகளிர் தின நிகழ்வு

தென்மராட்சி பிரதேச செயலக சர்வதேச மகளிர் தினம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் க. கந்தசாமி, யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரஞ்சிதமலர் மோகனேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

விசேட நிகழ்வாக இவ்வருடத்திற்கான சிறந்த பெண்மணிக்கான தேசிய விருது பெற்ற யாழ். அரச அதிபர் கௌரவிக்கப் படவுள்ளதோடு தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறந்த பெண்மணிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-3-29)




# திவிநெகும கண்காட்சி

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் சமுர்த்தி மகா சங்கத்தின் ஏற்பாட்டில் திவிநெகும மாபெரும் புத்தாண்டுச் சந்தை நேற்றுமுதல் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் பெருந்தொகையான உணவுப் பொருட்கள், தைத்த ஆடைகள் மற்றும் பனம் பானங்கள், பன்ன வேலைப் பொருட்கள் மற்றும் கடலுணவு பொருட்கள் என பெருந்தொகையான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (அ-3-64)

# சுன்னாகம் பொலிஸ் பிரிவினரால் சித்திரைப்புத்தாண்டு நிகழ்வுகள்

தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சுன்னாகம் பொலிஸாரால் எதிர்வரும் 19 ஆம் திகதி ஏழாலை மத்திய மகா வித்தியாலயத்தில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளதாக பொறுப்பதிகாரி ஜி.டி.ஆர் கங்கநாத் அறிவித்துள்ளார். அன்றைய தினம் காலை 6 மணிக்கு சுன்னாகம் நகரிலிருந்து மரதன் ஓட்டப்போட்டியுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து தலையணைச்சண்டை, முட்டியுடைத்தல், சங்கீதக்கதிரை, யானைக்கு கண் வைத்தல், மெதுவான சைக்கிளோட்டம், பலூன் உடைத்தல், கிறிஸ் மரம் ஏறுதல், கயிறு இழுத்தல், கரப்பந்தாட்டம் போன்ற பாரிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் இரவு இன்னிசை நிகழ்வும் இடம்பெறும். இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குள் வசிப்பவர்களாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பதிவினை மேற்கொள்ளவும்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியாக கரப்பந்தாட்டம் (செற்றப்) போட்டிகள் நடத்தப்படவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு மைக்கல் விளையாட்டு கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

இப்போட்டியில் இராணுவம், பொலிஸ், அணிகள் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

# கரப்பந்தாட்டப்போட்டி

(கரவெட்டி)

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகம் நடாத்தும் மின்னொளியிலான 5 பேர் கொண்ட கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங் கள் அன்றையதினம் போட்டியில் கலந்து கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

# கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிக்கு பதிவு செய்வதற்கான அறிவித்தல்

(கரவெட்டி)

தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் மே மாதம் 8,9,10 ஆம் திகதிகளில் கொழும்பு ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் பங்குபற்றவுள்ள பாடசாலை விளையாட்டுக் கழகங்கள், தனி வீரர்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும்.

இதற்கமைய யாழ். மாவட்ட செயலக மெய்வல்லுநர் சங்க செயலாளர் கே. சுதாகரனுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும்.

அத்துடன் யாழ். மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் நடைபெறவுள்ளதனால் அப்போட்டிகளுக்கு விண்ணபப்படிவத்தை பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

# சரசாலை பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான நூலகப்பிரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தில் சிறுவர்களுக்கென தனியான நூலகப்பகுதி இம்மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் மத்தியில் வாசிப்பு திறன், கலைத்திறன் என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடனும் அவர்கள் தமது ஓய்வு நேரத்தினை பயனுள்ளதாக்கவும் இப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியைப் பயன்படுத்தும் சிறுவர்கள் மத்தியில் மாதாந்தம் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ-3-29)

# கண்காட்சியும் விற்பனையும்

சமுர்த்தி மற்றும் வாழ்வு எழுச்சி கிராம புத்தாண்டு கண்காட்சியும் விற்பனை சந்தையும் இன்று செவ்வாய்க்கிழமை, நாளை புதன்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை குருநகர் தொடர்மாடி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ் .சிவஸ்ரீ ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# வடக்கின் அபிவிருத்தியை சிலரால் சகித்துக்கொள்ள முடியவில்லை

## அமைச்சர் றிசாத் கூறுகிறார்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 6 பல நோக்கு கூட்டுறவு சங்க கடைகளின் செயற்பாடுகளை வலுப்படுத்துவதன் மூலம் பொதுமக்களின் பொருட் கொள்வனவில் சாதகமான தன்மையினை அதிகரித்துக் கொள்ள முடியும். அதற்காக விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு முல்லைத்தீவு கூட்டுறவு சங்க அதிகாரிகளுக்கு கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 47 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட முத்தையன் கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கிராமிய வங்கி என்பவற்றுக்கான புதிய கட்டடத்தை திறந்த வைத்து உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இன்று வடக்கில் இடம்பெறும் அபிவிருத் திளை சகித்துக்கொள்ள் முடியாத சில சக்திகள் அபிவிருத்திகளுக்கு எதிராக வடக்கில் எதுவும் இடம்பெறுவதில்லை என்று கூறுகின்றனர். இவ்வாறானவர்கள் எமது நாட்டின் நற் பெயருக்கு தொடர்ந்தும் அபகீர்த்தியினை சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்பவர்களே என்று கூறினார்.

அதேவேளை எதிர்காலத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தொழில் வாய்ப்புக்கான வழிகாட்டல்களை வழங்குவதற்கும் திட்டம் இடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். மீள் குடியேறியுள்ள மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் எனில் அதற்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் பாதைகள், மின்சாரம், நிர்வாக கட்டிடங்கள், சந்தைக் கட்டிடங்கள் என்பன பல இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படுகின்றன. பனை அபிவிருத்தி சபையின் கீழ் 8 கூட்டுறவு கடைகள் தமது பணியினை ஆரம்பித்துள்ளன.

எமது வன்னி மாவட்ட மக்கள் கடந்த காலத்தில் அனுபவித்த துன்பங்கள், அழிவுகள் என்பன மீண்டும் ஏற்பட்டுவிடக்கூடாது. அதனை ஏற்படுத்துவதற்கென சில சக்திகள் செயற்படுகின்றன. எமது மக்களிடம் இழப்ப தற்கு ஒன்றுமில்லை.

எமது மாணவ சமூகத்திற்கு சிறந்த கல்வியினை வழங்க வேண்டியுள்ளது. அதனை திட்டமிட்டு வழங்க வேண்டும். பாடசாலைகள், புதிய கட்டிடங்கள் என்பன தற்போது திறக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் மூலம் எமது மாணவ சமூகத்தின் நெறியான வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டிய தேவையுள்ளது. சமூக சீரழிவுகளை கற்ற சமூகம் ஒன்றை தோற்றுவிப்பதன் மூலம் மட்டுமே ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்றும் அவர் கூறினார். (அ)

# நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை- வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக பீ. ஜெயவிந்தன், செயலாளராக கா. ஜெயராஜசிங்கம், பொருளாளராக க. சந்திரராஜா, உபதலைவராக மு. ஜெஸ்லிபாலா, உபசெயலாளராக ந. விஜிகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

# நீதிமன்றத்தால் அபராதம்

பெண்ணைப் பேசி மனக்குலைவு அடையச் செய்த நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் 7 நாட்கள் கட்டாயச் சிறைத் தண்டனையும் விதித்து யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மா. கணேசராசா தீர்ப்பளித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் குருநகர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, குருநகர் பகுதியிலுள்ள பெண்ணொருவர் தன்னை அயல் வீட்டுக்கார நபர் ஒருவர் தவறான வார்த்தைகளால் பேசி மனதை பாதிப்படையச் செய்துள்ளார் என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பெண்ணைப் பேசிய நபரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் கட்டத் தவறின் ஒரு மாத காலச் சிறைத் தண்டனையும் ஒரு வாரம் கட்டாயச் சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (அ-6)

# மகாபொல நிதியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல நிதியை அதிகரிப்பதற்கு தம்மாலான இயன்றளவு அனைத்து முயற்சிகளையும் எடுப்பதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியுள்ளார்.

கண்டி கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வரும் 265 ஆவது மகாபொல கண்காட்சியின் இரண்டாவது நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சில வருடங்களுக்கு முன்னர் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையிலும் அதன் பின் தொடர்ச்சியாகவும் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றவர்களுக்கு மட்டுமே அன்று புலமைப்பரிசில் நிதியுதவி வழங்கப்பட்டது.

ஏனைய மாணவர்களுக்கு வங்கிக்கடன் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் மறைந்த அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் திட்டத்தின் மூலம் வங்கிக் கடனுக்குப் பதிலாக மகாபொல புலமைப்பரிசில் திட்டம் முன்வைக்கப்பட்டது. இதன் காரணமாக இன்றுவரை சுமார் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து வந்துள்ளனர்.

ஆனால் தற்போது வழங்கப்படும் இத்தொகை மிகச்சிறிய தொகையாக இருப்பதன் காரணமாக பல்கலைக்கழக மாணவர்கள் பொருளாதார ரீதியான கஷ்டத்திற்கு உள்ளாகிவருவதை அவதானிக்க முடிகிறது. எனவே, மகாபொல புலமைப் பரிசில் தொகையை அதிகரிக்க வேண்டும். அப்படி அதிகரிக்க ஏதும் வழிவகைகள் உண்டா எனத் தேடிப் பார்க்கின்றோம். இது விடயமாக நாம் எம்மாலான இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அது பயனளிக்காத பட்சத்தில் வங்கிக் கடன் போன்ற ஒரு நிதியியல் ரீதியான திட்டம் ஒன்றைக் கொண்டு வரவும் சிந்தித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)



பொலிஸ் திணைக்களத்தின் புதுவருட நிகழ்வுகள் நேற்று முன்தினம் கொழும்பு பார்க் மைதானத்தில் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நடைபெற்ற காட்சி.......

# மீள்குடியேற்றப்பட்ட எமக்கு வாழ்வாதார உதவி கிடைக்கவில்லை

## மக்கள் முறைப்பாடு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அரியாலை, நாவலடி, பூம்புகார், மணியம் தோட்டம் ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் எந்தவித உதவிகளும் தமக்கு வழங்கப்படவில்லை என குற்றம் சாட்டியுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே மேற்குறிப்பிட்ட பகுதி மக்கள் குற்றம் சாட்டினர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் காரணமாக எமது பிரதேசங்களை விட்டு வெளியேறி பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தோம்.

இந்நிலையில் எமது சொந்த இடங்களில் எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் மீள்குடியேற்றப்பட்டோம்.

மீள்குடியேற்றப்பட்டு பல மாதங்கள் ஆகின்ற போதும் ஏனைய பகுதிகளில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவிகளை போன்று எமக்கு வழங்கப்படுவதில்லை.

இதுமட்டுமின்றி எமது பிரதேசங்களில் மண்அகழ்வில் பலர் ஈடுபட்டு வருவதனால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடல் நீர் எமது வாழ்விடங்கள் உள்ள பிரதேசங்களுக்குள் புகுந்துவிடும் அபாய நிலையில் நாம் உள்ளோம்.

அத்தோடு பலர் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸாருக்கு இது தொடர்பாக அறிவித்தால் வாகனம் இல்லை, ஆட்கள் இல்லை எனக் கூறுகின்றனர்.'

மேலும் கட்டாக்காலி கால்நடைகளை பலர் திருட்டுதனமாக பிடித்துச் செல்கின்றனர். இவ்வாறு எமது பிரதேசத்தில் பல சமூக விரோதச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (அ-6)

# சகல மருந்தகங்களிலும் குளிரூட்டி வசதி வேண்டும்

நாட்டிலுள்ள சகல மருந்தகங்களிலும் குளிரூட்டி பொருத்தப்பட்டிருப்பது அவசியம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார்.

சகலவிதமான மருந்தகங்களிலும் குளிரூட்டிகள் பொருத்தப்படுவது அவசியமாகும். அதன்மூலமே மருந்துகளின் தரத்தை பேண முடியும் என்று மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

குளிரூட்டி வசதிகள் இல்லாத பட்சத்தில் சில மருந்துகள் அவற்றின் நிறம், திறன், தரம் என்பவற்றை இழப்பதுடன் பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய நிலையும் உருவாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

குளிரூட்டி வசதிகளின்றி திறக்கப்படும் மருந்தகங்களை சுகாதார அமைச்சு தடை செய்யவுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (அ)

# பூநகரி மகா வித்தியாலய புனரமைப்பு பணிகள்



(பூநகரி)

போர் நடவடிக்கை காரணமாக முற்றாக சேதமடைந்து இடிபாடுகளுடன் காணப்படும் பூநகரி மகா வித்தியாலயப் புனரமைப்புக்கான அடிக்கல் நாட்டு விழா யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது.


இம் மகாவித்தியாலயத்தினை புனரமைப்பு செய்வதற்கு ஜரிஸ் குடியரசின் தனவந்தன் (றயின் கதெல்) RAYN CATHEL என்பவர் ஒரு கோடி 30 இலட்சம் ரூபா செலவிடவுள்ளார்.

இக்கட்டிடத் தொகுதியில் விஞ்ஞான கூடம், நூலகம் உள்ளடங்கலாக 36 வகுப்பறைகள் கொண்ட மூன்று மாடிக் கட்டமாக அடங்கவுள்ளன.

இவ் அடிக்கல் நாட்டு விழாவில், 661 ஆம் படைப்பிரிவுத் தளபதி கேணல் பொன்னம்பெருமா, பாடசாலை அதிபர் இ.பாலச்சந்திரன், பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் சி.யோகநாதன், பழைய மாணவர் சங்கச் செயலாளர் பொன் .தில்லை நாதன், கிராம சேவை அலுவலர் ம.இராசகோபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

துரித கதியில் இப் புனரமைப்பு வேலைகள் நிறைவு செய்யப்பட்டு செப்டெம்பர் மாதம் இக்கட்டத் தொகுதி பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

(அ-84)



கிளிநொச்சியிலுள்ள பொறிக்கடவை அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் வேள்வி திருவிழாவின்போது அங்கு வந்த பறவைக் காவடியினைப் படத்தில் காணலாம்.

(படம்:- பூநகரிச் செய்தியாளர்)

# புத்தாண்டுச்சந்தை

புத்தாண்டினை முன்னிட்டு கிளி/கரைச்சிப் பிரதேச சபை முன்றலில் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் வாழ்வெழுச்சிப் புத்தாண்டு சந்தை இடம்பெறவுள்ளதாக மேலதிக மாவட்ட செயலாளர் செ. ஸ்ரீநிவாஸன் அறிவித்துள்ளார். பிரதேச உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் நுகர்வோருக்கு மலிந்த விலையில் புத்தாண்டுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வழியேற்படுத்தி கொடுத்தல் ஆகிய நோக்கங்களுக்கு அமைவாக இப் புத்தாண்டுச் சந்தை இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)



(சி/6325)

# கலட்டி ஐக்கிய வி.கழகத்தின் புதுவருட விளையாட்டு விழா

கலட்டி ஜக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் புது வருட விளையாட்டு விழா -2012 எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு கலட்டி ஜக்கிய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்

இவ் சிறுவர்களுக்கான விளையாட்டு விழாவில் ஆண், பெண் இருபாலாரும் பங்கேற்கலாம்.

இதில் 6 வயதுக்குட்பட்டோர் பங்கேற்கும் நிகழ்வில் பழம் பொறுக்குதல் ,போத்தலில் நீர் நிரப்புதல், பலூன் உடைத்தல் ஓட்டப்போட்டி, தவளைப் பாய்ச்சல், வினோத உடை என்பன இடம் பெறும்

6 வயது தொடக்கம்12 வயதுக்கு இடைப்பட்ட விளையாட்டுக்களில் ஓட்டப்போட்டி, பலூன் உடைத்தல், கரண்டியில் தேசிக்காய் வைத்து ஓடுதல் ,செம்பு தலையில் வைத்து ஓடுதல் ,பணிஸ் சாப்பிடுதல், வினோத உடை ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

ஆண்களுக்கான போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டப்போட்டி, 400மீற்றர் ஓட்டப் போட்டி , அஞ்சல் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி (காலை 6 மணிக்கு ஆரம்பமாகும்) கயிறு இழுத்தல், சங்கீத கதிரை, வினோத உடை என்பன நடைபெறும். பெண்களுக்கான போட்டியில் கயிறு இழுத்தல், சங்கீத கதிரை ,100மீற்றர் ஓட்டப்போட்டி என்பன இடம் பெறும் என ஏற்பாட்டு குழு அறிவித்துள்ளது.

(அ-2)



(சி/6327)


# ஸாந்நித்யத்தை உணர்தல்



## ஆன்மீகம் 30

நம் மனதை எப்படிக் கையாள்வது? எப்படி நிகழ்கணத்தில் இருப்பது? எப்படி நன்றியுடனும், சந்தோசமாகவும் இருப்பது? இதை நாம் கற்றுக் கொள்ளவில்லை. இது மிகவும் துரதிர்ஷ்டமான விடயமாகும் அதற்கென்ன தீர்வு? இங்குதான் நாம் பொதுவாக வாழ்க்கையை நிர்வகிக்கும் அடிப்படைக் கொள்கையின் இலக்கணத்தை இழந்து விட்டோம். நம் உடம்புக்கு எதிர்மறையான தீய உணர்ச்சிகளைவிட அமைதியின், பேரானந்தத்தின் அதிர்வுகளைக் கிரகித்து அதிக காலம் வைத்துக்கொள்ளும் தன்மை அதிகம் உண்டு. ஏனெனில், நல்லுணர்வுகள்தான் நம் உள்ளத்தின் மையம். ஒரு அணுவின் வடிவமைப்பில் புரேட்டன்களும், நியூட்ரான்களும் மையத்திலும், எலக்ரான்கள் வெளிப்புறத்திலும் இருக்கின்றன. அதுபோல நம் வாழ்வில் நம் உள்மைய இருப்பு பேரானந்தத்தாலும்-நல்லுணர்வாலும், ஆனந்தத்தாலும் ஆனது. வெளிப்புறம் மேகம் போன்ற எதிர்மறைச்சக்திகளால் சூழப்பட்டிருக்கிறது. குறுகிய காலத்திலேயே சுவாசத்தின் துணைகொண்டு நம் உணர்வுகளைத் தவிர்க்கலாம். தியானத்தின் மூலமாகவும், சில சுவாச யுக்திகளாலும், நீ இந்த எதிர்மறை மேகங்களை அப்புறப்படுத்தலாம்.

எதிர்காலத்தில், யாரெல்லாம் அழுத்தத்திற்கு ஆளாகிறார்களோ, அவர்களுக்கு அபராதம் விதிக்கபடும் என்ற சட்டம் வருமென நினைக்கிறேன். இப்போது சாலையில் எச்சில் துப்புபவர்களுக்கு அபராதம் விதிக்கிறோம். எதிர் காலத்தில் உணர்ச்சிக்குப்பைகளுக்கு எதிரான சட்டம் வரலாம். மனச் சோர்வடைந்தால் பத்தாயிரம் ரூபாய் அபராதம். எந்த மாத்திரையும் விழுங்கக்கூடாது போய் தியானம்செய். சுவாசப்பயிற்சிசெய்து மன அழுத்தத்தைப் போக்கு- என்று உத்தரவிடப் படுவாய்.



மனச் சோர்வடைவதற்கு இங்கு என்ன இருக்கிறது? எப்படி இருந்தாலும், நீ இந்தக் கிரகத்தில் சில வருடங்கள் மிகச் சில வருடங்கள், இருந்தாகவேண்டும். இங்கிருக்கும் வரை மகிழ்ச்சியாய் இரு.

வாழ்க்கையிடம் உனக்கு அள்ளித் தருவதற்கு நிறையஇருக்கிறது. அதற்குச் சிறிதுநேரம் கொடுத்தால், ஆன்மா புத்துயிர் பெறுகிறது. உன்னிடமிருந்து புன்னகைக்காக ஆன்மா தாகத்துடனிருக்கிறது. நீ அதைக் கொடுத்தால், வருடம் முழுவதுமே புது சக்தியூட்டப்படுவதைப் போல் உணர்வாய். எந்தவொரு சக்தியாலும், உன் புன்னகையை எடுத்துவிட முடியாது. வாழ்க்கையில் எல்லோரும் வெற்றியுடனிருக்க விரும்புவார்கள். எது வெற்றி என்று தெரயாமலே, நீ வெற்றிகரமாக இருக்க விரும்புகிறாய். வெற்றியின் அடையாளங்கள் என்ன? நிறையப்பணம் வைத்திருத்தல், அது வெற்றியா? பணம் என்றால் வெற்றி என்று நீ ஏன் நினைக்கிறாய்? ஏனெனில், பணம் நீ விரும்பியதை செய்வதற்கான சுதந்திரத்தைத் தருகிறது. உங்களுக்கு வங்கிக் கணக்கில் நிறைய பணமிருக்கலாம். ஆனால், உங்களுக்கு வயிற்றுப்புண், இதயத்தில் அறுவைச் சிகிச்சை செய்தாக வேண்டும். அதைச் சாப்பிட முடியவில்லை; அதைச்செய்ய முடியவில்லை, இதைச்செய்ய முடியவில்லை. நாம் செல்வத்தை சம்பாதிக்க நமது ஆலோக்கியத்தைத் திரும்பப் பெற நமது செல்வத்தில் பாதியை இழக்க வேண்டியுள்ளது. இது வேடிக்கையாக இல்லை? இதுவா வெற்றி? இது மிக மோசமான கணக்கு!

தாங்கள் வெற்றிகரமானவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களைப் பார், அவர்கள் உண்மையிலேயே வெற்றியடைந்தவர்களா? இல்லை- அவர்கள் துன்பப்படுகிறார்கள்- அப்படியானால் வெற்றியின் அடையாளம் என்ன?

வெற்றியின் அடையாளம் அளவு கடந்த மகிழ்ச்சி, சரியா? அது நம்பிக்கை, கருணை, பெருந்தன்மை, யாராலும் தட்டிவிட (பிடிங்கிக் கொள்ள) முடியாத புன்னகை, உண்மையிலேயே மகிழ்ச்சியுடனிருத்தல், மிகுந்த சுதந்திரத்துடன் இருக்கமுடிதல், இவையே ஒரு வெற்றிபெற்ற மனிதரின் அடையாளங்கள்.

உனக்குள் சிறிது ஆழ்ந்து சென்று

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

மனதை அமைதியாக வைத்திருக்க சிறிதுநேரம் ஒதுக்குதல், உன் மனதில் சுமந்துகொண்டிருக்கும் நினைவு பதிவுகளை அழிக்க ஏதுவாகிறது. ஸாந்நித்தியத்தைஉணர்- உனது சகலத்திற்கும் ஆதாரமான, ஆன்ம உணர்வை தெய்வீகத்தை அனுப்புவதில் உணர்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 30


## ரேகைகளும் கிரகங்களும்

### சுக்கிர ஆதிக்கம்

மக்களில் பெரும்பான்மையோருக்குச் 'சுக்கிர ஆதிக்கம் இராது. உலகத்தைச் சதமென நம்புவோருக்கு சுக்கிரன் ஆதிக்கம் வேண்டும். பிராத்த கர்மத்துக்கு மீறி ஆசை வழிப்பட்டு. அவதிப்பட்டால், சுக்கிரமேட்டில் பள்ளமான இரேகைகள் பதிந்துவிடுகின்றன. இவை மாறுவதே கிடையாது. பிரார்த்த கர்மத்துக்கீடாய் எண்ணம் அல்லது செய்கை ஒத்துவந்தால், இரேகைக் குறி உண்டாவதில்லை. சுக்கிர ஆதிக்கம் உள்ளோருக்கு உலகம் நித்தியமா? அநித்தியமா என்ற கேள்வியில்லை. தேகதிடம், மனோபலம், உற்சாகம், சந்தோசம் இவை இயற்கையிலேயே அமையப் பெற்றிருப்பர். ஆசாபாசத்தை அளந்து காட்டுவதே சுக்கிரமேட்டின் அமைப்பு. சுக்கிர ஆதிக்கம் உள்ளோரைச் சந்திப்பதில் குதூகலம் உண்டாகும். அவர்கள் எப்பொழுதும்

**சக்தி**

சந்தோசமாயும் திருப்தியாயுமிருப்பர். அவர்களுடைய தைரிய வாசகம் புத்துயிரளிக்கும். மனிதருக்கு முக்கியமாயிருக்க வேண்டிய குணங்களாவன, இரக்கம், தயக்கம், தாட்சண்யம், அன்பு, பரோபகாரம் முதலியன. இவைகளையொருங்கே சுக்கிர ஆதிக்கமுள்ளவரிடம் காணலாம். மற்றவர்களை வசியப்படுத்த வேண்டிய நன்மையைச் செய்வதே பிரதான குணம். தேகாரோக்கியம் உள்ளவராதலால், நல்ல இரத் தோட்டம் உள்ளவர். குளிர்ந்த பார்வை உடையவர். அழகான சித்திரப் பதுமை போன்ற வனப்புள்ளவர். மற்றக் கிரக ஆதிக்கத்தில் ஏதேனும் குறைவு இருக்கும்; ஆனால், சுக்கிர ஆதிக்கருக்கு எவ்வித குறையும் தோன்றாது. தன்னலம் அல்லது தற்பெருமை என்பது கிடையாது. சுக்கிராதிக்கர் அழகான ஸ்திரீகளை நன்கு கவனிப்பர். அகன்ற கட்டை விரலிருக்குமாயின் தன்னடக்க முள்ளவராயிருப்பார். சுக்கிராதிக்கர் புருஷராயினும் பெண் வடிவமுள்ளவர். புருஷர்களில் சிறந்த மிக்க அழகு குரு ஆதிக்கருமுண்டு. புருஷர்களே உலக விவகாரங்களில் போரிடுந்தன்மையர்; ஸ்திரீகளே நிறைந்த அன்பும் இரக்கமுமுள்ளவர்கள். ஆகையால், சுக்கிராதிக்கமுள்ள புருஷர்களை முற்றிலும் பெண்களின் குணத்தோடு ஒப்பிட்டுச் சொல்லுவதற்கில்லை. புருஷர்கள் காதலிக்கலாம். ஆனால், பெண்களுக்கோ தெய்வீகமான கனிந்த காதலுண்டு. எனவே, சுக்கிராதிக்கர் ஸ்திரீ வடிவத்தில் ஒப்பிடத்தக்கவரன்றி செய்




கையில் ஒப்பிடத்தக்கவரல்லர். புருஷர்கள் சுதந்திரமாய் விளங்குவதால், பல ஸ்திரீகளால் மோகிக்கப்பட்டு ஆரோக்கியதத்தையும் அழகையும் இழந்து விடுவர். ஸ்திரீகளுக்குச் சுக்கிராதிக்கம் ஏற்படில், புருஷர் களுக்குரிய குணமும் நடையு மிருக்காது. சுக்கிராதிக்கமுள்ளவர்கள் கை விரல்கள் மிருதுவாயும், கை சங்கு வடிவமாயுமிருந்தால் பெண் தன்மையுள்ளவராயிருப்பர். அப்படியில்லையெனில், ஆசாபாசங்களில் துடிப்புள்ளவராவர்.

வலைக்குறியுள்ள சுக்கிரமேடிருக்குமாயின், அன்னாரின் எண்ணங்களும் செய்கைகளும் மின்சார வேகமுடையதாகும். மிக்க ஆவேசமுடையவராயிருப்பர். சுக்கிரமேடு மிருதுவாயிருப்பின் சித்திரக்காட்சி, பல வர்ணங்கள், புஷ்பங்கள் சங்கீதம் முதலியவைகளில் இஷ்டமுள்ளவராயிருப்பர். ஆனால், ஸ்திரீகளிடம் விசேட காதல் இராது. மிருதுவான சுக்கிர மேட்டில் வலைக்குறி காணப்படில் தணியாக் காதல் தாகமுடையவரா்வர். இவ்விதம் ஒரு ஸ்திரீயின் கையில் காணப்பட்டால், அந்த ஸ்திரீ புருஷர்களின் காட்சிக் குரியவராயிருப்பார்.

சுக்கிரமேட்டின் வலைக்குறி அழுத்தமாகப் பதிந்து செந்நிறத்தோடு இருக்குமாயின், அபாயமும் கேடும் விளைவதைக்குறிக்கும். சுக்கிரமேடு உயரமாயிருந்து, இது றப்பர் பந்தைப்போல் இருந்தால் சுக்கிராதிக்கத்தினாலுண்டான போகத்தை எல்லாம் அனுபவித்து, தாது சக்தியை முற்றிலும் இழந்திருப்பதைக் குறிக்கும்.

(தொடரும்)

# கூழர் ரக வாகன விபத்தில் இராணுவத்தினர் மூவர் காயம்



(மல்லாவி)

கூழர் ரக ஊர்தி வேகக் கட்டுப்பாட்டை இழந்து இராணுவ காவலரணுக்குள் புகுந்து இராணுவத்தினர் மீது மோதிய விபத்தில் மூன்று இராணுவத்தினர் படு காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 2 மணிக்கு பளை நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து தெரிய வருவது, கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஊர்தியே வேகக்கட்டுப்பாட்டை இழந்ததில் இராணுவ காவலரணுக்குள் புகுந்து இராணுவத்தினருடன் மோதி விபத்துக்குள்ளாகியதுடன் அருகில் இருந்த 2 வர்த்தக நிலையங்களுடன் மோதி வர்த்தக நிலையங்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த மூன்று இராணுவத்தினரும் பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக பளை நகரப் பொலிஸார் உடன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் கூழர் ரக ஊர்தி சாரதியை கைது செய்துள்ளனர். (அ-3-15)

# வன்முறைகள் ஓய்ந்துள்ள நிலை நல்லிணக்கத்திற்கான சந்தர்ப்பம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மிகச் சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

25 ஆண்டுகளாக இடம்பெற்ற வன்முறைகள் ஓய்ந்துள்ள நிலையில் இன சமூகங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள காயங்களை ஆற்ற சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடடுளளாா.

எனினும் தற்போதைய ஆளும் கட்சி இந்த சந்தர்ப்பததை சரியான முறையில் பயன்படுத்தி கொள்ள தவறியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க முனைப்புக்கள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாகவும் இவ்வாறான சந்தர்ப்பங்கள் அடிக்கடி கிடைக்காது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சந்திரிக்கா பண்டாரநாயக்காவினால் நிறுவப்பட்ட தென் ஆசிய கொள்கை மற்றும் ஆய்வு மத்திய நிலையத்தின் முதலாம் அமர்வுகள் இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்று வருகின்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

துணைக்கண்டத்தின் பிரச்சினைகள் குறித்து தமது நிறுவனம் ஆய்வு செய்ய உள்ளதாக தெரிவித்துள்ளார். இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இன்னும் பல கருமங்களை ஆற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அதிகார பகிர்வு தொடர்பான தமது யோசனை திட்டங்களை ராஜபக்ஷ அரசாங்கம் அமுல்படுத்த தவறியதாகவும் இதனால் தாம் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆதர வளிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தியாவுடனான உறவுகள் மிகவும் முக்கியமானவை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மக்களின் அபிலாசைகளை தீர்ப்பதன் மூலமே உண்மையான நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அரசியல் ரீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்த நாம் மேலும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென்பதையே மட்டக்களப்பில் இடம்பெற்ற நான்கு பெரியார்களின் உருவச்சிலை உடைப்பு சம்பவங்கள் வெளிக்காட்டியுள்ளன ஏன்று மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திகளை மேற்கொள்வதோடு அப்பகுதி மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதன்மூலமே உண்மையான நல்லிணகத்தை அடைய முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

மட்டக்களப்பில் நான்கு பெரியார்களின் உருவச் சிலைகள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளமையானது மிகவும் மோசமான நிலைமையை எடுத்துக் காட்டுகின்றது. இது நாம் மேற்கொண்டுவரும் நல்லிணக்க செயற்பாட்டை குழப்புவதற்காக முன்னெடுக்கப்படுகின்றதா? என்ற சந்தேகமும் எழுகின்றது.

நாட்டில் புரிந்துணர்வுடன் கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேலைத்திட்டங்கள் அவசியமாகும். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தியை மேம்படுத்துவதோடு அப்பகுதி மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையிலான தேசிய நல்லிணக்க வேலைத் திட்டமும் அவசியமாகும். அவ்வாறான நல்லிணக்க செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. குறிப்பாக இந்தியா இந்த விடயத்தை வலியுறுத்தி வருகின்றது.

எது எவ்வாறிருப்பினும் இவ்வாறான வேலைத்திட்டமொன்றை நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். அதனை உரிய முறையில் முன்னெடுத்து வடக்கு- கிழக்கு மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்ய நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும். இல்லாவிடின் எமது உள்நாட்டு விவகாரமானது சர்வதேச மயப்படுத்தப் படுவதுடன் நாம் பல சவால்களையும் எதிர் கொள்ள வேண்டி ஏற்படும் என்றார். (அ-2)

# கொழும்பு தேசிய நூதனசாலைக்கு புதிய பாதுகாப்பு கமராக்கள்

கொழும்பு தேசிய நூதனசாலையில் புதிய பாதுகாப்பு கமராக்கள் எதிர்வரும் வாரத்தினுள் பொருத்தப்படும் என தேசிய மரபுரிமைகள் அமைச்சின் வெயலாளர் காந்தி விஜயதுங்க தெரிவித்தார்.

தேசிய மரபுரிமை தொடர்பான அமைச்சர் ஜகத்பாலசூரியவின் பணிப்புரைக்கு அமைய இந்த புதிய கமரா தொகுதிகள் பொருத்தப் படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக நூதனசாலையில் அரும்பொருட்கள் களவாடப்பட்டமை தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் விசாரணைகள் விரைவில் நிறைவடையவுள்ளன.

இதேவேளை, நூதனசாலையின் பாதுகாப்பு தொடர்பில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழு அவசியம் ஏற்படும் பொழுது கூடி நூதனசாலையின் பாதுகாப்பு தொடர்பில் ஆராயும் எனவும் அமைச்சின் செயலாள்ர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# விவசாய பண்ணைப் போட்டிகள்

மஹிந்த சிந்தனைப் பிரகடனத்திற்கமைய நடைமுறைப்படுத்தப்படும் தேசிய விவசாய வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள பத்தாயிரம் பாடசாலைகளில் வினைத்திறன் மிக்க பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவும் விவசாய பொருளாதார நடவடிக்கையில் அதன்மூலம் மாணவர்கள் பங்களிப்பு வழங்கவும் பாடசாலைகளுக்கிடையே மாணவ சக்தியுடன் பொன்னான விளைச்சல் (சிசு சவியென் ரண் அஸ்வனு) என்ற தொனிப் பொருளில் விவசாய பண்ணைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டி வலய மட்டம், மாகாண மட்டம் தேசிய மட்டங்களில் நடத்தப்படவுள்ளது.

வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெறும் பாடசாலை மாகாணமட்டப் போட்டியிலும் மாகாண மட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெறும் பாடசாலை தேசிய மட்டப் போட்டியிலும் பங்குபற்ற முடியும்.

பசளை, வித்துக்கள் ஆகிய உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்கான பணத்தை கல்வித்தர விருத்தி உள்ளீட்டு நிதியிலிருந்து பெற முடியும். பண்ணையிலிருந்து கிடைக்கும் வருமானத்தை பாடசாலை அபிவிருத்திச்சங்க சுற்று நிருபத்திற்கமைவாக நடவடிக்கை எடுக்க முடியும். (அ)






பருத்தித்துறை கிழக்கு (ஜே/403) கிராம அலுவலர் பிரிவில் திவிநெகும (மனைப் பொருளாதார) விதைகள் மற்றும் பயிர்கள் நடும் தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலக திறன் அபிவிருத்தி அலுவலர் ஆர்.முரளிதரன் பயனாளி ஒருவருக்கு விதைகளை வழங்குவதையும் விருந்தினர்கள், பயனாளிகள் இணைந்து பணிமனை வளாகத்தில் விதைகளை நாட்டுவதையும் படங்களில் காணலாம்.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை ௧௦

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு


உக்ரேனில் சேறு, சகதி நிறைந்த பாதைகள் வழியே, நகரமறுக்கும் வண்டியை இழுத்துச் செல்லும் ஜேர்மனியப்படையினர்


சகதிப் பாதையில் சோவியத்தின் கவசவண்டிகள்

கர்சுன்-ஷிவ்சேன்க்கவ்ஸ்கி நடவடிக்கையின் போது, குறுகிய கால கட்டத்தில் எதிரியின் பெரும் படைத் திரட்டை சுற்றிவளைப்பதில் தந்திர நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சோவியத் துருப்புகள் உயர்வான கலையை வெளிப்படுத்தின. எதிரியின் பலத்த பதிலடிகளை முறியடிப்பதற்காக முற்றுகையின் வெளி வளையத்தில் துப்பாக்கிப்படை கோர்பஸ்களால் பலப்படுத்தப்பட்ட டாங்கிப்படைகளைப் பயன்படுத்தியது, இராணுவ கலையில் புதிய அம்சமாக அமைந்தது.

கர்சுன்- ஷிவ்சேன்க்கவ்ஸ்கி நடவடிக்கையோடு சேர்ந்து ஒரேநேரத்தில் லுட்ஸ்க்- ரோவ்னா நடவடிக்கையும் நீக்கபல்- கிரிவோய் ரோக் நடவடிக்கையும் நடத்தப்பட்டன.

லுட்ஸ்க்- ரோவ்னா நடவடிக்கை 1-வது உக்ரேனிய சேனையின் வலது புற துருப்புகளால் ஜனவரி 27 முதல் பெப்ரவரி 11 வரை நடத்தப்பட்டது. தென் பலேஸ்யே பிரதேசத்தில் காடுகளும் சதுப்பு நிலங்களும் இருந்ததும் எதிரியிடம் தொடர்ச்சியான தற்காப்பு போர்முனை இல்லாதிருந்ததும் சோவியத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகளின் தயாரிப்பு மற்றும் போக்கு மீது தாக்கம் செலுத்தின. நடவடிக்கைக்கான ஆயத்தம் மிகவும் குறுகிய காலகட்டத்தில் நடந்தது. விமானப்படையின் ஆதரவின்றி, குறைவான அளவு பீரங்கிப்படையைக் கொண்டே 1 கி.மீ. போர் முனையில் சுமார் 20 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள்தான் இருந்தன. எதிரியின் தற்காப்பு பிளக்கப்பட்டது. 1-வது, 6-வது குதிரைப் படை கோர்பஸ்கள் இந்நடவடிக்கையில் பெரும் பங்காற்றின. இவை சுற்றிச் செல்லும் தந்திரத்தின் மூலம் சார்னி பிரதேசத்திலிருந்து எதிர்பாரா விதமதாக லுட்ஸ்கை அடைந்தன. இதைக் கைப்பற்றி கோவெலை நோக்கிய மார்க்கத்தைத் துண்டித்தன. லுட்ஸ்க்- ரோவ்னா நடவடிக்கையின் விளைவாய் 1-வது உக்ரேனிய சேனையின் வலது புறத்துருப்புகள் லுட்ஸ்க், துப்னா, யாம்பொல், ஷெப்பெதோவ்கா ஆகியவற்றின் எல்லைகளை அடைந்து மேற்கு உக்ரேனில் ஜேர்மனியர்களின் படைத் திரட்டு முழுவதோடும் ஒப்பிடுகையில் ஆழந்த சுற்றிவளைக்கும் நிலையை மேற் கொண்டன. கெரில்லாப்படை வீரர்கள் சோவியத் துருப்புகளுக்கு பெரும் உதவி செய்தனர். ஜனவரி 15 முதல் பெப்ரவரி 3வரை மட்டும் இவர்கள் 7000 க்கும் மேற்பட்ட எதிரி போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் கொன்று குவித்தனர், 9 விமானங்கள், 62 டாங்கிகள் இன்னும் ஏராளமான இராணு வத்தளவாடங்களை அழித்தனர். லுட்ஸ்க்- ரோவ்னா நடவடிக்கையின் நிறைவேற்றம், ஹிட்லர் சேன்க்கவ்ஸ்கி படைத் திரட்டைப் பலப்படுத்த தனது 4-வது டாங்கிப் படையைப் பயன்படுத்தாதவாறு செய்தது. இது பிந்தையது முறியடிக்கப்படுவதில் கணிசமான பங்காற்றியது.






நாஜிகளின் பேடிமையை சுட்டிக்காட்டும் சோவியத்சுவரொட்டி

நீக்கபல்- கிரிவோய் ரோக் நடவடிக்கை 4-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளால் ஜனவரி 30 முதல் பெப்ரவரி 29 வரை நடத்தப்பட்டது. எதிரியை பிளவுபடுத்தி, பின் 4-வது உக்ரேனிய சேனையோடு சேர்ந்து எதிரியின் நீக்கபல் படைத் திரட்டைச் சுற்றிவளைத்து அழிக்கும் நோக்கத்தோடு அபோஸ்தலவோ திசையில் அருகருகேயிருந்த 46-வது, 8-வது கார்டு படைகளின் பக்கவாட்டுப் பகுதிகளால் பிரதான தாக்குதல் தொடுக்கப்பட்டது. நடவடிக்கையின் போது ஒரே நேரத்தில் ஆறு இடங்களில் துருப்புகள் தாக்குதலைத் தொடுத்ததால், இது பரவலான போர் முனையில் எதிரியைக் கட்டிப் போட்டு, பிரதான தாக்குதல் சம்பந்தமாக அவனைக் குழப்பியது. ஆனால், சேறும் சகதியும் நிறைந்து, சாலைகள் இல்லாத சூழ்நிலைகளில் செயற்பட துருப்புகள் போதுமான அளவு தயாராக இல்லாததால் தாக்குதலின் வேகம் குறைந்தது. பீரங்கிப்படையும் பின்னணியும் பின்தங்கிவிட்டன. எதிரியின் நீக்கபல திரட்டைச் சுற்றி வளைத்து ஒழிக்க முடியாததற்கு முக்கிய காரணம் இதுதான். என்றாலும் சோவியத் துருப்புகளால் தினேப்பரில் எதிரியின் தாக்கு முனையை அழித்து உக்ரேனின் முக்கிய தொழிற்துறைப் பிரதேசங்களாகிய கிரிவோய்ரோகையும் நீக்கபலையும் விடுவிக்க முடிந்தது.

(தொடரும்)

யுத்தத்தால் அனாதரவாகிவிட்ட குழந்தைக்கு உணவூட்டும் சோவியத் படையினர்



முற்றிலும் தகர்ந்து கற்றுகள்களாகிவிட்ட, தன் குடிமனையின் முன் சோவியத்தின் முதியவர்


நாஜிகளால் துன்புறுத்தப்படும் சோவியத்தின் இளம்பெண்

மாண்டுவிட்ட வீரனை விடுகிக்கப்பட்ட போர்க்களத்தில் காணும் உறவினரின் துயர்


# காணாமல் போன குணரட்னம் எப்போது இலங்கைக்கு வந்தார்

## எனக்கு எதுவும் தெரியாது என்கிறார் கோத்தபாய



(கொழும்பு)

முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் பிரேம்குமார் குணரட்னம் காணாமல் போன சிறிது நேரத்தில் அவரை கண்டு பிடிக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் றொபின் மூடி விசேட கோரிக்கை விடுத்தார்.

ஜே.வி.பியிலிருந்து பிரிந்த பிரேம்குமார் குணரட்னம் மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சியின் அங்கத்தவரான திமுத்து ஆட்டிகல ஆகியோர் கடந்த சனிக்கிழமை காலை முதல் காணாமல் போயுள்ளனர்.

அவுஸ்திரேலிய பிரஜையான பிரேம்குமார் குணரட்னம் என்பவர் இலங்கையில் காணாமல் போயுள்ளதாக அவுஸ்திரேலிய உயாஸ்தானிகர் திருமதி றொபின் மூடி தனக்கு அறிவித்ததாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்நபரை கண்டுபிடிக்குமாறு அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் என்னிடம் கோரினார். அந்நபர் இலங்கைக்கு வந்தமை எமக்கு அறிவிக்கப்படவில்லை. அவர் எப்போது இலங்கைக்கு வந்தார் என நான் உயர்ஸ்தானிகரிடம் கேட்டேன். அது தனக்குத் தெரியாதென அவர் கூறினார். இதுவரை தெரியாத ஒரு நபரை எப்படி கண்டுபிடிப்பது என நான் கேட்டேன்.

அப்படியான நபர் இருந்தால் அவரைப் பற்றிய சகல விபரங்களையும் தருமாறு நான் கூறினேன். அவரின் கடவுச்சீட்டு விபரம் இலங்கைக்கு வந்த திகதி, விசா விபரம் ஆகியவை எமக்குத் தேவை. அந்நபரின் புகைப்படமொன்றையும் நான் கோரினேன். அவை குறித்து தனக்குத் தெரியாதென உயர்ஸ்தானிகர் தெரிவித்தார் என அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் அவர் கூறினார். இது விசித்திரமான கதை. முதலில் அவர்கள் பிரேம்குமார் குணரட்னம் என ஒருவர் இலங்கையில் இருப்பதை மறுத்தார்கள். இப்போது அத்தகைய ஒரு நபர் இங்கு தங்கியிருப்பது குறித்து பேசுகிறார்கள்.

அவுஸ்திரேலிய பிரஜைகள் எப்படி இங்கு தொந்தரவு ஏற்படுத்த முடியும். அவர் அவுஸ்திரேலிய பிரஜையானால் அங்கு தங்கியிருக்க வேண்டும். இதைத்தான் நான் உயர்ஸ்தானிகரிடம் கூறினேன் என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

குணரட்னம் எனும் நபர் குறித்த வதந்திகள் சில மாதங்களுக்கு முன் வெளிவந்தன. அப்போது இது குறித்து அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் நான் நேரடியாக கேட்டேன். அப்படியான நபர் இலங்கைக்கு வந்தாரா எனக் கேட்டேன். அப்படி வந்தால் அவரின் விசா, கடவுச்சீட்டு விபரங்களைக் கேட்டேன். எமக்கு இவ்விபரங்கள் வழங்கப்படவில்லை. திடீரென குமார் குணரட்னம் காணாமல் போய் விட்டார் எனக் கூறப்படுகின்றது. இதில் அரசாங்கம் சம்பந்தப்பட்டதாக அவர் கள் கூறுகின்றார்கள் எனவும் அவர் கூறினார். (அ-2)

## கடத்தலின் சூத்திரதாரி யார்? கண்டுபிடியுங்கள்

(கொழும்பு)

பிரேம்குமார் குணரட்னம், திமுத்து ஆட்டிகல ஆகியோர் ஜே.வி.பியில் இருந்தனரா இல்லையா? என்பது பிரச்சினையல்ல. அனைத்து பிரஜைகளுக்கும் சுதந்திரமாக அரசியலில் ஈடுபடும் சுதந்திரம் இருக்க வேண்டும் என தாம் நம்புவதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் கடத்தப்பட்டதை ஜே.வி.பி.ஏற்றுக் கொள்ளாது. அரசாங்கத்திற்கு இந்த கடத்தல் சம்பவத்துடன் நேரடி தொடர்பு இல்லை என்றால் இந்த சம்பவத்தின் பின்னணியில் இருப்பது யார் என்பதை சாட்சியங்களுடன் ஒப்புவிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் எனவும் ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

இல்லையென்றால் இந்த சம்பவத்திற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பண்டிகைக்கான பொருட்கள் விநியோகம் சீரான முறையில்

### அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் பொருட்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாத அதேசமயம் நாடளாவிய ரீதியில் சீரான விநியோகம் முன்னெடுக்கப்படுமென உள்ளூர் வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

எதைக் காரணம் காட்டியும் காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட எந்தவொரு அத்தியாவசிய உணவுப் பொருளினதும் விலையதிகரிப்புக்கு இடமளிக்க முடியாதெனக் கூறிய அமைச்சர், நுகர்வோரிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிகைக் காலத்திற்கென பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களும் கடந்த பெப்ரவரி மாதம் முதலே நாட்டின் அனைத்து பாகங்களிலுள்ள சதொச, கோப்சிட்டி மற்றும் கூட்டுறவு கடைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஏனைய தனியார் கடைகளுடன் ஒப்பிடுகையில் இங்கு சற்று குறைவான விலையில் தரமான பொருட்களை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் பணிப்புரையின் பேரில் ப்ண்டிகைக் காலத்தில் பொதுமக்களுக்கு தரமான பொருட்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் சுற்றிவளைப்புக்களை முன்னெடுத்து வருகின்றனர்.

வியாபாரிகள் தரமான பொருட்களை விற்பனை செய்ய வேண்டுமென்பதுடன் வியாபாரத்தில் ஒழுக்கம் மற்றும் நியாயம் கடைப்பிடிக்க வேண்டுமென்பதற்காகவே இவ்வாறான சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

## நாட்டின் 120 செயலாளர் பிரிவுகளிலும் கித்துள் உற்பத்தி செய்ய நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 120 செயலாளர் பிரிவுகளில் கித்துள் உற்பத்திகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள சுதர்சினி அரங்கில் இரு தினங்கள் நடைபெற்ற கைத்தொழில் கண்காட்சியில் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறிகையில், கித்துள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவோரை மேலும் ஊக்குவிக்கும் முகமாகவே இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் கித்துள் உற்பத்தியை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான திறைசேரி 10 மில்லியன் ரூபாவையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 12.5 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கியுள்ளது என்றும் கூறினார்.

இக்கண்காட்சியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் பௌசி ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

(அ-2)

## வெள்ளைவானுக்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டும்

### ஜே.வி.பி. அழைப்பு

(கொழும்பு)

ஜனநாயகத்தின் பேரில் குமார் குணரட்னம் மற்றும் திமுத்து ஆட்டிகல ஆகியோரை விடுதலை செய்ய வேண்டும் என அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். பத்தரமுல்லையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாடுகளை கொண்டுள்ளவர்களை கடத்திச் செல்வது அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமற்ற அங்கமாக மாறியுள்ளது.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி சுதந்திரமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு பதிலாக அரசாங்கம் அடக்குமுறையை விரிவுபடுத்தியுள்ளது.

ஊடக செய்திகளின் படி கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 22 பேர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். அரசாங்கம் தனது அதிகாரத்திற்காக ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்து வருகிறது. வெள்ளை வான் கலரசாரம் நாட்டை உத்தியோகபூர்வ மற்ற சட்டமாக மாறியுள்ளது. இந்த வெள்ளை வான் விவகாரம் குறித்து அரசாங்கம் எவ்வித விசாரணைகளையும் நடத்துவதில்லை. இதற்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டும்.

இதேவேளை, முற்போக்கு சோசலிசக் கட்சியின் மாநாட்டை குழப்புவதற்காக இவர்கள் இருவரும் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என நாம் நம்பவில்லை எனவும் இந்த பிரச்சினையை இந்தளவுக்கு குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. (அ-2)

## பளை வி.கழகங்களின் கபடிப் போட்டி முடிபு

(சாவகச்சேரி)

பளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக்கழக அணியும் பெண்கள் பிரிவில் புலோப்பளை சென் பீற்றேஸ் விளையாட்டு கழக அணியும் சம்பியனாகியது.

இதில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சோரன்பற்று பராசக்தி விளையாட்டு கழக அணி மோதியது.

இதில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக்கழக அணி 39:32 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.


பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சோரன்பற்று பராசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளையாடிய புலோப்பளை சென் பீற்றேஸ் விளையாட்டுக்கழக அணி 44 : 23 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (அ-3-29)



# சிறுவர் அரங்கம்

66

## அக்னி பிரவேசம்



சரஸ்வதிபுர கிராமத்து நதிக்கரையில் ஒரு பெரிய அரசமரம் இருந்தது. அந்த மரத்தின் கீழ் பல ஆண்டுகளாக பிரேமானந்தர் என்ற யோகி தன் இரு சிஷ்யர்களுடன் அமர்ந்து கிராமத்தினருக்கு உபதேசம் செய்து வந்தார். தன்னுடைய சக்தியினாலும் பரோபகாரத்தினாலும் கிராமத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்று இருந்தார்.

ஒருநாள், அந்த கிராமத்திலிருந்த தசரதன் என்பவர் வீட்டிற்கு காலயோகி என்ற யோகி தன் சிஷ்யர்களுடன் விஜயம் செய்தார். மிகவும் சக்திவாய்ந்தவர் அவர் என்று கருதிய தசரதன் அவரைத் தன் வீட்டிலேயே விருந்தாளியாகப் பல தினங்களுக்குத் தங்கச் செய்தார். காலயோகி தனது மந்திர சக்தியினால் விபூதி வரவழைத்து வருபவர்களுக்கெல்லாம் அளித்தார்.

இது மிகவும் சக்திவாய்ந்த விபூதி. எனக்கு காற்றிலிருந்து விபூதியை வரவழைக்கும் சக்தி உண்டு. இது உங்கள் சகல நோய்களையும்; துன்பங்களையும் தீர்த்து வைக்கும். ஆனால் அரசமரத்தடியில் அமர்ந்துள்ள பிரேமானந்தாவை நம்பாதீர்கள்! அவன் ஒரு போலிச் சாமியார்! என்று வருபவர்களிடமெல்லாம் பிரேமானந்தரைத் தூற்றி வந்தார்.

காலயோகிக்கு அடைக்கலம் தந்திருந்த தசரதனுக்கு அதையெல்லாம் கேட்டு மிகுந்த சங்கடம் ஏற்பட்டது. ஏனெனில் அவருக்கு பிரேமானந்தர் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டு. பிரேமானந்தரைப் பற்றி காலயோகி அவதூறாகப் பிரசாரம் செய்வது தசரதனுக் குப் பிடிக்கவில்லை. ஆனால் காலயோகியிடம் அதை எடுத்துச் சொல்லவும் முடியவில்லை.

ஒருநாள் தசரதன் தானே நேராக பிரேமானந்தரிடம் சென்று நடப் பதையெல்லாம் எடுத்துரைத்தார். அதைக் கேட்ட பிரேமானந்தர் இப்படிப் பட்ட யோகிகளைத்தான் நான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். இந்தக் காலயோகியின் முகத்திரையைக் கிழிக்க விரும்புகிறேன். நீங்கள் ஏகாதசி தினத்தன்று உங்கள் வீட்டில் ருத்திர ஹோமத்திற்கான ஏற்பாடு செய்யுங்கள்.

உங்கள் வீட்டுத்தோட்டத்தில் ஒரு அக்னி குண்டம் வைத்து தீ மூட்டத் தேவையான பொருட்களைத் தயார் செய்யுங்கள். ருத்ரஹோமம் முடிந்தவுடன் தூயமனதுடன் கூடிய யோகி அக்னி பிரவேசம் செய்தால் அவரை நெருப்பு சுடாது. சகல சித்திகளும் அவருக்குக்கிட்டும். நான் அவ்வாறு அக்னிப் பிரவேசம் செய்யத் தயாராக உள்ளேன். காலயோகியும் தயாரா என்று கேளுங்கள் என்றார்.




தசரதன் விடயத்தைக் காலயோகியிடம் கூறியதும் இவ்வளவு தானா! அக்னிப்பிரவேசம் செய்தால் போகிறது என்று அலட்சியமாகக் கூறினார். ஆனால் மறுநாளே காலயோகி தசரதன் வீட்டிலிருந்து மாயமாக மறைந்து போனார்.

இதையறிந்த பிரேமானந்தர் நான் நினைத்தபடியே தான் நடந்திருக்கின்றது. காலயோகி ஒரு போலிச் சாமியார் என்பதை நிரூபித்து விட்டார். அவர் ஒரு போலி என்பது அவர் என்னைப்பற்றிப் பொய்ப் பிரசாரம் செய்தபோதே தெரிந்து விட்டது. தூயமனதுடைய உண்மையான யோகியின் மனதில் கர்வம், பொறாமை, ஆசை போன்ற துர்க்குணங்கள் தோன்றுவதில்லை. உண்மையான யோகி மற்றவர்களைத் தூற்றமாட்டான்.

உண்மையில் சொல்லப் போனால் அக்னிப்பிரவேசத்தைப் பற்றி நான் கூறியது ஒரு நாடகம்தான். காலயோகி உண்மையான யோகியாக இருந்தால் தைரியமாக அதற்கு உடன்பட்டு இருப்பான் அல்லது என்னுடன் நேருக்கு நேர் வாதம் செய்ய வந்திருப்பான் என்று கூறி முடித்தார். அவருடைய சொற்களால் மனம் தெளிவடைந்த தசரதன் அவரை வணங்கிவிட்டு வீடு திரும்பினார்.

## அம்புலி மாமா கதைகள்

## சரியான தீர்ப்பு



நகரக் காவலரான சங்குப்பிள்ளை ஒருநாள் மாலையில் ராஜ்யத்தின் தலைநகரை வலம் வந்து கொண்டிருக்கையில் கடைத் தெருவில் ஒரு இளைஞனை நான்கு நபர்கள் சூழ்ந்து கொண்டு அடிப்பதைப் பார்த்தார். உடனே அவர்களை அதட்டி மிரட்டிய சங்குப்பிள்ளை இவனை ஏன் அடிக்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர்கள் இவன் பரமன் கடையிலிருந்து ஒரு மூட்டை அரிசியைத் திருடிக்கொண்டு சென்றான் என்றனர்.

அவன் திருடியதாகவே இருக்கட்டும்! ஆனால் அவனை தண்டிக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை. அதனால் திருடனுடன் சேர்த்து உங்களையும் கைது செய்கிறேன் என்று ஐவரையும் கைது செய்த சங்குப்பிள்ளை அவர்களை மறுநாள் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தினார். கடைக்காரரான பரமனும் வரவழைக்கப்பட்டார்.

முதலில் திருடிய இளைஞனிடம் நீதிபதி, 'உன் பெயர் என்ன?' என்று கேட்டதற்கு 'என் பெயர் வீரன்!' என்றான். அவன் 'பரமன் கடையிலிருந்து ஒரு மூட்டை அரிசியைத் திருடியதாக உன்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அது உண்மையா?' என்று நீதிபதி கேட்டார். நீதிபதி அவர்களே! நான் செய்தது தவறா என்று நீங்களே முடிவு செய்யுங்கள்!


பரமன் கடையில் ஒரு வாரம் கூலி வேலை செய்தால் ஒரு மூட்டை அரிசி தருவதாகக் கூறினார். அதற்கு ஒப்புக் கொண்ட நானும் ஒரு வாரம் அவரிடம் வேலை செய்தேன். அதற்குப் பின்பு நான் கூலி கேட்ட போது பரமன் அவர் வீட்டுக் கிணற்று சுவர்கள் இடிந்திருப்பதாகவும் அவற்றை புதிதாகக் கட்ட வேண்டும் என்றும் கூறினார்.

முதலில் நான் ஒரு வாரமாகச் செய்த வேலைக்கு ஒரு மூட்டை அரிசி தர வேண்டுமென்றும் அதற்கு பின்பு அடுத்த வேலை செய்வதாகவும் நான் சொன்னேன். அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. அதனால் எனக்குச் சேரவேண்டிய ஒரு மூட்டை அரிசியை நானே எடுத்துக் கொண்டேன். உடனே பரமன் திருடன் திருடன் என்று கூச்சல்போட இந்த நால்வரும் என்னைப் பிடித்து அடிக்க ஆரம்பித்தனர் என்றான்.

வீரன் சொன்னதை கேட்ட நீதிபதி பரமனிடம் அவன் சொன்னது உண்மையா? என்று கேட்டார்.

அவன் என் கடையிலிருந்து அரிசி மூட்டையைத் திருடியது உண்மை! அதைத்தான் அவனே ஒப்புக்கொண்டு விட்டானே! என்றான்.

அதை விடு நீ வாக்களித்தபடி அவனுக்கு ஒரு மூட்டை அரிசியை ஏன் கொடுக்க மறுத்தாய்? என்று நீதிபதி வினவினார்.



நான் கொடுக்கமாட்டேன் என்று சொல்லவில்லை. கிணற்று வேலை முடித்த பின்பு தருகிறேன் என்றுதான் சொன்னேன் என்றான் பரமன். பரமா! நீ செய்தது தவறு தான். அதனால் நீ அவனுக்கு கூடுதலாகப் பணம் தர வேண்டும் என்றார் நீதிபதி.

பின்பு வீரனை நோக்கி நீ பலவந்தமாக அரிசி மூட்டையை எடுத்தது தவறு! ஆகவே பரமன் கொடுத்த கிணற்று வேலையை முடித்த பின்னர் ஒரு மூட்டை அரிசியையும் பரமனிடமிருந்து கூடுதல் பணமாகப் பத்து பொற்காசுகளும் பெற்றுக் கொள்! என்றார் நீதிபதி.

பின்பு வீரனை பிடித்து அடித்த நால்வரையும் நோக்கி பரமன் திருடன் திருடன் என்று கூவியவுடன் நீங்கள் ஓடிப்போய் வீரனைப் பிடித்தது தவறில்லை. ஆனால் அவன் உண்மையாகத் திருடனா என்பது தெரியாமல் அவனை நீங்கள் எப்படி அடிக்கலாம்? சட்டத்தை நீங்களே கையில் எடுத்துக் கொண்டதற்காக உங்களுக்கு ஒரு வாரம் சிறைத்தண்டனை அளிக்கிறேன்! என்றார்.

நீதிமன்றத்தில் கூடியிருந்தவர்கள் தீர்ப்பைக் கேட்டு கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

# யுத்தத்தின் போதான தனது பாத்திரத்தை மீளாய்வு செய்ய ஆரம்பித்தது ஐ.நா.சபை

## இலங்கை மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படலாம் என்கிறார் தமரா

இலங்கை யுத்தத்தின் கடைசி கட்டத்தில் தான் வகித்த பாத்திரம் குறித்து ஐ.நா. மீளாய்வு செய்ய ஆரம்பித்துள்ளது.


இலங்கை அதிகாரிகளால் தாருஸ்மான் அறிக்கை என அழைக்கப்படும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையில் சிபாரிசுக்கிணங்க இம்மீளாய்வு இடம்பெறுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தனக்கு இத்தகவல்கள் தெரியவந்ததாக ஜெனீவாவிலுள்ள ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தரப்பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை குறித்த தீர்மானத்திற்கிணங்க அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள 22 ஆவது கூட்டத் தொடரின்போது ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை விசேட அறிக்கையொன்றை சமர்ப்பிப்பார் என எதிர் பார்க்கப்படுவதாகவும் தமரா குணநாயகம் கூறினார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஐ.நா. அதிகாரிகள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பான அந்த அறிக்கையில் இலங்கை மீது குறைகூறப்படும் சாத்தியமுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை இவ்வருடம் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள நாடுகளின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக ஆராயும் கூட்டத்தில் இலங்கை குறித்து 3 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படலாம் எனவும் அவர் கூறினார். (அ-2)




இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கலாநிதி சிவசுப்பிரமணியம் மனித உரிமைகள் பாதுகாவலராக அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் அவருக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அழகியல் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளத்தில் உள்ள ஆசிரியர் வள மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# ஜனாதிபதியின் உருவத்திற்கு சென்னையில் செருப்படி

(சென்னை)

மட்டக்களப்பில் காந்தி சிலை சேதப்படுத்தப்பட்டதை கண்டித்து தமிழ்நாடு சென்னையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவ பொம்மைக்கு பொது மக்கள் செருப்பால் அடித்து தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மட்டக்களப்பில் உள்ள பூங்காவில் காந்தியின் சிலையை சமூக விரோதிகள் உடைத்து சேதப்படுத்தியதை கண்டித்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் கிருஷ்ணமூர்த்தி என்பவர் நேற்று முன்தினம் காலையில் செஞ்சி கூட் வீதியில் தனி ஆளாக திடீரென வீதி மறியலில் அமர்ந்தார்.பொலிஸார் இவரை அப்புறப்படுத்தினர்.

பின் மாலை 6.30 மணிக்கு திடீரென காந்தி சிலையை சேதம் பண்ணியமை தொடர்பாக இலங்கை அரசை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இந்திய அரசே கண்டனம் தெரிவி என்ற பனருடன் ராஜபக்ஷ உருவ பொம்மையை கயிற்றில் கட்டி காந்தி பஜார் வழியாக இழுத்து வந்தார்.

செஞ்சி கூட் வீதிக்கு வந்ததும் உருவ பொம்மையுடன் மறியல் செய்ய முயன்றார். பொதுமக்கள் சிலர் ராஜபக்ஷ உருவ பொம்மையை செருப்பால் அடித்தனர்.

இதற்குள் அங்கு வந்த பொலிஸார் கிருஷ்ணமூர்த்தியை செஞ்சி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அவர் கட்டி இழுத்து வந்த உருவ பொம்மையை ஆட்டோவில் ஏற்றி பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (அ-2)

# கோப்பாய் கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிபுகள்-2012

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகளை கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி. பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

*ஆக்கம் எழுத்து*

பிரிவு-1

ஜீ.சஸ்மிதா ( யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), அ.கிரித்திகா (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி),யோ. ஆகித்தியா (யா/ இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை)

*கட்டுரை வரைதல்*

பிரிவு-2

பீ. ச. றிஸ்பியா (யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை), அ.கதீசன் (அச்செழு சைவப்பிரகாச வித்தி), சி.நிரோஜன் (யா/கோப்பாய் மகா வித்தி)

பிரிவு-2

சி. தர்சிகா (யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), க. மோகனேஸ்வரன் (யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தி), து. சண்சியா (யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

*கட்டுரை வரைதல்*

*இலக்கிய நயம்*

பிரிவு-4

ந.சுபாஜினி (யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), கோ. டெனிஷ்ரன் (யா/ கோப்பாய் மகா வித்தி), அ.கிரிசாலினி (யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

பிரிவு-5

க.லாவர்ணியா (யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி),க.சுகன்யா (யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி),க.தர்சிகா (யா/ இடைக்காடு மகா வித்தி

*இலக்கணப்போட்டி*

பிரிவு-4

சி.தர்சினி (யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), ச.பொன்மாறன் ( யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), ந.நிலக்சிகா ( யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

பிரிவு-5

ஆ.சுஜேந்தினி (யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி),நா. நிசாலினி ( யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி), த.ஜெசிந்தா ( யா/ இடைக்காடு மகா வித்தி

*திறனாய்வு*

பிரிவு-5

சி.மதுரா (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி),த.நிதியா (யா/ இடைக்காடு மகா வித்தி

*குறுநாடக ஆக்கம்*

பிரிவு-4

ஞா.உசா (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ச.சாதனா (யா/கோப்பாய் மகா வித்தி, யோ. பிரசாந்தினி (யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி

பிரிவு-5

க.ஜெனனிக்கா (யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி),பி.மேரிலெபினியா (யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி),ம.வரதாஞ்சினி (யா/ இடைக்காடு மகா வித்தி

*கவிதை ஆக்கம்*

பிரிவு-4

ப.வானுஜா (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ப.தனுசியா (யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி), சி.டக்சியா (யா/ கோப்பாய் மகா வித்தி)

பிரிவு-5

த.உருத்திகா ( யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), சி.சஞ்சீவன் (யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), சி.சிந்துஜா (யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி)

*சிறுகதை ஆக்கம்*

பிரிவு-4

த.டிலக்சனா (யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தி), செ. வெவோகா(யா/ இடைக்காடு மகா வித்தி, வி.கஜன் ( யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி)

பிரிவு-5

மு. கீர்த்தனா ( யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி),லி.நிரோசனா (யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), ஆ.அபர்ணா (யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)

*வாசிப்பு*

பிரிவு-1

வ.திலிக்சனா (யா/ புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை), க.அபிசா (யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி, உ.சாலினி (யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி)

பிரிவு-2

கோ. விதுஷன் (யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி), ப.வான்நிலவன் (யா/ மகாஜன வித்தி), து. லக்சாயினி (யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி)

*ஆக்கத்திறன் வெளிப்பாடு*

பிரிவு-1

இ.நாகநர்த்தனன் (யா/ புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை), த.யசோபிகா (யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), சி.நிலாணி (யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி

*பேச்சு*

பிரிவு-1

செ.சரணியா (யா/புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை), அ.மகிழினி ( யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்),சி.பிரணவி (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), பூ. ஆரணி (யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

பிரிவு-2

அ.சங்கீதா (யா/புத்தூர் சோமஸ்கந்த வித்தி),சோ. டேலக்சன் (யா/புத்தகலட்டி விஸ்ணு வித்தியாலயம்), டோ. றொர்சானி (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி)

பிரிவு-3

வி.நிரோஜனா ( யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்),தே. சுலக்சனா (யா/ கோப்பாய் நாவலர் வித்தி), சி. இலக்சனா (யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தி)

பிரிவு-4

வே.ஜந்துஜா (யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), பு.மிதுசா (யா/புத்தகலட்டி விஸ்ணு வித்தியாலயம்),செ. தர்சனா (யா/ புத்தூர் சோமஸ்கந்த வித்தி)

பிரிவு-5

த.துசாரா ( யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி), ஜெ.டென்சி ( யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி),கு.நேருஜன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி)

*பாவோதல்*

பிரிவு-1

க.பார்மிலா ( யா/ இடைக்காடு மகா வித்தி, மு.லதுசா ( யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்),த.கவிதரன் (யா/ கோப்பாய் நாவலர் வித்தி)

பிரிவு-2

லோ. அபிசன்(யா/கோப்பாய் மகா வித்தி, கோ. சுஜானி ( யா/ இடைக்காடு மகா வித்தி), சு.திபனா ( யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயழ்)

பிரிவு-3

க.திவ்யா (யா/புத்தூர் சோமஸ்கந்த வித்தி. சி.மயூரன் (யா/ கோப்பாய மகா வித்தி), ஈ.சிறிஜெனா (யா/ கோப்பாய் நாவலர் வித்தி

பிரிவு-4

க.சுபர்ணா ( யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தி), செ. தயானா (யா/ புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி), ஸ்ரீ.விஸ்ணுஜா (யா/ இடைக்காடு மகா வித்தி),உ.துளசிகா (யா/ கோப்பாய் மகா வித்தி

பிரிவு-5

ச.சதீஸ்யா (யா/ இடைக்காடு மகா வித்தி

*இசையும் அசைவும்*

பிரிவு-1

க.சங்கவி (யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), க.டிலக்சனா ( யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), ஜெ. றோயல் மனுசியா (யா/ கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை)

*இசை தனி*

பிரிவு-2

கா. மதுரா ( யா/ நீர்வேலி றோ.க. த.க. பாடசாலை), சி. விஜித்தா (யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி), சி. சரத்வாஜ் (யா/ புத்தகலட்டி விஸ்ணு வித்தியரலயம்)

பிரிவு-3

ஜீ. தரணிசிகா (யா/ இடைக்காடு மகா வித்தி),ற.கீர்த்திகா (யா/ நீர்வேலி றோ.க. த.க. பாடசாலை),கு.மேரி ஜென்சிகா ( யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

(தொடரும்)

# கலாசார கௌரவ பட்டங்களை கலாசார அமைச்சு மாத்திரமே வழங்க முடியும்

## அமைச்சின் உயர் அதிகாரி தகவல்

கலாசாரம் தொடர்பான கௌரவ பட்டங்களை கலாசார அமைச்சினால் மாத்திரமே வழங்க முடியும் என அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கலாசாரம் தொடர்பான கௌரவ பட்டங்களை வழங்குவதற்கு எந்தவொரு அமைப்பிற்கும் அமைச்சினால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை என கலாசார அமைச்சின் செயலாளர் விமல் ரூபசிங்க தெரிவித்தார்.

இதனால் கலாசாரம் தொடர்பான கௌரவ பட்டங்கள் அங்கீகாரமற்ற அமைப்புக்களினால் வழங்கப்படுவது பாரிய குற்றமாகும் என அவர் குறிப்பிட்டார்.

எனினும் அங்கீகாரமற்ற அமைப்புக்களினால் கலாசாரம் தொடர்பான கௌரவ பட்டங்கள் வழங்கப்படுவது தொடர்பில் அமைச்சிற்கு இதுவரை எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை.

அவ்வாறு முறைப்பாடு எதுவும் கிடைக்கப் பெற்றால் இது தொடர்பில் ஆராய முடியும்.

கலாசார அமைச்சினால் கலாபூஷணம், சாஹித்ய மற்றும் ரத்னதீப உள்ளிட்ட சில கௌரவ பட்டங்கள் மாத்திரமே வழங்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சில அமைப்புக்களினால் கலாநிதி, தேசமான்ய, தேசகீர்த்தி மற்றும் கலாஜோதி உட்பட பல கௌரவ பட்டங்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வடமாகாண கல்வி வலயங்களில் மும்மொழி பயிற்சி நிலையங்கள்

## ஆளுநர் தெரிவிப்பு

வடமாகாணத்திலுள்ள 12 கல்விவலயங்களில் மும்மொழி பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

அரசாங்கத்தின் மும்மொழி கொள்கையை அமுல்படுத்தும் நோக்குடனே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதற்கென கல்வி வலயம் ஒன்றுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபா வீதம் 60 இலட்சம் ரூபா நிதியை செலவிட திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் பூரண ஒத்துழைப்புடன் வடமாகாண கல்வி அமைச்சின் ஊடாக இந்தத் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

வடக்கிலுள்ள 12 கல்வி பணிப்பாளர்களின் அலுவலகங்களுடன் இணைந்ததாக இந்த மும்மொழி பயிற்சி நிலையங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

சகல வசதிகளையும் கொண்டதாக அமையவுள்ள இந்த பயிற்சி நிலையங்களின் மூலம் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு மும்மொழி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதலாவது பயிற்சி நிலையத்தை இந்த மாத இறுதிக்குள் திறந்து வைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் வடமாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சிலை உடைப்பு விவகாரத்தில் கிழக்கு மாகாண உறுப்பினருக்கு தொடர்பு

(மட்டக்களப்பு)

சிலை உடைக்கப்பட்ட சம்பவங்களுடன் கிழக்கு மாகாண சபை உறுப்பினருக்கு தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் நடத்திய ஆரம்பகட்ட விசாரணைகளின் போது குறித்த சிலை உடைப்பு சம்பவங்களுடன் கிழக்கு மாகாண சபையின் சில உறுப்பினர் ஒருவர் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்திய தேசத் தந்தை மகாத்மா காந்தி மற்றும் சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன் பவல் உள்ளிட்ட சிரேஷ்ட தலைவர்களின் உருவச் சிலைகள் அண்மையில் மட்டக்களப்பு நகரில் தாக்குதலுக்கு இலக்கானது. இத்தாக்குதல் சம்பவம் குறித்து அரசாங்கம் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

# எவற்றை அமுல்படுத்த போகிறீர்கள்; விளக்கம் கேட்கிறது மு.காங்கிரஸ்

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு இறுதி அறிக்கை பரிந்துரைகளில் எவற்றை அமுல்படுத்த முடியும் என்பதனை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

ஆணைக்குழுவினால் பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் எவை எல்லாம் அமுல்படுத்தப்படும் என்பதனை அரசாங்கம் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுமெனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். அனைத்து பரிந்துரைகளையும் அமுல்படுத்த முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளதாகவும் அவ்வாறு என்றால் அமுல்படுத்த முடியாது என அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டுமென்பதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிஸின் நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியினால் கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றினால் இந்த நாட்டில் சிறுபான்மை மக்கள் வாழ முடியாத நிலைமை ஏற்படும் என ஹசன் அலி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)




★ 1658- ஊர்காவற்றுறை கோட்டைடச்சுக்காரரினால் கைப்பற்றப்பட்டது.

★ 1710- காப்புரிமை பற்றிய முதலாவது சட்ட விதிகள் பிரித்தானியாவில் வெளியிடப்பட்டன.

★ 1741- புருசியா ஆஸ்திரியாவை மோல்விடஸ் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் வெற்றி கண்டது.

★ 1790- ஐக்கிய அமெரிக்காவில் காப்புரிமம் பற்றிய விதிகள் எழுதப்பட்டன.

★ 1815- இந்தோனேசியாவில் டம்போரா மலை தீ கக்கியதில் பல தீவுகள் அழிந்தன. 71 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1821- கொன்ஸ்டண்டீனோபோலின் ஆயர் ஐந்தாம் கிரெகோரி துருக்கியர்களினால் தூக்கிலிடப்பட்டார்.

★ 1826- துருக்கியப் படைகளின் ஆக்கிரமிப்பை அடுத்து மெசோலோங்கி என்ற கிரேக்க நகரில் இருந்து 10 ஆயிரத்து 500 பேர் நகரை விட்டு வெளியேறினர். இவர்களில் மிகச் சிலரே தப்பினர்.

★ 1848- இங்கிலாந்தில் கிரேட் யார்மூத் நகரில். பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 250 பேர் உயிரிழந்தனர்.

★ 1864- முதலாம் மாக்சிமிலியன் மெக்சிக்கோவின் மன்னனாக முடிசூடினான்.

★ 1868- அபிசீனியாவில் அரோகீ என்ற இடத்தில் பிரித்தானிய மற்றும் இந்தியக் கூட்டுப் படைகள் தியோடர் மன்னனின் படைகளை வெற்றி கண்டன. 700 எதியோப்பியப் படைவீர்கள் உயிரிழந்தனர். இந்திய பிரித்தானியப் படையினரில் இருவர் மட்டுமே உயிரிழந்தனர்.

★ 1869- கியூபாவில் கியூபா புரட்சிக்கட்சி ஜொசே மார்ட்டீயினால் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1912- டைட்டானிக் பயணிகள் கப்பல் தனது முதலாவதும் கடைசியுமான பயணத்தை இங்கிலாந்தின் சௌதாம்டன் துறையில் ஆரம்பித்தது.

★ 1919- மெக்சிக்கோ புரட்சித் தலைவர் எமிலியானோ சப்பாட்டா அரச படையினரால் சுடப்பட்டார்.

★ 1963- ஐக்கிய அமெரிக்காவின் த்ரெஷர் என்ற நீர்மூழ்கி 129 பேருடன் காணாமல் போனது.

★ 1972- வியட்நாம் போர்: அமெரிக்க விமானங்கள் வடக்கு வியட்நாமில் குண்டுகளை வீசின.

★ 1979- டெக்சாஸ் மாநிலத்தில் விச்சிட்டா அருவியில் சுழற்காற்று தாக்கியதில் 42 பேர் உயிரிழந்தனர்.

★ 1991- இத்தாலியின் மொபி பிரின்ஸ் என்ற பயணிகள் கப்பல் லிவோர்னோவில் எண்ணெய் தாங்கி கப்பல் ஒன்றுடன் மோதியதில் 140 பேர் உயிரிழந்தனர்.

★ 1992- லண்டனில் பால்ட்டிக் எக்ஸ் சேஞ்சு என்ற கட்டடம் ஐரிஷ் குடியரசு இராணுவத்தினர் குண்டுவெடிப்பால் அழிந்தது.

★ 1998- அயர்லாந்து குடியரசுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையில் வட அயர்லாந்து குறித்த பெல்பாஸ்ட் உடன்பாடு எட்டப்பட்டது.

★ 2006- இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தில் மீராட் நகரில் வர்த்தகக் கண்காட்சி ஒன்றில் ஏற்பட்ட தீயில் 60 பேர் உயிரிழந்தனர்

### பிறப்புக்கள்

★ 1887- பெர்னாடோ ஹொசே, நோபல் பரிசு பெற்றவர் (இ.1971)

★ 1898- ஆபிரகாம் கோவூர், பகுத்தறிவாளர், உளவியல் வல்லுநர் (இ.1878)

★ 1917- றொபேர்ட் வூட்வார்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1979)

★ 1918- ஜோர்ஜ் அட்சன், சிட்னி ஒப்பேரா மாளிகையை வடிவமைத்தவர் (இ.2008)

★ 1927- மார்ஷல் நிரென்பேர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புக்கள்

★ 1585- பாப்பரசர், 13 ஆவது கிரெகரி (பி.1502)

★ 1688- பெர்னாவோ டி குவைறோஸ், இந்தியாவில் சமய போதகராக வந்த போர்த்துக்கல் நாட்டவர் (பி.1617)

★ 1931- கலீல் ஜிப்ரான், லெபனான் கவிஞர், ஓவியர் (பி.1883)

★ 1995- மொரார்ஜி தேசாய், இந்தியாவின் முன்னாள் பிரதமர் (பி.1896)

### சிறப்பு நாள்


★ இந்த நாளிற்கு ஒரு சிறப்பு இருக்கிறது. ஏப்ரல் 10 ஆனது வருடத்தின் 100 ஆவது தினம். இது பெப்ரவரி மாதத்தில் 29 நாட்கள் வரும் போது 101 ஆவது நாளாக இருக்கும்.



★ 1870- விளாடிமிர் லெனினின் பிறந்த தினம் (இ.1924)

# அதிசய உலகம்...

## சாதனை படைத்த மிக சிறிய கோழிமுட்டை



கோழி ஒன்று வெறும் 2 சென்ரிமீற்றர்கள் அளவில் இட்ட முட்டையானது மிகச்சிறிய முட்டை என்ற சாதனைக்கு சொந்தமாகியுள்ளது.

7.3 கிராம்களை கொண்ட இந்த முட்டை ஐந்து ரூபாய் நாணயத்தை விட சற்றே பெரிதாகக் காணப்படுகிறது. இம் முட்டையை உலகசாதனை புத்தகமான கின்னஸில் இடம்பெறச் செய்வதற்கான ஏற்பாடுகளும் இடம் பெற்றுள்ளன.

## ஒரு சொட்டு இரத்தமும் இன்றிப் பிறந்த குழந்தை




ஒலிவியா என்ற குழந்தை பிறக்கும் போது உடலில் ஒரு சொட்டு இரத்தமும் இன்றி பிறந்துள்ளமை விஞ்ஞான உலகையே அதிசயத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால் தற்போது பிறந்து ஆறு மாதங்கள் ஆகும் இக் குழந்தை வெளிறிய நிறத்திலேயே காணப்படுகின்றது. இக்குழந்தை பிறந்து இரண்டு மணி நேரங்கள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தது.

இதுபற்றி கருத்துதெரிவித்த 31 வயதான குழந்தையின் தாய். இரத்தம் இன்றி குழந்தை பிறந்ததை கேள்வியுற்றதும் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகியதாக தெரிவித்தார். எனினும் தற்போது குழந்தை ஆரோக்கியமாகவே காணப்படுகின்றது.


ஆனால் வைத்தியம் செய்த வைத்தியர்கள் ஏன் இவ்வாறு நிகழ்ந்தது என்று அறியாமல் குழம்பிப்போயுள்ளனர்.

## 6 ஆயிரம் வருடத்துக்கு முற்பட்ட எண்ணெய் உற்பத்தி இயந்திரம் கண்டெடுப்பு



தெற்கு அர்மீனிய நாட்டில் 6 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான எண்ணெய் உற்பத்தி இயந்திரத்தை தொல்லியல் துறையினர் கண்டறிந்துள்ளனர். இதற்காக உயிரிவேதியியல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தியுள்ளனர். இது பற்றி கலிபோர்னிய பல்கலைக்கழகத்தை சேர்ந்த கிரிகோரி ளர்ஷியன் கூறும் போது, உலகின் பழைமையான எண்ணெய் உற்பத்தி இயந்திரம் இது என கூறினார். இதற்கு அருகில் காய்ந்த நிலையில் காணப்பட்ட திராட்சை செடி ஒன்று காபன் டேட்டிங் முறையில் 6 ஆயிரம் வருடங்களுக்கு முந்தையது என கண்டறியப்பட்டது. இந்த கிராமத்தில் தொன்று தொட்டு எண்ணெய் உற்பத்தி செய்வது நடைமுறையில் இருந்து வருகிறது. பல இனத்தை சேர்ந்த மக்கள் ஒன்று சேர்ந்து இந்த இயந்திரத்தை உருவாக்கியுள்ளனர் என அவர் மேலும் கூறினார். மூன்று அடி ஒரு மீற்றர் விட்டம் கொண்ட அந்த வைன் உற்பத்தி செய்யும் இயந்திரம் திராட்சை விதைகளாலும் காய்ந்த திராட்சை செடிகளாலும் சூழப்பட்டுள்ளது. இது ஒரு குகையின் அருகில் அமைந்துள்ளது. ஏரெனி-1 என பெயரிடப்பட்ட இந்த குகையின் அமைவிடம் ஈரானை ஒட்டிய தெற்கு அர்மீனியாவிற்கு அருகில் அமைந்த சிறிய காகசஸ் மலை பகுதியில் உள்ளது. இவ்வாறு ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த வரும் 5500 வருடங்களுக்கு முன்பு உலகின் மிக பழைமையான தோலால் செய்யப்பட்ட காலணி இந்த குகைக்கருகே கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.


## உலகிலேயே உயரமான கண்ணாடிப் பாலம்



நிச்சயமாக இந்த கண்ணாடி பாலம் பலவீனமான இதயம் உள்ளவர்களுக்காக செய்யப்பட்டதல்ல என்கிறது மெயில் ஒன்லைன். சீனாவின் ஷாங்கியேஜி எனும் இடத்தில் உள்ள டியன் மென் மலைத் தொடரில் பாறைகளோடு ஒட்டியவாறு (Tianmen Mountain) கடல் மட்டத்திலிருந்து 4700 அடி உயரத்தில் புதிதாக கட்டப்பட்டிருக்கிறது இந்த கண்ணாடி பாலம். 200 அடி நீளமான இக்கண்ணாடி பாலம் யுன்மெங் பேரி எனும் மறுமுனை உச்சிக்கு செல்கிறது. இப்பாலத்தில் கால் வைத்து நடக்கும் கீழ்பகுதியும் இரு மருங்கிலும் பாதுகாப்புக்காக கட்டப்பட்டிருக்கும் சுவர் பகுதியும் முழுக்க முழுக்க கண்ணாடியினால் உருவாக்கப்பட்டது. பாதுகாப்பானது தான் என தெரிந்திருந்தும் பாலத்தில் கால் வைப்பவர்கள் நிம்மதியாக நடந்து செல்ல மாட்டார்கள். தப்பித்தவறி தலை குனிந்து கீழே பார்த்தால் விவகாரம் தான்.

போதாத குறையாக துப்புரவு பணியாளர்கள் இந்த கண்ணாடி பாலத்தை எந்தநேரமும் துடைத்து அடிக்கடி தூய்மைப்படுத்தியும் விடுகின்றார்களாம். இந்த பாலம் அமைந்திருக்கும் மலைத் தொடருக்கு சூட்டப்பட்டிருக்கும் Tiemen என்ற பெயருக்கு சொர்க்கத்தை அடையும் நுழைவாயில் என்று அர்த்தமாம். செல்வதற்கு யார் தயாராக இருக்கிறீர்கள்.

## நெருப்பினை உண்ணும் விசித்திர மனிதன்



பொதுவாக இதுவரையில் இரும்பு, சவர்க்காரம் கிரீஸ் மற்றும் பெற்றோல் இவைகளை உணவாக உட்கொள்ளும் விசித்திரமான மனிதர்களைப் பார்த்திருக்கிறோம். நெருப்பு தணல் கையில் பட்டாலே கை கொப்பளித்து விடும். உடைந்த டியூப் பல்ப் கையில் பட்டால் கையை கிழித்துவிடும். இவை இரண்டையும் சர்வ சாதாரணமாக தின்று தீர்க்கிறார் இந்த இந்திய இளைஞன்.

அம்புலி அபு இந்தியாவின் கோயம்புத்தூரை சேர்ந்த இளைஞன் சிறுவயதில் பள்ளிப்படிப்புக்கு முழுக்கு போட்ட அபு சாதனை செய்ய வேண்டும் என்ற தீயை தன்னுள் வளர்த்துக் கொண்டார்.

அதனால் ஏற்பட்டது தான் இந்த தணலையும் கண்ணாடி பல்புக்களையும் உண்ணும் பழக்கம். இச்சாதனையை சர்வ சாதாரணமாக செய்யும் இவர் தன்னால் உணவின் சுவையை அறிய முடியாது போய் விட்டது என்று வருத்தப்படுகிறார்.

## அந்தரத்தில் தொங்கும் நீர்




புவியீர்ப்பு விசை காரணமாக எப்பொழுதும் பொருட்கள் கீழ் நோக்கியே விழும். அவ்வாறில்லாமல் அந்தரத்தில் இருக்க வேண்டுமாயின் புவியீர்ப்பு விசைக்கு சமனான விசை எதிர்த்திசையில் வழங்கப்படவேண்டும்.

இவை விஞ்ஞானத்தின் மூலம் சாத்தியப்படக்கூடியவையாகும். அதே போல இங்கும் போத்தலினுள் உள்ள நீரை கீழே சிந்தாதவாறு தமது விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி நிறுத்துகின்றார்கள் நீங்களும் பார்த்துவிட்டு உங்கள் வீட்டில் உள்ளவர்களை ஆச்சரியப் படுத்துங்கள்.

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 14 :- நீரிழிவு நோயாளி தான் அணியும் கண்ணாடியின் லென்ஸை மாற்றிக் கொள்ளலாமா?**

பதில்:- சீனி அளவு அதிகரித்தால் பாதிக்கப்பட்டவரால் தெளிவாகப் பார்க்க முடியாது. இம்மாதிரிச் சூழ்நிலையில் ஒருவர் தனது கண்ணாடியிலுள்ள லென்ஸை மாற்றக் கூடாது. சீனி அளவு இயல்பாக இருக்கும் பொழுது சரியாகப் பார்க்க முடியவில்லை என்றால்தான் கண்ணாடி லென்ஸை மாற்ற வேண்டும்.

**கேள்வி. 15:- நீரிழிவு நோயாளி பார்வையற்ற குருடராகி விடுவாரா?**

பதில்:- இந்நிலை விழித்திரைக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்த நாளம் வீங்கி உடைந்தால்தான் உண்டாகும். இந்நிலையில் விழித் திரையின் மேற்பகுதியில் புதிய இரத்த நாளங்கள் உருவாகத் தொடங்கும். இப்புதிய.இரத்த நாளங்கள் மிகவும் மென்மையாக இருப்பதன் காரணமாக அவையும் விரைவில் உடைந்து விடும். அப்போது விழித் திரையில் சேரும் இரத்தம் உறையத் தொடங்கிவிடும். அதனால் விழித்திரை கிழிந்து போகும். இதன் காரணமாக பாதிக்கப்பட்டவர் பார்வை இழந்து விடுவார். இதுதான் ரெட்டினோபதி (Retinopathy) என்றழைக்கப்படுகிறது.

**கேள்வி 16:- பாதிக்கப்பட்டவர் கண் பரிசோதனை செய்து கொள்வதின் மூலம் ரெட்டினோபதியைப் பற்றி அறிந்து கொள்ள முடியுமா?**

பதில்:- கண் மருத்துவர் கண்ணைப் பரிசோதித்து இரத்த நாளங்கள் வீங்கியுள்ளனவா, அவற்றில் குருதி ஒழுகுகிறதா இல்லையா, விழித்திரையின் மேற்பகுதியில் புதிய இரத்த நாளங்கள் உருவாகியுள்ளனவா என்று கண்டறிவார். இப்பரிசோதனை ஃப்ளோரசென்ட் ஆஞ்ஜியோகிராபி (Flourescent Angiography) என்றழைக்கப்படுகிறது.

**கேள்வி 17:- நீரிழிவு நோயாளியால் இப்பாதிப்பை தடுக்க முடியாதா?**

பதில்:- அவர் வருடத்திற்கொருமுறை கண் பரிசோதனை செய்து கொண்டால் இப்பாதிப்பினை அவரால் தடுக்க முடியும். கண் மருத்துவர் ரெட்டினோபதி இருக்கிறதா் என்று ஆஞ்ஜியோகிராபி சோதனை மூலம் கண்டறிவார். ஆரம்ப நிலையில் அது கண்டு பிடிக்கப்பட்டால் அதற்கு மருத்துவ சிகிச்சை அளிக்க முடியும். அதனால் பாதிக்கப்பட்டவர் பார்வை இழக்கும் அபாயத்திலிருந்து தப்பிக்க முடியும்.

**கேள்வி 18:- நீரிழிவு நோயாளிக்கு வேறு என்னென்ன கண் வியாதிகள் வரும்?**

பதில்:- நீரிழிவு நோயின் ஆரம்ப நிலையில் கண்கள் பாதிக்கப்படமாட்டா. எனினும் இரத்தத்தில் சீனி அளவு அதிகரிப்பதாலும் வயதின் காரணமாகவும் கண்கள் பாதிக்கப்படும். கண்களில் புரை உண்டாதல், விழி விறைப்பு நோய் (Glucoma) விழித்திரை பாதிப்பு, இரண்டு விம்பங்கள் தெரிதல் (Diplopia), கண் பார்வை இழத்தல் போன்றவை பெரும்பான்மையான கண் வியாதிகளாகும்.

**கேள்வி 19:- நீரிழிவு நோயாளி கண் வியாதியால் பாதிக்கப்பட்டால் அவருக்கு அறுவை சிகிச்சை எவ்வாறு செய்யப்படும்?**

பதில்:- ஒரு நீரிழிவு நோயாளிக்கு கண் புரைக்காகவோ அல்லது வேறு ஏதேனும் வியாதிக்காவோ அறுவை சிகிச்சை செய்யப்பட்டால் அவர் தனது இரத்தத்தில் சீனி அளவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது மிக மிக அவசியமாகும். மாத்திரைகள் மூலம் அது கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் மிகவும் நன்று. அப்படியில்லை என்றால் அறுவைச் சிகிச்சைக்கு ஒரு சில நாட்களுக்கு முன்பிருந்து அவருக்கு இன்சுலின் செலுத்தப்பட வேண்டும். சீனி அளவு கட்டுப்படுத்தப்பட்ட பின்னரே அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும்.

**கேள்வி 20:- நீரிழிவு நோயாளிக்கு ஆண்மைக் குறைவு உண்டாகுமா?**

பதில்:- எல்லா நீரிழிவு நோயாளிகளுக்கும் ஆண்மைக்குறைவு உண்டாகும் என்று சொல்ல முடியாது. இரத்த நாளங்களினால் ஆண்குறிக்கு இரத்தத்தைக் கொண்டு செல்ல இயலவில்லை என்றாலோ, நரம்புகள் சேதமடைந்திருந்தாலோதான் ஆண்மைக் குறைவு உண்டாகும். எனினும் முறையான மருத்துவ ஆலோசனையின் மூலம் அந்நிலையைத் தவிர்க்க முடியும்.

**கேள்வி 21:- ஒருவரின் பாலியல் வாழ்க்கையை நீரிழிவு நோய் பாதிக்குமா?**

பதில்:- நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டப் பெண்களை விட ஆண்களுக்கே பாலியல் பிரச்சினைகள் அதிகம் உண்டாகின்றன. இரத்தத்தில் சீனி அளவு நீண்ட காலமாகக் கட்டுப்படுத்தப்படவில்லை என்றால் மட்டுமே இப்பிரச்சினைகள் உண்டாகும். இப்பிரச்சினைகளின் காரணமாக அவர்களுக்கு விந்து முந்துநிலை உண்டாகும் அல்லது ஆண்மைக் குறைவு உண்டாகும். சிலருக்கு இப்பிரச்சினை மன உளைச்சல், கவலை, பலவீனம் மற்றும் சோர்வினால் உண்டாகும்.




03

**கேள்வி 22:- நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு என்னென்ன பாலியல் பிரச்சினைகள் வரும்?**

பதில்:- பெண்களுக்கு இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாக இருந்தாலோ அல்லது சில சமயம் அது குறைந்தாலோ அவர்களுக்கு பாலியல் பிரச்சினைகள் எதுவும் வருவதில்லை. எனினும் சில பெண்களுக்கு பாலியல் உறவில் முனைப்பு அல்லது ஆர்வம் இருக்காது. ஒரு சிலருக்கே உடலுறவின் போது வலியும் வேதனையும் உண்டாகும். இதற்கு பிறப்புறுப்பில் ஈரப்பதமின்மையும் தொற்றும் காரணமாகும்.

## டாக்டர்.A.K.ஜிங்கான்

**கேள்வி 23:- நீரிழிவு நோயாளிகளுக்கு குடலில் பாதிப்பு உண்டாகுமா?**

பதில்:- நீரிழிவு நோய் குடலையும் பாதிக்கும். இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரித்தால் அது குடலின் செயற்பாட்டை பாதிக்கும். இதன் காரணமாக பாதிக்கப்பட்டவருக்கு மலச்சிக்கல், வாயுத்தொல்லை, சில சமயம் வயிற்றுப்போக்கு முதலியவை உண்டாகும்.

**கேள்வி 24:- நீரிழிவு நோய் நரம்பு மண்டலத்தை எவ்வாறு பாதிக்கும்?**

பதில்:- நீரிழிவு நோய் நரம்பு மண்டலம் முழுவதையுமே பாதிக்கும். இரவு நேரங்களில் நீரிழிவு நோயாளி மிகவும் சங்கடப்படுவார். அவர் தன்னை மிகவும் பலவீனமாக உணர்வார். இதன் காரணமாக அவரால் எழுந்து நடக்கவோ உட்கார்ந்து எழுதவோ கூட முடியாமல் போகும். இரத்த அழுத்தம் குறைந்து விடுவதால் அவருக்குத் தலை சுற்றும், மயக்கமும் வரும். சில சமயம் மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு உண்டாகும். அவருக்கு உடலின் மேல் பகுதியில் பயங்கரமாக வியர்க்கும்.

(தொடரும்)

# நோய் எப்படி உண்டாகிறது?

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற முதுமொழி அனைவரும் அறிந்ததே. நோய் எப்படி உண்டாகிறது?

உடல், மனம், உள்ளம் இம்மூன்றும் பாதிக்கப்படும்போது நோய்கள் தானாவே மனிதனை ஒட்டிக்கொள்கின்றன. இவை சீராக செயற்பட்டால்தான் மனிதன் நோயின்றி வாழமுடியும்.

மனித உடலானது பலகோடி நரம்புகளாலும் தசைகளாலும் இரத்த நாளங்களாலும் எலும்புகளாலும் பின்னிப் பிணையப்பட்டதாகும். அண்டம் என்ற பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் பிண்டம் என்ற இந்த மனித உடலிலும் அமைந்துள்ளது. இவை ஒன்றுடன் தொடர்புடையவை. இப்படி இயற்கையால் உருவாக்கப்பட்ட மனித இனம் நோயின் கோரப்பிடியில் சிக்கி தவிக்கிறது.

குறிப்பாக முதுகுவலி, கீழ்த்தண்டு முதுகு வலி, கழுத்துவலி, கை கால் மூட்டு வலி போன்றவற்றால் அதிகம் பேர் அவதிப்படுகின்றனர். குறிப்பாக நீரிழிவு, இரத்த அழுத்த நோயாளிகள் இத்தகைய நோயின் தாக்குதலுக்கு ஆளாகின்றனர். இந்த வகையில் கழுத்துவலி என்ற தோள்பட்டை வலி நம்மில் அநேக பேரைப் பாதிக்கிறது.

எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம் என்பது சித்தர்களின் கூற்று. மனிதர்களின் இயக்கம் அனைத்திற்கும் முக்கிய காரணமாக செயற்படுவது சிரசு என்ற தலைப்பகுதி தான். பிரபஞ்ச சக்திகளை உணரும் தன்மை அனைத்தும் சிரசின் வழியே தான் நடைபெறுகிறது. இந்த சிரசில் தான் மனிதனை இயக்கும் ஐம்புலன்களும் அமைந்துள்ளன.

இத்தகைய சிறப்புகள் கொண்ட தலைப் பகுதியை உடலோடு இணைக்கும் பாலம் தான் கழுத்துப்பகுதி. கழுத்துப்பகுதி வழியாகத்தான் உடலுக்கும் சிரசுக்கும் நரம்புகள், இரத்த நாளங்கள் செல்கின்றன. கழுத்தானது உடலின் முக்கிய உறுப்புகள் செயற்படும் பகுதி எனக்கூறலாம்.

கழுத்தின் மையப் பகுதியில் ஏழு தண்டுவட எலும்புகள் உள்ளன. இவற்றைச்சுற்றி தசைகளும் தசை நார்களும் இணைந்து உள்ளன. மேலும் கழுத்து எலும்பிலிருந்து தான் கைகளுக்கு போகும் நரம்புகள் வெளி வருகின்றன. இப்படி உட லுக்கும் சிரசிற்கும் பாலமாக இருக்கும் கழுத்துப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டால் நம்முடைய அன்றாட செயல்கள் அனைத்தும் கடினமாகி விடுகின்றன.


இது பெரும்பாலும் 40 வயதைத் தாண்டியவர்களுக்கே ஏற்படுகிறது. இந்த எலும்பு இணைப்புகளில் ஏற்படும் தேய்மானத்தைத் தான் ஸ்பாண்டிலோஸிஸ் (Cervical Spon dylo sis) என்று ஆங்கில மருத்துவ முறைகளில் கூறுகின்றனர். இதை வர்ம மருத்துவத்தில் தோள்பட்டை வாதம் என்று அழைக்கின்றனர்.

இது குறிப்பாக அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்வோர்களையே அதிகம் பாதிக்கிறது. உடல் உழைப்பின்மை, உடற்பயிற்சியின்மை, சீரற்ற உணவு முறை, தூக்கமின்மை இவற்றினாலும் உண்டாகிறது.

### கழுத்துவலி வரக் காரணங்கள்

செரியாமை, மலச்சிக்கல், வாயுக்கோளாறுகள், குடல் சூடு, அஸ்த சூடு, மூலச்சூடு, இவற்றினாலும் அதீத சிந்தனை, மன அழுத்தம், தூக்கமின்மை, கோபம் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்தல், அதிகமான நேரம் கணினி முன் அமர்ந்து வேலை செய்தல், தொலைக்காட்சி பார்த்தல் போன்றவற்றாலும் இத்தகையய கழுத்து வலி உருவாகிறது.

நேரங்கடந்த உணவு, அளவுக்கதிமான உணவு, எளிதில் ஜீரணமாகாத உணவு, கோபம், பயம், எரிச்சல் உள்ள போது உண்பது, நீண்ட நாள் பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்பது, பித்தத்தை அதிகரிக்கும் உணவுகள், வாயுவை அதிகரிக்கும் உணவுகள் என பலவற்றை உண்பது போன்றவற்றாலும்



கழுத்து வலி உண்டாகிறது.

இப்படிப்பட்ட உணவுகளை உண்பதால் குடலில் நீரானது அதிகம் சுரந்து செரியாமை ஏற்படுகிறது. பின் அது மலச்சிக்கலாக மாறுகிறது. இதனால் குடலில் அபான வாயு சீற்றம் கொண்டு குடல் நீரை மேல்நோக்கித் தள்ளுகிறது. இந்த குடல் நீர் ஆவியாகி சிரசை நோக்கி சென்று அங்கே தங்குகிறது.

பின்பு தலையின் பின்பகுதி நரம்புகள் வழியாக கீழ் இறங்கி கழுத்துப் பகுதிக்கு வரும் போது அங்கு தசைகளையும் நரம்புகளையும் சுற்றிக் கோர்த்துக் கொள்கிறது. பின்பு அது பசைத் தன்மையடைந்து பந்து போல் கழுத்து தசை எலும்புகளையும் நரம்பு களையும் இறுகச் செய்கிறது. இதனால் கழுத்துப் பகுதி திரும்ப

01

முடியாமல் போகிறது.

மேலும் அங்கு கைகளின் நரம்புகள் ஆரம்பிப்பதால் அவைகளும் தோள் பட்டை பாகங்களும் இறுகி வலியை உண்டாக்குகிறது.

உதாரணமாக கடலில் உள்ள நீரானது அதிக வெப்பத்தால் ஆவியாகி மேல் சென்று மேகமாக மாறி பின் மழை நீராக பொழிவது போல் குடலில் உள்ள நீரும் ஆவியாக மாறி சிரசை அடையும்போது அவை நீராக மாறி கழுத்துப் பகுதிக்கு இறங்குகிறது. இது அவரவர் உடற்கூறுகளுக்குத் தகுந்தவாறு பாதிப்புகளை உண்டு பண்ணுகிறது.

### குறி குணங்கள்


தலைவலி, மூக்கில் நீர் வடிதல், மண்டைக்குத்து, பின் கழுத்துப் பகுதியில் பிடிப்பு போன்றவை உண்டாகும். குனிந்து நிமிரும்போது தலை சுற்றி கண்ணில் மின்னல் போல் தோன்றச் செய்யும்.

உடல் அதிர்ந்து,நரம்புகள் இறுகும். சிலருக்கு எழுந்து நடக்கும் போது தலை சுற்றல், மயக்கம் உண்டாகும். கழுத்துப் பகுதியில் கைகளின் நரம்புகள், எலும்புகள் ஆரம்பிப்பதால் கைகள் மரத்துப் போகும். சுண்டு விரல் பகுதிகள் செயலிழப்பு காணப்படும். மன எரிச்சல் உண்டாகும். எதிலும் விருப்பம் தோன்றாது. அதிக கோபம் உண்டாகும். தூக்கமின்மை ஏற்படும். கண் எரிச்சல் உண்டாகும். அதிக நேரம் படிக்கும்போது கழுத்துப் பகுதியில் வலி உண்டாகும். எழுதும் போது கை விரல்களில் வலி ஏற்படும்.

கழுத்துப் பகுதி தடித்துக் காணப்படும். மேலும் கழுத்து வலியானது உடற்கூறுகளுக்கு தகுந்தவாறு அறிகுறிகள் தென்படும். வாத உடற்கூறு கொண்டவர்களுக்க கழுத்து இறுகி திரும்ப முடியாத நிலை உண்டாகும். பித்த உடற்கூறு கொண்டவர்களுக்கு கழுத்து இறுகி திரும்ப முடியா நிலை உண்டாகும். பித்த உடற்கூறு கொண்டவர்களுக்கு வாந்தி, மயக்கம், தலைசுற்றல் ஏற்படும்.

(தொடரும்)

# குடும்ப ஆதிக்கத்தைத் தவிர்த்த எம்.ஜி.ஆர்.!



அமரர் எம்.ஜி.ஆர். இன் மூத்த சகோதரர் பெரியவர் சக்கரபாணி, தம்பியைக் கலைத்துறைக்குத் தயார் செய்தவர். அ.தி.மு.க. துவங்கிய காலத்தில் அவரும் பல பொதுக் கூட்டங்களுக்குச்சென்றார்.

அ.தி.மு.க.விற்கு அரசியல் திருப்புமுனை ஏற்படுத்தியது திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தல்தான். அதன் பிரச்சாரப் பணியிலும் பங்குபெற்றார். மறைந்த பாலகுருவா ரெட்டியாரும், பரமனும் தான் அவரைப்பொதுக்கூட்டங் களுக்கு அழைத்துச் சென்றனர்.

தற்போது சென்னை லாயிட்ஸ் சாலையில் செயற்படும் அ.தி.மு.க. கழகத் தலைமைக் கட்டிடம் வி.என். ஜானகிக்குச் சொந்தம். அதனைக் கழகத்திற்காக எம்.ஜி.ஆர். எழுதி வாங்கினார்.

அந்தக் கட்டிடத்தின் பின்பகுதி

நக்கீரன்

யில்தான் ஆரம்பத்தில் அண்ணா நாளோட்டின் அலுவலகமும் அச்சகமும் செயற்பட்டன. அந்தக் கட்டிடத்திலிலிருந்து சில கட்டிடங்கள் தள்ளி எம்.ஜி. சக்கரபாணியின் இல்லம்.

ஒருநாள் அவருடைய பணியாளர் வந்தார். அய்யா அழைக்கிறார் என்றார். "அண்ணா அலுவலகத்திலிருந்து சென்றோம். தமது அருகிலிருந்தவர்களைப் பெரியவர் போகச் சொன்னார். எதிரே நாற்காலியில் அமரச் சொன்னார். தம்பியிடம் நீங்கள் பேசவேண்டும்."

தம்பி என்றால் எம்.ஜி.ஆர். ஏன்? "ஏன்? உங்கள் மீது உங்கள் தம்பி மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார். நீங்களே பேசலாமே?" என்று சிரித்துக்கொண்டே சொன்னோம்.

"இந்த விடயத்தை நான் பேச முடியாது. நீங்கள்தான் பேச வேண்டும்" என்றார்.

"சரி"

சுற்றும் முற்றும் பார்த்தார் சற்று குரலை இறக்கி "என்னை கழகப் பொதுக்குழு உறுப்பினராக நியமிக்கச் சொல்லுங்கள்" என்றார்.

அப்போதைக்கு அவருடைய கோரிக்கை நியாயமானதாகத்தான் தெரிந்தது. தம்பியிடம் அண்ணன் இமாலய வரம் கேட்டுவிட்டாரா?

அறை வாசல் வரை வந்தார். "சோலை, தம்பி நல்ல மூடில் இருக்கும்போது பார்த்துப் பேசுங்கள்" என்றார். ஒரு வெண் கலச்சிரிப்பு.

கழகத்தில் அவர் மாநில அளவில் ஒரு பதவி கேட்கவில்லை. செயலாளர் பதவி கேட்கவில்லை. கழகத்தை மண்டலங்களாகப் பிரிக்கச் சொல்லவில்லை. அதில் தன்னை ஒரு மண்டலத்திற்கு அதிபதியாக நியமிக்கச் சொல்லவில்லை. ஐநூறுக்கு மேற்பட்டோர் இடம்பெறும் மாநிலப் பொதுக் குழுவில் தன்னையும் ஒரு உறுப்பினராக நியமிக்கச் சொன்னார்.

அடுத்த சில தினங்களில் ஆற்காடு சாலை அலுவலகத்தில் அமரர் எம்.ஜி.ஆரை சந்தித்தோம் உற்சாகத்தின் உச்சத்தில் இருந்தார். "உரையாடலுக்கு நடுவே பெரியவர் அழைத்தார்" என்றோம்.

"என்ன?"

"அவருக்கு ஒரு பெரிய ஆசை."

"என்ன?"

சற்றுத் தயங்கினோம். துணிச்சலை வரவழைத்துக் கொண்டோம்.

"அவரும் கழகப் பணி செய்ய விரும்புகிறார். அதற்கு அங்கீரகாரமாக பொதுக்குழு உறுப்பினர் பதவிமீது அவருக்கு ஆர்வம்" என்றோம்.

அவரது பொன்மேனியில் நூறு மைல் வேக இரத்த ஓட்டம். முகம் சிவந்தது.

"இல்லை. அதாவது... வந்து..." என்று இழுத்தோம். அதற்கு மேல் நா அசையவில்லை. சத்தியாக்கிரகம் செய்தது.

"சும்மா இருக்கமாட்டீர்களா?" கோபத்தோடு கேட்டார். நமக்கு சப்த நாடியும் தந்தி அடித்து அடங்கி விட்டது.

அமரர் எம்.ஜி.ஆருக்கு இயற்கை அளித்தது கொடுத்துச் சிவந்த கரங்கள். உண்மை. ஆனால், உடன் பிறந்த அண்ணனை கழகப் பொதுக் குழுவில் ஒரு உறுப்பினராக நியமிக்க மறுத்துவிட்டார் அண்ணனுக்கு கனவில் பூத்த மலரும் கருகிப்போய் விட்டது.

"துரைக்கு ஒரு தகவல் சொல்லியிருக்கிறேன். கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்."

நாம் விடைபெறும்போது அமரர் எம்.ஜி.ஆர். இப்படிச் சொன்னார்.

துரை அ.தி.மு.க.வின் தலைமைக் கழக நிர்வாகி. எம்.ஜி.ஆரின் நம்பிக்கைக்குரிய விசுவாசி.

துரையும் நாமும் ஒரே கட்டிடத்தில் வெவ்வேறு பிரிவில் பணிசெய்து கொண்டிருந்தோம்.

அடுத்தநாள் எம்மை துரையே அழைத்தார். "தலைவர் தங்களிடம் தனியாக ஒரு தகவல் சொல்லச் சொன்னார்" என்றார்.

ஏறிட்டுத்துப் பார்த்தோம்.

"இனிமேல் பெரியவரை (எம்.ஜி. சக்கரபாணியை) யாரும் பொதுக் கூட்டத்திற்கு அழைத்தால் அவருக்கு உடல்நிலை சரியில்லை" என்று தலைவர் சொல்லச் சொன்னார். இது தங்களுக்கு மட்டும் தெரிந்த தகவலாக இருக்கவேண்டும் என்றும் தலைவர் சொல்லச்சொன்னார்" என்றார் துரை.

அடுத்த சில தினங்களில் எம்.ஜி.ஆர். அழைத்தார். நீண்ட கலந்துரையாடல். விடைபெறும்போது அவர் சொன்னார்.

"சோலை... நான் அரசியலில் இருக்கும்போது அவரும் (எம்.ஜி. சக்கரபாணியும்) இருக்க வேண்டுமா? உலகம் என்ன சொல்லும்? அண்ணனும் தம்பியும் சேர்ந்து கூத்தடிக்கிறார்கள் என்று சொல்லமாட்டார்களா?" என்றார்.

மெய்சிலிர்த்துப் போனோம். அவர் அரசியலில் அடியெடுத்து வைத்த பின்னர் மிகுந்த எச்சரிக்கையாக இருந்தார்.

அரசியல் சதுரங்கத்தில் நாம் ஒரு காய் நகர்த்தினால் எதிரி எப்படி காய் நகர்த்துவார் என்பதனை அவர் சிந்தித்தே ஒவ்வொரு முடிவையும் எடுத்தார்.

"அண்ணா விரும்பியிருந்தால் தனது வளர்ப்பு மகனை அரசியலில் அறிமுகம் செய்திருக்க முடியாதா? அந்தப் பையன்கள் உழைத்து முன்னேறுவது வேறு. திணிப்பது வேறு" என்று விளக்கம் தந்தார்.

அவரது துணைவியார் வி.என். ஜானகி அரசியலிலிருந்து வெகுதூரம் விலகியே இருந்தார். நிர்வாகத்தில் தலையிட்டார். பரிந்துரை செய்தார் என்ற குற்றச்சாட்டே எழுந்ததில்லை.

அதே சமயத்தில் மதிக்கத் தெரிந்த இன்னொரு எம்.ஜி.ஆரையும் பார்த்தோம். அவர் முதல்வராகப் பதவியேற்றார். அண்ணாவிற்கு அஞ்சலி செலுத்தினார். அங்கிருந்து அண்ணன் சக்கரபாணியிடம் ஆசீர்வாதம் வாங்க அனைத்து அமைச்சர்களுடன் வந்தார்.

ஆனால், குடும்ப ஆட்சி- குடும்ப ஆதிக்கம் என்ற குற்றச்சாட்டிற்கு ஆளான ஒரு மாபெரும் இயக்கம் எப்படி தோல்வியைத் தழுவியது என்பதனை கடந்த சட்டமன்றத் தேர்தலில் கண்முன்னே கண்டோம்.

முந்தைய தி.மு.க. ஆட்சியைப் போல் வேறு எந்த ஆட்சியும் சாதனைகள் செய்ததில்லை. பல மாநிலங்களுக்கு அந்த அரசுதான் முன்னோடியாக இருந்தது. ஆனால், குடும்ப ஆட்சி குற்றச்சாட்டு, அதன் அடித்தளத்தையே அசைத்துவிட்டது.

அதனை எல்லா விமர்சனங்களும் சுட்டிக் காட்டின. மாற்றங்கள் தெரியவில்லை. எனவே, சட்ட மன்றதத் தேர்தலின்போது மக்களுக்கு ஏற்பட்ட கோபம் அடுத்து வந்த மாநகராட்சி, நகராட்சி, உள்ளாட்சித் தேர்தலிலும் எதிரொலித்தது.

நாடாளுமன்றத்தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை ஆண்டுகள் இருக்கின்றன. ஆனால், அதற்குள் பல்வேறு கட்சிகளும் அந்தத் தேர்தலைச் சந்திக்கத் தயாராகி வருகின்றன.

இப்போதெல்லாம் வேட்பாளர்களின் முந்தைய செயற்பாடுகள் என்ன- அரசியல் பயணம் என்ன என்று மக்கள் எடை போடுகிறார்கள்.

இராமநாதபுரத்திலிருந்து சமீபகாலமாக எத்தகைய திடுக்கிடும் தகவல்கள் வருகின்றன என்பதனைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். கட்சியின் ஒன்றியச் செயலாளர் ஒருவர் கடத்தப்படுகிறார். மண்டலங்களும் கவலைப்படவில்லை. தலைமையின் மௌனம் புதிராகவே இருக்கிறது. தி.மு.க. விற்கே சோதனையை ஏற்படுத்திவிட்டார்கள்.

வேட்பாளர்கள் விற்பனைச் சரக்குகள் அல்ல. எனவே, வேட்பாளர் தேர்வில் எந்த அள்விற்குக் கவனம் தேவை என்பதனை இராமநாத புரமும் உணர்த்திவிட்டது. இப்போது சங்கரன் கோவிலும் தெரிவித்துவிட்டது.

குடும்ப ஆட்சி என்ற கோபம் அ.தி.மு.க.வை ஆட்சிக்குக் கொண்டு வந்தது. அ.தி.மு.க. அரசு மீது ஏற்படும் அதிருப்தி மீண்டும் நம்மை அரியணைக்கு அனுப்பும் என்று காத்திருக்கக்கூடாது.

அனுபவம்தான் சிறந்த ஆசான். அந்த ஆசான் கற்றுக் கொடுத்த பாடத்தை இதயத்தில் நிறுத்திக் கொள்ளவேண்டும். குடும்ப ஆதிக்கம் என்ற குற்றச்சாட்டிற்கு இனியாவது விடை காணவேண்டும்.

அமரர் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தார். திருச்செந்தூர் ஆலய அதிகாரியின் மரணத்திற்கு விடை தெரியாத நேரம். அந்த சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலை எதிர் கொண்டது.

தி.மு.க. வேட்பாளராக செல்வாக்கு வாய்ந்த கே.பி கந்தசாமி போட்டியிட்டார். அவரை எதிர்க்கும் அ.தி.மு.க. வேட்பாளர் யார்? பரிந்துரைகள் பல வந்தன.

கடைசியில் அன்றைய மாவட்டச் செயலாளர் கருப்பசாமி பாண்டியன் பரிந்துரைத்தவரே வேட்பாளர் என்று எம்.ஜி.ஆர். அறிவித்தார். மாவட்டச் செயலாளருக்குத்தான் மண்ணின் மகிமை தெரியும். மக்கள் மனசும் புரியும்.


தேர்தல் பணிக்கு அரங்கநாயகம் அவர்களையும் நம்மையும் அனுப்பி வைத்தார்.

வாக்குப்பதிவு முடியும்வரை குறிப்பிட்ட கழகப் பிரமுகர்கள் சிலர் மதுரையைத் தாண்டி வரக்கூடாது என்று சொன்னோம். அவ்வாறே அவர் செய்தார்.

யார் முன்னே நிற்கிறார்கள் என்பதைப் பொறுத்தே எல்லாப் பணிகளின் வெற்றி- தோல்விகள் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதனை எம்.ஜி.ஆர். அறிந்திருந்தார்.

## தவிர்க்க முடியாது தவிக்கும் கலைஞர்


# தென்னிந்தியாவில் அமைக்கப்படும் அணுஉலையால் இலங்கைக்கு காத்திருக்கும் ஆபத்துக்கள்



தென்னிந்தியாவில் அமைக்கப்பட்டு வருகின்ற அணு உலைகள் அதில் இலங்கைக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. இத்தலைப்பானது சம காலத்தில் தேவை கருதி ஆராயப்பட வேண்டிய ஒரு தலைப்பாகும். ஏனெனில் எப்பொழுதும் கண்கெடுவதற்கு முன்னர் சூரிய நமஸ்காரம் செய்வதே சாலப் பொருத்தமாகும்.

இந்திய மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டில் மட்டுமல்லாது ஏனைய சில தென்னிந்திய மாநிலங்களிலும் அணு உலைகளை மிகத் தீவிரமாக அமைத்து வருகின்றது. அதிலிருந்து பெறப்படுகின்ற பயன் ஒரு பக்கம் இருக்க மறு பக்கத்தில் அதனால் ஏற்படும் பயங்கர ஆபத்துக்கள், அதுவும் குறிப்பாக இலங்கைக்கு மிக அண்மையில் அமைந்துள்ள கூடங்குளம், களாப்பாக்கம், அணு உலைகளினால் ஏற்படவிருக்கும் ஆபத்துக்கள் தமிழ் நாட்டிலும் வட இலங்கையிலும் மட்டுமல்லாது ஒட்டுமொத்த தென்னாசியப் பிராந்தியத்திற்கே சாவுமணி அடிக்கும் ஆற்றல் பெற்றது என்பது யாவரும் அறிந்த உண்மையே. எனவே அவ்வாறான ஆபத்துக்கள் ஏற்புடுவதற்கான வாய்ப்புக்கள் எவ்வாறு காணப்படுகின்றன என்பது இவ் வாய்வுக் கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

மனிதப் பாதுகாப்பு, ஆயுத பரிகரணம், சர்வதேச சட்டம் என்ற அடிப்படையில் நின்றே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் நாட்டில் அமைந்துள்ள கூடங்குளம் அணு உலை பற்றியும் அமைக்கப் பட்விருக்கின்ற ஏனைய அணு உலைகளைப் பற்றியும் இலங்கை அதிகம் அச்சம் கொள்வதற்கு பல தர்க்க



ரீதியான நியாயப்பாடுகள் காணப் படவே செய்கின்றன.

புகுசிமாவில் ஏற்பட்ட நிகழ்வு ஒரு உடனடிக்காரணமாக இருக்கின்ற அதேவேளை இலங்கை மிக அண்மையில் அதாவது 98 Km தொலைவிலேயே கூடங்குளம் அணு உலை அமைந்திருக்கின்றமை மற்றுமொரு பிரதான காரணியாகவும் அமைகின்றது. அது மட்டுமல்லாது இந்தியா தற்போது அமைத்து வருகின்ற அணு உலைகள் வெற்றிகரமாக அமைக்கப்படின் வெகுவிரைவில் மேலும் 6-10 அணு உலைகளை தென்னிந்தியாவில் அமைக்க இருக்கின்றது. இவற்றில் பெரும்பாலானவை இலங்கைக்கு மிக அண்மையிலே அமைய இருக்கின்றன என்ற அதிர்ச்சிச் செய்தியும் மற்றுமொரு காரணமாக அமைகின்றது.

கூடங்குளம் அணு உலையில் ஏற்படக்கூடிய உடைவுகள், கசிவுகள் காரணமாக வெளியேற்றப்படுகின்ற - தோன்றுகின்ற கதிர்வீச்சுக்களினால் மனித, உயிரினங்கள் மட்டுமல்லாது மீன்பிடி, விவசாயத்தொழில் என்பன இலங்கையில் பாதிப்புக்கு உள்ளாகும். எனவே இலங்கை முன்கூட்டியே இவ்விடயத்தில் தனது பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் இலங்கை இதன் பாதிப்புக்களால் மீள முடியாத அவல நிலைக்கே உள்ளாகக்கூடும்.

தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் கூடங்குளம் இந்திய மத்திய அரசாங்கம் உலையினை மிகத் தீவிரமாக அமைத்து வருகின்றது. இவ்வணு உலையிலிருந்து 1000- 1200 மெகா வோட்ஸ் மின்சாரத்தினை உற்பத்தி செய்து பெற்றுக்கொள்ள அது எண்ணியுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான யுரேனியம் உள்ளிட்ட மூலப்பொருட்கள் இந்தியாவினுடையவையாகும். பணியாற்றுகின்ற அணு விஞ்ஞானிகளும் இந்தியாவிற்கே உரியவர்களாவர். எனினும் அதற்கான தொழில்நுட்பத்தினை இந்தியா அமெரிக்காவிடம் இருந்தே பெற்றுக்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் அணு உலைகள் அமைப்பதற்கு தமிழ்நாட்டில் மின்சாரத் தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்வதே நோக்கம் என மத்திய அரசாங்கம் கூறி வருகின்றது. எனினும் உண்மை அதுவல்ல. இதற்குப் பின்னால் பல அரசியல் ரீதியான காரணங்களும் மறைந்துள்ளன. கூடங்குளம் மற்றும் களாப்பக்கம் ஆகிய இரு அணு உலைகளின் கட்டுமான வேலைகள் 2015 ஆம் ஆண்டளவில் முடிவுற்று இவ்விரண்டு அணு உலைகளிலும் பயன்பாடு செயற்பட ஆரம்பித்து விடும் என நம்பப்படுகின்றது.

இருப்பினும் இது தொடர்பான தரவுகள் அனைத்தும் இரகசியமான முறையிலேயே பேணப்பட்டு வருகின்றன. இவ்வேகத்தில் இந்தியா பயணித்தால் 2020 இல் இந்தியாவில் சக்தி தேவைகள் பூர்த்தி செய்யப்படும். இருப்பினும் அப்போது தமிழ்நாடு அணு உலை வலயமாக மாற்றம் பெற்றிருக்கும்.

தமிழ்நாடு இலங்கைக்கு அண்மையில் தமிழ்நாட்டில் அமைக்கப்படும் அணு உலைகளில் கசிவு அல்லது வெடிப்பு காரணமாக வெளியாகும் கதிர்வீச்சுக்கள் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தும். அவ்வாறு அணுக்கதிர்கள் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பினை விடுத்து அப்பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிக மிக அதிகமாகவே உள்ளன. எனவே அவ்வாபத்துக்கள் எழக்கூடும் என்று ஆணித்தரமாகக் கூறப்படுவதற்கு பின்வரும் காரணிகள் அடிப்படையாக உள்ளன.

1. இயற்கைக் காரணிகள்.
2. மனித காரணிகள்.

இயற்கையினால் எழக்கூடிய நில நடுக்கம் மற்றும் சுனாமி ஆகியவற்றினால் அணு உலைகளில் பாதிப்பு ஏற்படலாம். கடந்த ஆண்டு ஜப்பானில் புகுசிமாவில் இடம்பெற்ற சம்பவத்தின் ஊடாக தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். மற்றும் அணு உலைகள் செயற்படத் தொடங்கும் போது அதிலிருந்து வெளிவிடப்படுளகின்ற வாயுக்கள் வான்முகில்களில் கலக்கின்றது. இவை வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலப்பகுதியில் மழையாக இலங்கையின் வட கிழக்குப் பிரதேசங்களில் பெய்கின்றன. இம் மழையில் அமிலத் தன்மை காணப்படவே செய்யும். இந்த உண்மையினை நாம் பொறுத்திருந்து அனுபவத்தின் ஊடாகவே அறிந்து கொள்ள வேண்டும்.

அணு விஞ்ஞானிகளினால் ஏற்படுத்தக் கூடிய தவறுகள் காரணமாக அணு உலைகளில் ஆபத்துக்கள் ஏற்படலாம். ஏற்கனவே 2004ஆம் ஆண்டில் களாப்பாக்கத்தில் ரஷ்யாவின் உதவியுடன் அமைக்கப்பெற்ற அணு உலையில் 3 தடவைகள் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலும் அவற்றில் கசிவுகள் ஏற்பட்டுள்ளமை தெரியவருகின்றன. இதனால் 2008ஆம் களாப்பக்கம் அணுஉலை தற்காலிகமாக மூடப்பட்டது. இந்நிகழ்வானது வரலாற்றில் மிக அண்மையிலேயே நடந்தேறியுள்ளது. அணு உலைகளில் வெடிப்பு அல்லது கசிவு ஏற்படும்போது அவற்றினால் வெளிவிடப்படும் கதிர்வீச்சுக்கள் பரவுவதைத் கட்டுப்படுத்தும் அல்லது தடுத்து நிறுத்தும் தொழில்நுட்பம் ஆளணி வளத்தினை இந்தியா பெற்றுள்ளதா என்ற கேள்வி எம்முள் பெரும்பாலானவர்களுக்கு எழுகின்றது. இது வேறொரு வகையில் அணு உலைகளில் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றிய அச்சத்தினைத் தூண்டுகின்றது. அண்மையில் புகுசிமாவில் ஏற்பட்ட விபத்தின்போது எண்பதுக்குப் பின்னரே அணு விஞ்ஞானிகளினது அய்ராத உழைப்பின் பயனாக இரண்டு வாரங்களுக்குப் பின்னரே நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டமையை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

எனவே இலங்கைக்கு அண்மையில் அமைக்கப்பட்டு வருகின்ற அணு உலைகளினால் இலங்கை மக்களுக்கு ஆபத்து ஏற்படும் என இலங்கை அரசாங்கம் அறிந்து கொண்டுள்ளது. அதற்கு அமைக்கப்பட்டு வருகின்ற அணு உலைகளைக் கட்டுமானச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தவோ அல்லது ஏனைய அணு உலைகள் இலங்கைக்கு அண்மையில் அமைக்கப்படுவதனைத் தடுத்து நிறுத்தவோ இலங்கை முயலவில்லை. இலங்கையால் அது முடியாத காரியம் ஒன்றாகும். எனவே மாற்று வழியாக சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இலங்கை அரசு தனது பாதுகாப்பினை இந்தியாவிடமிருந்து உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமே அன்றி வேறெந்த மார்க்கமும் இலங்கைக்கு இருப்பதாக எண்ணத்தோன்றவில்லை. அவ்வாறு இலங்கை செய்யாதவிடத்து மேலும் அதன் ஆபத்துக்களை விட ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் அதிகரித்துக் செல்லும்.

தமிழகத்தில் அமையப் பெறுகின்ற அணு உலைகள் மட்டுமல்லாது இனிவரும் காலங்களில் தென்னிந்தியாவில் அமையப்பெறுகின்ற ஏனைய

**எஸ்.எஸ்.திருச்செந்தூரன்**
**B.A.(Hons) Pol.Sci**
**M.A.(Reading)Int.Rel**

அணு உலைகளினால் இலங்கைக்கு ஆபத்துக் காத்திருக்கின்றது. எனவே இலங்கை இவ்விடயத்தில் தற்போது இருந்தே தமது முயற்சிகளை ஆரம்பித்து இலங்கை தனக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கைச் அரசாங்கம் இந்தியாவிடம் பேரம் பேசுவதன் ஊடாக தனது பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை நாம் நம்புவோமாயின் இது ஒரு கேலியான விடயமாகும். அதற்கு இலங்கை வலிமைபெற்று இருக்கவில்லை என்பது அனைவரும் அறிந்ததே. எனவே மூன்றாவது தரப்பின் ஒன்றின் ஊடாக அதாவது சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் ஊடாக இந்தியாவுடன் இலங்கை பேச்சுவார்த்தையினை மேற்கொண்டு நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். முயற்சிகளை மேற்கொள்ளும் என இலங்கை மக்களாகிய நாம் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம். அத்தகைய முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொள்ளுமா? அவ்வாறு மேற்கொள்ளப்படின் அம்முயற்சி வெற்றியளிக்குமா? போன்ற வினாக்களை அரசாங்கத்திடம் வினாவி விட்டுப் பதில்களுக்காகக் காத்திருப் போம்.

# படுகொலை செய்யப்பட்ட எம்.பிக்களின் விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை

## உகண்டா மாநாட்டில் அதிருப்தி

(கொழும்பு)

முன்னாள் எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், என். ரவிராஜ் ஆகியோர் படுகொலை சம்பவங்கள் குறித்த விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை எனத்தகவல் தரவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் உகண்டாவில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது என அதில் கலந்து கொண்ட இலங்கை தூதுக்குழுவின் முக்கியஸ்தரான இவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் முன்னாள் எம்.பிக்களான தியாகராஜா மகேஸ்வரன் மற்றும் த.மு. தசநாயக்க ஆகியோர் கொலை செய்யப்பட்ட சம்பவங்களின் விசாரணைகளில் முன்னேற்றங்கள் காணப்படுவதாகவும் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டில் இலங்கை குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நாங்கள் பதிலளித்ததுடன் எமது பக்க நியாயத்தை எடுத்துரைத்தோம்.

இந்தப் படுகொலைச் சம்பவங்கள் குறித்த விசாரணைகளில் மேலும் முன்னேற்றங்கள் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் அது குறித்து எமது நிலைப்பாட்டை நாங்கள் அறிவித்தோம்.

மேலும் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தில் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடயத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு விடயங்கள் குறித்து ஒன்றியத்தின் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு இலங்கையில் இருந்து கலந்துகொண்ட எம்.பி.க்கள் பதிலளித்தனர்.

சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாடு கடந்தவாரம் உகண்டாவில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் இலங்கைப் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். (அ-2)

# ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுக்கே ஆதரவு வழங்கப்படும்

## தயாசிறி எம்.பி தெரிவிப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் விரைவாக பேச்சுக்களை நடத்தி தீர்வு தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். அவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கமும் சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுக்கு வந்தால் அதற்கு ஐ.தே.க. ஆதரவு வழங்கும் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி தீர்வுத் திட்டம் ஒன்றுக்கு செல்லத் தயார் என்று அண்மையில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருந்த கருத்தை அரசாங்கம் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தற்போதைய நிலைமையில் மீள ஆரம்பிக்கப்படாமல் உள்ளன. அந்த வகையில் அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றுக்கு செல்லும் நோக்கில் அரசாங்கம்-தமிழ்க் கூட்டமைப்பும் பேச்சு நடத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# பாரிய கடத்தல் சம்பவங்களினால் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படும்

## ர்ணில் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் பாரிய கடத்தல் சம்பவங்களினால் அபகீர்த்தி ஏற்படும் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடத்தல் சம்பவங்களினால் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நாட்டின் நன்மதிப்பு பாரியளவில் வீழ்ச்சியடையும்.

கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்களினால் நாட்டின் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. மக்கள் பாதுகாப்பற்ற நிலைமையை உணர்ந்ததாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்கள் போராட்ட அமைப்பின் தலைவர் பிரேம்குமார் மற்றும் உறுப்பினரான தி.மு.து ஆட்டில ஆகியோர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் ரணில் விக்ரமசிங்க வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. (அ-2)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ ஆய்வு மாநாடு

தென்கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் 2012 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆய்வு மாநாடு நேற்றும் இன்றும் ஒலுவில் வளாகத்தில் இடம்பெறவுள்ளதாக மாநாட்டின் பிரதம ஒருங்கிணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான எம்.பி.எம். இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி எம்.பி.எம்.அம்ஜத் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்வாய்வு மாநாட்டுக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். எம். முகம்மது இஸ்மாயில் பிரதம விருந்தினராகவும் திறந்த பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் உபாலி விதான பத்திரனகே பிரதம பேச்சாளராகவும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

மெட்றாஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி வீ. செய்யீத் ஹக், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி ரீ.வேல்நம்பி, முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் தேவராஜ், யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு பீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலன் ஆகியோர் விசேட பிரதிநிதிகளாக கலந்து கொண்டு மாநாட்டு கூட்டத் தொடரினை ஆரம்பித்து வைக்கவுள்ளதாகவும் பிரதம ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

முகாமைத்துவ மற்றும் நிதி தொடர்பிலான பரிணாம பிரச்சினை எனும் கருப்பொருளில் இவ் ஆய்வு மாநாடு இடம் பெறவுள்ளது.

இவ்வாய்வு மாநாட்டில் இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்களும் இந்தியா, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளையும் சேர்ந்த துறை சார்ந்த பேராசிரியர்கள், கலாநிதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் போன்றோர் கலந்து கொண்டு தங்களது ஆய்வுகளை சமர்ப்பிக்கவுள்ளனர். (அ-2)

# க.பொ.த (சா/த) பெறுபேறுகள்

**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**

கோபால்ராஜ் விதுசன் (6ஏ1பி2சி), பரஞ்சோதி ஜீவனி (3ஏ4பிசி), ராஜசேகரன் பிரசாந் (4ஏ2பி2சி எஸ்), சதீஸ்வரன் ஐங்கரன் (3ஏ3பி2சிஎஸ்), சின்னராசா ஜெனார்த்தி (3ஏ3பிசி2எஸ்), செல்வரத்தினம் கோபிகா (2ஏ3பி3சிஎஸ்), அலோசியஸ் கௌசிகா (2ஏ4பிசிஎஸ்), கிருஸ்ணபவன் லக்சனா (2ஏ4பி2சிஎஸ்), அருளானந்தம் அஜந்தா (3ஏ2சி3எஸ்) (அ)

# வீதி விபத்துகளை குறைக்க புதிய ஒழுங்கு விதிமுறைகள்

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் வீதி விபத்துக்களை குறைக்கும் பொருட்டு புதிய ஒழுங்கு விதிமுறைகளை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் பூரண ஒத்துழைப்புடன் புதிய ஒழுங்கு விதிமுறைகளை வெகுவிரைவில் அமுல்படுத்தவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிஸ் சந்திர தெரிவித்துள்ளார்.

பாவனைக்குப் பொருத்தமில்லாத வாகனங்களை வீதியிலிருந்து அப்புறப்படுத்தல், போக்குவரத்து விதிமுறைகளை மீறும் குற்றச் செயல்களுக்கு புள்ளி வழங்குதல், வாகனங்களின் தரக் கட்டுப்பாட்டு பரீட்சைகளை மேம்படுத்தல், சாரதி பயிற்சி பாடசாலைகளின் பயிற்சிகளை மேம்படுத்தல் மற்றும் வாகன சாரதிகள், பாதசாரிகளுக்கு விழிப்புணர்வு திட்டங்களை வழங்குதல் போன்ற புதிய விதிமுறைகளையே அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவ்தாயின் ஆளணிப் பலம் மிகவும் இன்றியமையாததாகும். அவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதன் ஓர் அங்கமாக கடந்த வாரம் மோட்டார் வாகன பரிசோதகர் 52 பேரை புதிதாக திணைக்களத்திற்கு சேர்த்துக் கொண்டதுடன் இவர்களுக்கு இந்தத் துறை தொடர்பாக 2 மாத கால விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது என்றார்.

விபத்துக்கள் மூலம் நாளொன்றுக்கு ஆறு பேர் உயிரிழப்பதாக பொலிஸ் திணைக்களம் அண்மையில் வெளியிட்ட தகவல்கள் மூலம் தெரியவருகின்றது. அத்துடன் 80 வீத விபத்துக்கள் அலட்சியம் காரணமாகவும் நாளாந்தம் நூற்றுக்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. அவற்றில் 45 வீதமானவை மிகவும் மோசமான விபத்துக்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒழுங்கான முறையில் பேணப்படாத வாகனங்கள் மற்றும் பாவனைக்கு பொருத்தமில்லாத வாகனங்களை வீதியில் செலுத்துவதிலிருந்து அப்புறப்படுத்துவதுடன் அந்த வாகனத்திற்கான அனுமதிப்பத்திரமும் மீளப் பெறப்படும்.

இதேவேளை வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளை மீறும் குற்றச் செயல்களுக்காக சாரதிகளிடமிருந்து சாரதி அனுமதிப்பத்திரம் கைப்பற்றப்படும் ஒவ்வொரு தடவைகளுக்கும் புள்ளிகள் வழங்கும் திட்டத்தை திணைக்களம் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

அதேசமயம் மோசமான வீதி விபத்துக்களை தவிர்க்கும் பொறுப்பு சாரதிகள், பாதசாரிகள் ஆகிய இருதரப்பினரிடமும் உள்ள விடயமாகும் என்று தெரிவித்த அவர், அவர்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

வீதி ஒழுங்கு விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிப்பதன் மூலம் இதனை தவிர்க்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (அ-2)

# சரத் பொன்சேகா சிறைக்கு செல்வதற்கான தீர்ப்பை நினைத்து நான் வெட்கப்படுகிறேன்

## முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா

(கொழும்பு)

**ஜெனீவா மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக 24 நாடுகள் வாக்களித்தன. இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாலேயே இந்தநாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களித்தன. எவ்வித சட்டமும் இன்றி சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டமை இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றது என்பதை நன்கு உறுதிப்படுத்தியிருப்பதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.**

ஜெனரல் சரத்பொன்சேகாவை ஏன் விடுதலை செய்ய கொள்ள வேண்டும் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். சரத் பொன்சேகா விடயத்தில் இலங்கையின் சட்டம் தலைகீழாக மாற்றப் பட்டுள்ளது.

வெள்ளைக்கொடி வழக்கில் பெட்ரீகா ஜேன்ஸ் வழங்கிய சாட்சியம் காரணமாகவே பொன்சேகாவிற்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பொர்ன்சேகாவுடன் நடைபெற்ற நேர் காணல் ஒன்றின் போது வெள்ளைக்கொடியுடன் வந்தவர்களை சுட்டுக் கொல்லுமாறு பாதுகாப்பு செயலாளர் உத்தர விட்டார் என பெட்ரீகா ஜேன்ஸ் பொன்சேகாவிடம் கேட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்த பொன்சேகா அவ்வாறான தகவல் தனக்கு கிடைத்ததாக மாத்திரமே கூறியிருந்தார். இந்த நேர்காணலை ஊடகவியலாளர் பத்திரிகை யில் வெளியிட்டார். இந்த பதில் காரணமா கவே சரத் பொன்சேகா சிறையில் அடை க்கப்பட்டார்.

இவ்வாறான பதில் அளித்த ஒருவரை சிறையில் அடைக்க உலகில் எந்த நாட்டில் சட்டங்கள் இல்லை.

அடிப்படையற்ற காரணத்தை கொண்டு உலகில் எந்த நாடும் எவருக்கும் தண்டனை வழங்கியதில்லை. சரத் பொன்சேகா கூறியது போன்ற கதையை நானும் கேட்டுள்ளேன். எனினும் இலங்கையில் உள்ள எந்தச் சட்ட மூலத்திற்கு அமைவாகவும் சரத் பொன் சேகாவுக்கு இந்தத் தண்டனை வழங்கப்படவில்லை. இந்தக் குற்றச்சாட்டு மறுபக்கம் போயிருந்தால் பெட்ரீகா ஜேன்ஸ் என்ற ஊடகவியலாளரே குற்றவாளியாகியிருப்பார். இவ்வாறான தவறான தீர்ப்பு வழங்கப்பட்டமை குறித்து முன்னாள் பிரதம நீதியரசர் என்ற வகையில் நான் வெட்கப்படுகின்றேன்.

இப்படியான வழக்குகள் ட்ரயல் அட்பார் முறையில் விசாரிக்கப்படுவதில்லை. முக்கியமான வழக்குகளே இந்த முறையில் விசாரிக்கப்படும்.

கிறிஸ்சாந்தி என்ற பெண்ணை இராணுவத்தினர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்ததன் காரணமா கவே முதல் முறையாக அந்த வழக்கு ட்ரயல் அட்பார் முறையில் விசாரிக் கப்பட்டது. எனினும் சரத் பொன்சேகாவை இறுக்கி அவரை சிறையில் அடைப்பதற்காகவே வெள்ளைக் கொடி வழக்கு ட்ரயல் அட்பார் முறையில் விசாரிக்கப்பட்டது எனவும் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

(அ-2)

## ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளுக்கான ஓய்வூதியம் தபாலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இவ்ஓய்வூதியம் பெறுவோர் தமக்குரிய தபாலக்ங்களில் ஓய்வூதியத்தை விரைவாக பெற்றுக்கொள்ளுமாறு கமத்தொழிற் காப்புறுதிச்சபை உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

# கல்வி நிர்வாக சேவையின் தமிழ்மொழி மூல வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்

## இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் காணப்படும் தமிழ் மொழி மூல வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சங்கத்தின் தலைவர் ஏ.பீ.க. மால்டீன் தெரிவித்ததாவது,

2010 ஆம் ஆண்டு ஜுன் மாதம் நடைபெற்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த மாதம் வெளியிடப்பட்டுள்ளன.

இப்பெறுபேறுகளின் படி பரீட்சைக்குத் தோற்றியோரில் 402 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 167 பேர் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பரீட்சைக்காக விண்ணப்பம் கோரப்பட்ட போது இலங்கை நிர்வாக சேவையில் தமிழ்மொழி மூலமாக 750 வெற்றிடங்கள் காணப்பட்டன.

இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் ஊடாக 45 வீதமும் திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் 55 வீதமுமான தெரிவு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தற்போது வெற்றிடங்களை நிரப்புவதில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானமானது பெரும் கவலையளிப்பதாக உள்ளது.

தற்போது வடக்கு- கிழக்கு மாகாணங்களில் 650 வெற்றிடங்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் காணப்படுகின்றன. இருந்தும் வெளியாகியுள்ள இப்பரீட்சைப் பெறுபேறுகளின் படி வடக்கு- கிழக்கு மாகாணங்களிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 73 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலருக்கே நேர்முகப்பரீட்சைக்கான அழைப்பு கடிதங்கள் கிடைக்கப் பெற்றதாகவும் அவர் கூறினார்.

இவற்றைக் கருத்திற்கொண்டு வடக்கு- கிழக்கு மாகாணங்களில் காணப்படும் 650 வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொள்ள வேண்டுமென இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கை அடங்கிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ-2)

## விளக்கமறியல்

மது போதையில் பொலிசாருடன் தகராறில் ஈடுபட்ட குருநகர்ப் பகுதியைச்சேர்ந்த இருவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதிவான் உத்தரவிட்டார்

இந்த சம்பவம் நேற்று காலை குருநகர் பகுதியில் இடம் பெற்றது.

குறித்த நபர்கள் இருவரையும் கைது செய்த யாழ்ப்பாணம் பொலிசார் நீதவான் மா. கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்தி னர்

வழக்கை விசாரித்த நீதவான் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலி சாருக்கு உத்தரவிட்டார்

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று மதியம் கைகலப்பில் ஈடுபட்ட இருவரில் ஒருவரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-6)

# குணரத்தினம், திமுத்து என யாரும் கைதாகவில்லை

## பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் எழுச்சி இயக்கத்தின் செயற்பாட்டு தலைவர் குமார் குணரத்ன, அதன் சர்வதேச இணைப்புச் செயலாளர் திமுத்து ஆட்டிகல ஆகியோரில் ஒருவர் கூட பொலிஸ் தடுப்பு காவலில் இல்லையென பொலிஸ் ஊடக பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் என்ற பெயரில் குறித்த தலைவர்கள் கடத்தப்பட்டமை குறித்து பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறீத்த தலைவர்கள் இருவரும் பொலிஸாரினால் கடத்தப்பட்டதாக பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்ற போதிலும் இவை அனைத்தையும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிராகரித்தார்.

இவர்களை விசாரிப்பதற்கு 5 குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# மகாபொல நிதியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல நிதியை அதிகரிப்பதற்கு தம்மாலான இயன்றளவு அனைத்து முயற்சிகளையும் எடுப்பதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியுள்ளார்.

கண்டி கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வரும் 265 ஆவது மகாபொல கண்காட்சியின் இரண்டாவது நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆரம்பித்து வைத்து உரையா ற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சில வருடங்களுக்கு முன்னர் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையிலும் அதன் பின் தொடர்ச்சியாகவும் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றவர்களுக்கு மட்டுமே அன்று புலமைப்பரிசில் நிதியுதவி வழங்கப் பட் டது.

ஏனைய மாணவர்களுக்கு வங்கிக்கடன் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் மறைந்த அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் திட்டத்தின் மூலம் வங்கிக் கடனுக்குப் பதிலாக மகாபொல புலமைப்பரிசில் திட்டம் முன்வைக்கப்பட்டது. இதன் காரணமாக இன்றுவரை சுமார் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து வந்துள்ளனர்.


ஆனால் தற்போது வழங்கப்படும் இத்தொகை மிகச்சிய தொகையாக இருப்பதன் காரணமாக பல்கலைக்கழக மாணவர்கள் பொருளாதார ரீதியான கஷ்டத்திற்கு உள்ளாகி வருவதை அவதானிக்க முடிகிறது. எனவே மகாபொல புலமைப் பரிசில் தொகையை அதிகரிக்க வேண்டும். அப்படி அதிகரிக்க ஏதும் வழிவகைகள் உண்டா எனத் தேடிப்பார்க்கின்றோம். இது விடயமாக நாம் எம்மாலான இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அது பயனளிக்காத பட்சத்தில் வங்கிக்கடன் போன்ற ஒரு நிதியியல் ரீதியான திட்டம் ஒன்றைக் கொண்டு வரவும் சிந்தித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



இலங்கை மத்திய வங்கியின் 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மத்திய வங்கியின் ஆளுநர் அஜிட் நிவாட் கப்ரால் நேற்றைய தினம் கையளித்ததைப் படத்தில் காணலாம்.

# இந்தியாவுக்கு எதிராக செயற்படும் தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுங்கள்

## பாகிஸ்தான் ஜனாதிபதியிடம் மன்மோகன் வலியுறுத்து



(புதுடில்லி)

டில்லிக்கு விஜயம் மேற்கொண்ட பாகிஸ்தான் ஜனா திபதி சர்தாரியும் பிரதமர் மன்மோ கன் சிங்கும் 40 நிமிடம் சந்தித்து பேசினார்கள். அப்போது இரு நாடு களுக்கும் இடையேயான நல்லுறவு நீடிக்க இந்தியாவுக்கு எதிராக செயல் படும் தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தினார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி ஒருநாள் பயண்மாக நேற்று முன்தினம் இந்தியா வந்தார்.

அவருடன் மகன் பிலாவல் புட்டோ, பாகிஸ்தான் உள்துறை மந்திரி ரகுமான் மாலிக் மற்றும் மூத்த அதிகாரிகள் வந்திருந்தனர்.

இதனையடுத்து பிரதமர் இல்லத்தில் சர்தாரியும் மன்மோகன் சிங்கும் தனியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இரு நாடுகளுக்கு இடையேயான பரஸ்பர உறவு மற்றும் பிராந்திய உலக அளவிலான பிரச்சினைகள் குறித்து இரு தலைவர்களும் பேசினார்கள். சந்திப்புக்கு பின் கூட்டாக நிருபர்களை சந்தித்து இருவரும் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாகவும் பயன் உள்ளதாகவும் அமைந்ததாக தெரிவித்தனர்.

இது தொடர்பாக மன்மோகன் சிங் வெளியிட்ட அறிக்கையில், தனிப்பட்ட முறையிலான சர்தாரியின் வருகையை சாதகமாக பயன்படுத்தி அவரை சந்தித்து இரு நாடுகளுக்கு இடையே உள்ள பரஸ்பர பிரச்சினைகள் குறித்து பேசினேன். இந்த பேச்சுவார்த்தை திருப்திகரமாக அமைந்தது. சர்தாரி என்னை பாகிஸ்தானுக்கு வரும்படி அழைப்பு விடுத்து இருக்கிறார். இந்த அழைப்பை ஏற்று பாகிஸ்தான் செல்வதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன் என்று குறிப்பிட்டு இருக்கின்றார்.

மேலும் இருநாடுகளுக்கு இடையே பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் இந்தியா- பாகிஸ் தான் நல்லுறவு சீரடைய வேண்டும் என்பதே நமது பொதுவான விருப் பம் என்ற கருத்தை சர்தாரியிடம் தெரிவித்ததாகவும் மன்மோகன்சிங் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தை பயனுள்ளதாக அமைந்ததாக குறிப்பிட்ட சர்தாரி இந்தியாவுடன் நல்லுறவை மேம்படுத்த விரும்புகிறோம். அனைத்து பிரச்சினைகள் குறித்தும் பேசினோம். மீண்டும். பாகிஸ்தான் மண்ணில் பேச்சுவார்த்தையை தொடருவோம் என்று நம்புவதாக குறிப்பிட்டார்.

காஷ்மீர் சியாச்சின் மற்றும் சர் கிரீக் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு படிப்படியான அணுகுமுறை மூலம் தீர்வு காண்பதற்கு இரு தரப்பிலும் ஒப்புக் கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### 40 நிமிட பேச்சுவார்த்தை

இந்த பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளுக்கு இடையே நல்லுறவு மேம்பட வேண்டுமானால் பாகிஸ்தான் மண்ணில் இருந்து இந்தியாவுக்கு எதிராக செயற்படும் தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்தாரியிடம் மன்மோகன்சிங் வெளிப்படையாக வற்புறுத்தினார்.

மும்பை தாக்குதல் சதித்திட்டத்துக்கு மூளையாக செயற்பட்ட லஸ்கர் இ தொய்பா தீவிரவாத இயக்கத்தின் நிறுவனதலைவர் ஹபீஸ், சயீத் உள்ளிட்டவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றும் மன்மோகன்சிங் வற்புறுத்தினார்.

இருநாட்டு மக்களுக்கு இடையேயான தொடர்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் பேசப்பட்டது. கடந்த 2011 ஆம் ஆண்டு ஒப்புக் கொள்ளப்பட்ட தாராள விசா வழங்குவதற்கான ஒப்பந்தத்தை உள்துறை செயலாளர்கள் பேச்சுவார்த்தையின் போது நிறைவேற்றவும் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தனது குழுவினருடன் ராஜஸ்தான் மாநிலத்தில் பிரசித்தி பெற்ற அஜ்மீர் தர்காவுக்குச் சென்று பிரார்த்தனை நடத்தினர். பின்னர் சர்தாரி பாகிஸ்தான் புறப்பட்டுச் சென்றார்.

இதேவேளை பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியின் மகனான பிலாவல், ராகுல் காந் தியை சந்தித்து பேசினார். பிரதமர் மன்மோகன்சிங்கின் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின், போது ராகுல்காந்தி மீண்டும் இந்தியாவுக்கு வர வேண்டும் என்று பிலாவலை கேட்டுக் கொண்டார். அதை ராகுல் ஏற்றுக் கொண்டார். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவின் மரணத்துக்கு பின்பு பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவராக பிலாவல் நியமிக்கப்பட் டார்.

பிலாவல் புதுடில்லி பாலம் விமான நிலையத்துக்கு வந்திறங்கிய போது டுவிட்டரில் கருத்து தெரிவித்த அவர், கடவுளே சிறந்தவர். இந்தியாவில் அமைதி தவழட்டும். முதல் முறையாக டில்லியில் வந்திறங்கியுள்ளேன் என்று தெரிவித்தார்.

அத்துடன் சர்தாரியின் இந்திய பயணத்தை சீனா வரவேற்றுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் இடையே எல்லை பிரச்சினை நீடித்துவரும் நிலையில் இருதலைவர்களும் சந்தித்து பேசி இருப்பதை வரவேற்பதுடன் பாராட்டுவதாக சீனா தெரிவித்துள்ளது. இந்த சந்திப்பு இரு நாடுகளிடையே நல்லுறவை வளர்ப்பதுடன் தெற்காசியாவில் அமைதி நிலவ உதவும் என்றும் சீனா தெரிவித்துள்ளது. (அ-2)

## கடலட்டை கடத்தல் முயற்சி முறியடிப்பு

மண்டபம் அருகே கடல் மார்க்கமாக இலங்கைக்கு கடல் அட்டை கடத்த முயன்ற நபர்களை பொலிசார் தேடி வருகின்றனர். நேற்று முன்தினம் இரவு மண்டபம் பொலிசார் ரோந்து சென்ற போது மண்டபம் கேம்ப் அருகே மணல் மேட்டுப்பகுதியில் ஒரு இராணுவத்தினரின் வாகனம் நின்றது . வாகனத்தை சோதனையிட்ட போது இலங்கைக்கு கடத்துவதற்காக வைத்திருந்த எட்டு இலட்ச ரூபாய் மதிப்புள்ள 65 கிலோ கடல் அட்டை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. இதையொட்டி கடத்தலில் ஈடுபட்டவர்களை பொலிசார் தேடிவருகின்றனர். (அ-2)



ஆந்திரா, ஐதரபாத்தில் இருபிரிவினருக்கிடையே ஏற்பட்ட திடீர் மோதல் கலவரமாக வெடித்தது. இதனால் வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டன. கல்வீச்சு சம்பவங்களும் நடந்தன. நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிசார் குவிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

## பாரதச் செய்தி

## சர்தாரி வருகையால் இந்தியா பாகிஸ்தான் உறவு மேம்படும்

### காஷ்மீர் முதல்வர் தெரிவிப்பு

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டதால் இருநாடுகள் இடையிலான உறவு வலுப்படும் என்று காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா கூறியுள்ளார்.

ஸ்ரீநகரில் நேற்று முன்தினம் இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

சர்தாரியின் இந்தியப் பயணம் இருநாடுகள் இடையே சுமுகமான உறவை மேம்படுத்தும் முயற்சியை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது. இதைத் தவிர சர்தாரியின் இந்தப் பயணத்தில் நான் பெரிதாக வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை.

காஷ்மீர் பிரச்சினைக்குத்தான் முன்னுரிமை என்ற விடயத்தை பாகிஸ்தான் எடுக்கவில்லை. உறவு மேம்பட்டுள்ளதையே இது காட்டுகிறது.

காஷ்மீர் பற்றி நாம் பாகிஸ்தானிடம் பேசுவதில்லை. அதற்காக அது முக்கியத்துவம் இல்லாத விடயம் என்று கூறிவிடமுடியாது.

இந்தியா- பாகிஸ்தான் உறவில் காஷ்மீர் நீண்டகாலப் பிரச்சினையாக உள்ளது என்றார் ஒமர் அப்துல்லா தெரிவித்தார். (அ-2)

## நந்தன புதுவருடத்தில் ஜெயாவுக்கு ஜெயம்

### ஜோதிடர்கள் கணிப்பு

வெள்ளிக்கிழமை தேய்பிறை எட்டாம் நாள் பிறக்கும் நந்தன ஆண்டால் காங்கிரஸின் ஆட்சி கவிழவும் தேர்தல் நடைபெறவும் வாய்ப்புக்கள் உள்ளதாக பிரபல ஜோதிடர்கள் கணித்துள்ளார்கள். அதன் விபரம் வருமாறு,

**சந்தனலிங்கம் ரமேஷ் திருவல்லிக்கேணி**

இந்த ஆண்டு ஆரம்பமே பகலில் கடும் வெயிலும் இரவில் பெரும் மழையுமாக இருக்கும். மத்திய ஆட்சி யில் குழப்ப நிலை நீடிக்கும். ஆட்சி கவிழவும் தேர்தல் வரவும் வாய்ப்பு உண்டு

முதல்வர் ஜெயலலிதா கட்சியை வளர்க்கும் பணியிலும் அதன் கட்டுக் கோப்பு கலையாமல் காக்கும் பணியிலும் தொடர்ந்து ஈடுபடுவார். தேசிய அரசியலில் முக்கிய அங்கம் வகிப்பார்.

**சிவகுரு ரவி விழுப்புரம்**

பல இடங்களிலும் அரசியலில் ராஜகலகம் நிகழும். முக்கிய கட்சிகளில் பிளவு, தலைவர்கள் திடீர் மரணம் ஆகியன நிகழும். அனைத்து துறைகளிலும் பெண்கள் சாதனை புரிவர். அரசியலில் சென்னை மூலம் டில்லி ஆட்டுவிக்கப்படும். முதல்வர் ஜெயலலிதா வழக்குகளில் இருந்து விடுபடுவார். பதுக்கல் பணம் வெளிவரும். மொத்தத்தில் கெட்டவர்களின் கொட்டம் அடக்கப்படும். நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலை பெறும்.

**அ.செ.ந.சோமசேகரன், ஆற்காடு**

நந்தன ஆண்டு ஜெயலலிதாவுக்கு ஜெயமளிக்கும். வைகோவின் போராட்டம் தொடரும். சோனியா உடல் நிலை பாதிப்படையும். அத்வானிக்கு ராஜ யோகம் உண்டு.

ராகுலின் செல்வாக்கு மேலோங்கும் கம்யூனிஸ்ட்கள் தேய்வடையும். மாநிலக் கட்சிகளின் ஆதிக்கம் மேலோங்கும்.

அண்டை நாடுகளின் தொல்லை அதிகரிக்கும். முல்லைப் பெரியாறு இழுபறி நீடிக்கும். சேது சமுத்திர திட்டம் வீணாகும் என கணிக்கப்பட்டது. (அ-2)

உங்கள் சிந்தனையை மறைக்கவேண்டாம். நேர்மையான முறையில் வெளிப்படையாகப் பேசுங்கள். –ஹோமர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் வேண்டாமோ!

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பேச்சுவார்த்தை நடத்தும் போது மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என்ற கருத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் சிலரிடம் இருப்பதாக அறியமுடிகின்றது.

அரசும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இனப்பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தும் என்ற நம்பிக்கை இப்போது இல்லை என்றே கூற வேண்டும்.

அப்படியானதொரு தேவையும் எதிர்காலத்தில் ஏற்படமாட்டாது என்று கருதமுடியும்.

இருந்தும் பேச்சுவார்த்தை என்ற ஒன்று இடம்பெறுமாக இருந்தால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுவது போல், மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் கட்டாயமானதாகும்.

இதில் எந்த மறுதலிப்புக்கும் இடமில்லை. ஆனாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒருசில தலைவர்கள் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை எனக் கருத்துக் கூறுவதானது, ஏற்புடையதல்ல.

இவ்வாறான கருத்துக்கு அவர்கள் எந்த நியாயப்பாடுகளையும் முன்வைக்கமுடியாது.

இனப்பிரச்சினை தொடர்பில் நடந்த பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தமைக்கு பலமான நாடொன்றின் மத்தியஸ்தம் இல்லாமையே காரணமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசும் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தன.

ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட தீர்வுகள் என்ன? பேச்சுவார்த்தையின் போது இணங்கிக் கொண்ட விடயங்கள் ஏதேனும் செய்து முடிக்கப்பட்டனவா? இல்லவே இல்லை.

அவ்வாறாயின் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என்ற முடிபுக்கு எங்ஙனம் வர முடியும்?

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என்று அரசாங்கம் கூறமுடியும். இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக அரசு அப்படிக் கூறிக் கொள்ளலாம்.

ஆனால், இங்கு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என்று கூட்டமைப்பு கூறுமாயின், எங்கோ! ஏதோ! பிரச்சினை உண்டென்றே கூற வேண்டும்.

ஜெனிவாவுக்குச் செல்வதில்லை என்ற முடிபை கூட்டமைப்பு எடுத்தபோது அதற்கான வரவேற்பும் பாராட்டும் அரச பக்கத்திலிருந்தே நிறையக் கிடைத்தது.

அரசுக்குச் சார்பாக கூட்டமைப்பு நடந்து கொண்டமையால் அத்தகையதொரு பாராட்டை கூட்டமைப்பு அரசிடம் இருந்து பெற்றுக் கொண்டது.

இப்போது மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என்று கூட்டமைப்பு கூறுவதன் மூலம் அரசின் மற்றொரு பாராட்டையும் வாழ்த்தையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தட்டிக் கொள்ள முற்படுகிறது. எதுவாயினும் அரசும் கூட்டமைப்பும் இன்னொரு பேச்சுவார்த்தையில் சந்திக்கின்ற வாய்ப்பு இல்லையாயினும் அத்தகையதொரு நிலைமை எதிர்பாராதவாறு ஏற்பட்டால், அமெரிக்காவை அல்லது பிரிட்டனை மூன்றாந்தரப்பு மத்தியஸ்தமாகக் கொண்டு பேச வேண்டும்.

அவ்வாறு பேசுவதை தமிழ் மக்கள் ஆணித்தரமாக எடுத்துக் கூறத் தயங்கக்கூடாது.

# மிஹின் எயார் விமானம் அவசரமாக தரையிறக்கம்

(கொழும்பு)

மிஹின் எயார் நிறுவனத்திற்கு சொந்தமான விமானமொன்று கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

மலேசியாவிற்கு பயணம் செய்ய இருந்த விமானமே இவ்வாறு தரையிறக்கப்பட்டுள்ளது. திடீரென ஏற்பட்ட இயந்திரக்கோளாறே இவ்வாறு விமானம் அவசரமாக தரையிறக்கப்படக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

விமானத்தின் சரக்கு களஞ்சியப் பகுதியில் திடீரென தீப்பற்றிக் கொண்டதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. விமான விபத்தினால் ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. தீ பற்றிக்கொண்டதனால் எவருக்கும் காயங்களோ அல்லது உயிர்ச்சேதமோ ஏற்படவில்லை என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலேசியா நோக்கிச் சென்ற மிஹின் லங்கா விமானத்தில் தீ ஏற்பட்டதாக வெளியான செய்தியில் உண்மை இல்லை என மிஹின் லங்கா நிறுவனத்தின் வர்த்தகத்துறை பணிப்பாளர் ரொஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

மிஹின் லங்கா விமானத்தில் தீ ஏற்பட்டு தரையிறக்கப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்ட செய்தி குறித்து மிஹின் லங்கா நிறுவனத்திடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை 7.20 அளவில் இந்தோனேசிய - ஜகார்த்தா நோக்கி பயணித்த விமானத்தில் பொருள் எடுத்துச் செல்லும் பகுதியில் தீ ஏற்பட்டதாக சந்தேகித்து விமானம் புறப்பட்டு ஒரு மணித்தியாலத்தின் பின் அதனை தரையிறக்க விமானி நடவடிக்கை எடுத்துள்ளார்.

எனினும் விமானத்தில் தீ ஏற்படவில்லை எனவும் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு என்ன என பொறியிலாளர்கள் ஆராய்ந்து வருவதாகவும் மிஹின் லங்கா நிறுவனத்தின் வர்த்தகத்துறை பணிப்பாளர் ரொஹான் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இதனால் ஜகார்த்தா நோக்கிச் செல்ல விருந்த விமானம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு புறப்படும் என அவர் கூறியுள்ளார்.

மலேசியா நோக்கிச் சென்ற மிஹின் லங்கா விமானம் தீ காரணமாக திடீரென தரையிறக்கப்பட்டதாக நேற்று காலை அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டது.

இது குறித்து கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளிடம் வினவிய போது விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டதாக உறுதி செய்தனர். (அ-2)

# புலிகள் மீதான தடைநீக்க வழக்கு ஏப்ரல் 11ந் திகதிக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கக் கோரி வைகோ தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டு மனு மீதான இறுதிக்கட்ட விசாரணை ஏப்ரல் 11ஆம் திகதி நடைபெறும் என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் இயக்கத்துக்கு 1992 ஆம் ஆண்டு மத்திய அரசு தடை விதித்தது. இத்தடை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நீடிக்கப்பட்டு வருகிறது. இத்தடையை நீடிப்பது தொடர்பாக அமைக்கப்பட்ட மத்திய தீர்ப்பாணையத்திடம் 2010ஆம் ஆண்டு வைகோ மனுவொன்றைத் தாக்கல் செய்தார். இதில் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்க வேண்டும் என்று வைகோ கோரியிருந்தார். ஆனால் வைகோவின் மனுவை தீர்ப் பாயம் தள்ளுபடி செய்தது.

இந்த வழக்கின் மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் வைகோ மேல்முறையீடு செய்தார். இந்த மனு மீதாக விசாரணை நீதிபதிகள் தர்மராஜ், வேணுகோபால் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

விசாரணையின் போது வைகோ இலங்கையில் நடந்த சம்பவங்களை சுட்டிக்காட்டி விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவில் தடைவிதிப்பது சரியல்ல. 2010 இற்குப் பின் விடுதலைப் புலிகளால் இந்தியாவில் எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை என்பதை கருத்தில் கொள்ளவேண்டும் என வாதிட்டார்.

வழக்கறிஞர் இராதாகிருஸ்ணனும், மத்திய அரசின் வழக்கறிஞர் ரவீந்திரனும் வாதிட்டனர். இரண்டரை மணி நேரம் நடந்த இரு தரப்பு விவாதத்தையும் கேட்ட பிறகு இறுதிக்கட்ட வழக்கு விசாரணையை ஏப்ரல் 11ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர். (ந-8,11)

# மானிப்பாய் அறநெறிப் பாடசாலை பரிசளிப்பு விழா இன்று

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழா -2012 இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் அறநெறி பாடசாலை அதிபர் வே.தம்பாபிள்ளை தலைமையில் மருதடி விநாயகர் ஆலய அறநெறி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார திணைக்கள ஓய்வு நிலை பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கமும், விசேட விருந்தினராக மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் எஸ்.கே. உதயசூரியரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நு)

# தடுப்பு முகாமுக்கு தீவைத்த இலங்கையருக்கு 3 வருடசிறை

துபாயிலுள்ள தடுப்பு நிலையமொன்றில் சிகரெட் வழங்கப்படாததால் அந்நிலையத்திற்கு தீவைத்த குற்றத்திற்காக இலங்கை யர் ஒருவர் உட்பட 8 பேருக்கு 3 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்சை சேர்ந்த ஐவர், ஈரானியர் ஒருவர், பாகிஸ்தானியர் ஒருவரும் இவர்களில் அடங்குகின்றனர்.

இவர்கள் ஏனைய கைதிகள் சகிதம் அல் ரபா பொலிஸ் நிலையத்திலுள்ள தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த போது தமக்கு சிகரெட் வழங்கக் கோரியும் அதிகாலை 2 மணி வரை தொலைபேசியை பயன்படுத்த அனுமதி கோரியும் கடந்த வருடம் ஓகஸ்ட் 17 ஆம் திகதி உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

அடுத்த நாள் இவர்கள் தடுப்பு முகாமிலுள்ள கமராக்களை கடதாசியினாலும் பற்பசையினாலும் மறைத்துவிட்டு பற்றரிகள், வயர் மூலம் தீயை உருவாக்கியதாகவும் கடதாசியில் தீயை பற்றவைத்து மெத்தைகள், போர்வைகள் ஆகியவற்றையும் தீக்கிரையாக்கியதாகவும் மேற்படி பாகிஸ்தான் பிரஜை நீதிமன்றில் தெரிவித்தார். (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## எல்லோரும் உயர்ந்தவர்தான்



நமது உள்ளங்களைத் திறந்து வைத்திருந்தால் உலகிலுள்ள நல்ல நினைவுகள் அனைத்துக்கும் உரிமையுள்ளவர்களாகி விடுவோம்.

நாம் செலுத்தும் பணிவுக்கும் மரியாதைக்கும் பிரதிபலனாக இறைவன் ஏதாவது ஒரு நலனைத் தரவேண்டும் என்று நாம் எதிர்ப்பார்க்கின்ற வரை உண்மையான பக்தி ஏற்படாது.

தன்னை அடக்கியாளப் பழகியவன் வெளியுலகிற்கு வசப்படமாட்டான். அடிமைத்தனமும் அவனிடம் இல்லை. அத்தகையவனே உலகத்தில் வாழத்தகுதி பெறுகிறான்.

மக்களின் எண்ணிக்கையே செல்வம். மாறாக வறுமை முக்கியமல்ல. சொல், செயல், சிந்தனைகளால் ஒன்றுபட்டு விளங்கும் ஒரு சிலரால் உலகையே ஆட்டிவைக்கமுடியும்.

கடலைப்பார் அலையைப்பாராதே. எறும்பிற்கும் தேவதூதனுக்கும் இடையில் வேற்றுமை இல்லை. ஒவ்வொருவனும் தனது நிலையில் பெரியவனே.

இயற்கையை எதிர்த்துப்போராடி வளரவேண்டும். இயற்கையோடு புரியும் ஓயாப்போரே மனித முன்னேற்றத்தின் படிக்கல்லாகும்.

# கடவுள் நம்பிக்கை இல்லாத தொழில்நுட்பம் ஆபத்தானது

## போப்பெனடிக் வலியுறுத்து

கடவுள் நம்பிக்கை, ஒழுக்க நெறிகள் இல்லாத தொழில்நுட்பம் உலகத்திற்கு ஆபத்தானது என்று ஈஸ்டர் உரையில் போப் பெனடிக் வலியுறுத்தியுள்ளார்.

இயேசு உயிர்த்தெழுந்து வந்த ஈஸ்டர் பண்டிகை நேற்று முன்தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு வாடிகன் சென்பீற்றர் பசிலிகாவில் சிறப்பு பிரார்த்தனை இரவு நடந்தது. இதில் போப் பெனடிக் சிறப்பு திருப்பலிநடத்தினார். அப்போது அவர் கூறியதாவது,

எது நல்லது, எது தீயது என்று தெரியாமல் இருக்கிறோம். இருட்டுக்கு ஒளிக்கும் உள்ள வித்தியாசம், கடவுளுக்கும் சாத்தானுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிய வேண்டும்.

இன்றைய உலகில் கடவுள் பற்றிய விழிப்புணர்வு, உயர்ந்த ஒழுக்க நெறிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு குறைந்து வருகின்றது. இந்த விழிப்புணர்வு இல்லாத தொழில்நுட்பம் உலகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்று தெரிவித்தார். (அ-2)

# வடகொரியா 3 ஆவது அணுஆயுத சோதனை நடத்த த்யாராகின்றது

வடகொரியா கடந்த 2006 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் அணு ஆயுதசோதனை நடத்தியது. தற்போது 3 ஆவது சோதனை நடத்த தயாராகி வருவதாக தென்கொரியாவை சேர்ந்த செய்தி நிறுவனம் கூறியுள்ளது. அதில் வடகொரியாவின் வடகிழக்கு பகுதியில் இருக்கும் புங்க்யி-ரி என்ற இடத்தில் சுரங்கம் அமைக்கும் பணி நிறைவடையும் நிலையில் இருப்பதாகவும் அதனால் அங்கிருந்து இந்த சோதனை நடத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வடகொரியா இந்த வாரத்தில் றொக்கெட் ஏவ திட்டமிட்டு இருக்கிறது. இதற்கு தென்கொரியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இந்நிலையில் வடகொரியா 3 ஆவது அணு ஆயுத சோதனை நடத்த போவதாக புதிய தகவல் வெளிவந்துள்ளது. (அ-2)

# கேபிள் காரில் ஏற்பட்ட கோளாறினால் மக்கள் பரிதவிப்பு

சுவிற்சர்லாந்து செயின்ட் மோரிட்ஸ் ரெசார்ட் பகுதியில் உயர்ந்த பனிமலைகள் உள்ளன. இவற்றை சுற்றிப் பார்க்க உலகளவில் இருந்து சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றனர். பனி மலையை சுற்றிக்காட்ட 10 ஆயிரம் அடி உயரத்தில் செல்லும் கேபிள் கார் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 75 சுற்றுலாப் பயணிகள் பனிமலையை சுற்றிப்பார்க்க நேற்று முன்தினம் கேபிள் காரில் சென்றனர். கிளிட்ஸ் பனிமலை பகுதியில் கேபிள் கார் சென்ற போது திடீரென ஏற்பட்ட கோளாறு காரணமாக நின்றுவிட்டது.

பயணிகள் பதற்றம் அடைந்து அலறினர். அந்தரத்தில்கார் தொங்கிக் கொண்டிருந்தது. தகவல் அறிந்து மீட்புப் படையினர் ஹெலிகொப்டர்களில் விரைந்து சென்றனர். இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், கேபிள் காரில் இருந்த பயணிகளை மீட்க 3 மணி நேரம் ஆனது. யாருக்கும் காயம் இல்லை என்றனர். (அ-2)




# ஆயுதங்களை கீழே போடுவதாக உறுதியளித்தால் மட்டுமே இராணுவத்தை வாபஸ் பெற முடியும்

## சிரிய அரசு நிபந்தனை விதிப்பு



ஆயுதங்களை கீழே போடுவதாக போராட்டக்காரர்கள் எழுத்துபூர்வமாக உறுதி அளித்தால் தான் போராட்டத்தை ஒடுக்க குவிக்கப்பட்ட இராணுவத்தை வாபஸ் பெற முடியும் என சிரிய அரசு அறிவித்துள்ளது. சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான போராட்டம் ஓராண்டை கடந்த போதிலும் இன்னமும் அவர் பதவி விலக மறுத்து வருகின்றார். போராட்டக்காரர்களை இராணுவம் கொன்று குவித்து வருகின்றது. இதனால் ஏற்படும் கலவரங்களில் பலியானோர் எண்ணிக்கை 9 ஆயிரத்தை தாண்டி உள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது,

இந்நிலையில் ஐ.நா. சபை முன்னாள் பொது செயலாளர் கோபி அனான் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதன்படி இன்று முதல் போர் நிறுத்தம் செய்வதென போராட்டக்காரர்களும் சிரிய அரசும் ஒப்புக் கொண்டனர்.

எனினும் போராட்டக்காரர் களை ஆயுதங்களை கீழே போடுவதாக எழுத்துபூர்வமாக உறுதி அளிக்க வேண்டும் என சிரிய அரசு நிபந்தனை விதித்துள்ளது. இதுவரை உறுதீ அளிக்கப்பப்படவில்லை.

இந்நிலையில் சிரியா வெளி விவகாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

கோபி அனான் உறுதி அளித்தபடி ஆயுதங்களை கீழே போடுவோம் என போராட்டக்காரர்கள் எழுத்துபூர்வமாக தெரிவிக்காத வரை இராணுவத்தை வாபஸ் பெற முடியாது. மேலும் கட்டார், சவுதி அரேபியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் போராட்டக்காரர்களுக்கு எவ்வித உதவியும் வழங்கமாட்டோம் என்றும் உறுதி அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைல்யில் இரு தரப்பினரும் போரரை முடிவுக்கு கொண்டு வர ஒத்துழைக்க வேண்டுமென்று கோபி அனான் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கிலானிக்கு பாடசாலையில் கல்வி புகட்டிய ஆசான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானியின் பாடசாலை ஆசிரியர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு தமிழராவார்.

பாகிஸ்தான் பிரதமர் மூல்தான் நகரிலுள்ள லசால் உயர்நிலைப் பாடசாலையில் கிலானி படித்த போது சகோதரர் இம்மானுவேல் நிகோலஸ் என்பவர் அவருக்கு அறிவியல், கணிதம் உள்ளிட்ட பாடங்களைப் பயிற்றுவித்திருக்கின்றார். தமிழரான இம்மானுவேல் யாழ்ப்பாணத்தையொட்டிய ஊர்காவற்றுறை தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்.

பாடசாலையில் சேர்ந்த முதல் ஆண்டிலேயே கிலானியை எனக்குத் தெரியும். அப்போது அவர் 9 ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். அந்த வகுப்புக்கு நான் பாடம் எடுத்தேன்.

கிலானி 10 ஆம் வகுப்புச் சென்ற போது நானும் 10 ஆம் வகுப்பு மாற்றப்பட்டேன். மாணவப் பருவத்திலேயே கிலானி ஒரு கடின உழைப்பாளி என்று தனது ஆசிரியப் பணி அனுபவங்களை இம்மானுவேல் நினைவு கூர்ந்தார். எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் அனைவரும் சமம் என்கின்ற உணர்வு அப்போது எங்களுக்குள் இருந்தது. இப்போது பல்வேறு பிரிவினைகளைக் கொண்ட நாட்டை ஒன்றுபடுத்தும் தலைவராக கிலானியை நான் காண்கின்றேன் என்று அவர் நெகிழ்ச்சியுடன் கூறினார்.

இப்போது 73 வயதாகும் இம்மானுவேல் இலங்கையிலுள்ள டிலசால் கிறிஸ்தவ சகோதாரர் அமைப்பு மூலம் பாகிஸ்தானில் பணியாற்ற சென்றவர்.

1979 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இருந்து திரும்பினார். 40 ஆண்டுகளுக்கு பின்னர் 2008 ஆம் ஆண்டு கொழும்பு நகரில் நடந்த சார்க் உச்சி மாநாட்டின் போது கிலானியைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்கு மீண்டும் கிடைத்தது.


தம்மைச் சந்திக்க வரும்படி கிலானியே என்னை அழைத்திருந்தார். வாகனமும் அனுப்பினார். அவர் தங்கியிருந்த விடுதிக்கு சென்ற போது இவர் மிகவும் கண்டிப்பான ஆசிரியர் என்று என்னை அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் பாகிஸ்தானின் பதக்கம் என்கிற விருதுக்கு எனது பெயரை பரிந்துரைத்தார்.

இந்த ஆண்டு அந்த விருதை பெற்றுக்கொண்டேன் என்றார் சகோதரர் இமானுவேல். (அ-2)

# பெரு நாட்டு சுரங்கத்தில் ஒன்பது பேர் சிக்கி தவிப்பு

பெரு நாட்டில் தங்கம் மற்றும் செம்பு ஆகியவற்றை எடுக்கும் சுரங்கங்கள் இருக்கின்றன. இந்த சுரங்கங்களில் அடிக்கடி நிலச்சரிவு காரணமாக விபத்துகள் ஏற்படுவது வழக்கம். இது போன்ற அந்நாட்டின் தென்பகுதி காபிசா என்ற இடத்தில் உள்ள சுரங்கத்தில் நிலச்சரிவு ஏற்பட்டு சுமார் 200 மீற்றர் ஆழத்தில் 9 தொழிலாளர்கள் சிக்கி தவிக்கிறார்கள்.

இவர்களை உயிருடன் மீட்கும் நடவடிக்கையில் நிவாரண குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுவருகிறார்கள். குழாய் மூலம் இந்த தொழிலாளர்களுக்கு திரவ உணவு மற்றும் ஒட்சிசன் கொடுத்து வருகிறார்கள். (அ-2)



ஜப்பான் நாட்டு முன்னாள் பிரதமர் யுகியோ ஹடோயாமா (வலது), ஈரான் ஜனாதிபதி முகம்மது அகமதி நிஜாத்தை டெஹ்ரானில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# அணுவாயுதங்களை தயாரிக்கவில்லையென நிருபித்தால் திட்டங்களை ஏற்றுக்கொள்வோம்

## ஒபாமா தெரிவிப்பு



ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிக்கவில்லை என்பதை நிருபித்தால் அதன் மக்கள் நலனுக்கான அணுசக்தித் திட்டங்களை ஏற்றுக்கொள்வோம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதங்கள் தயாரிப்பதை ஈரான் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் இஸ்ரேல் உட்பட பல நாடுகள் கூறிவருகின்றன. இதை ஏற்க மறுத்துவரும் ஈரான் மீது பொருளாதார தடையும் விதிக்கப்பட்டுள்ளது.


ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளை அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கிடையே ஈரான்மீது போர் தொடுக்கப்போவ தாகவும் இஸ்ரேல் எச்சரித்தது.

இந்நிலையில் ஈரானில் செயற்படுத்தப்படும் அணுசக்தித் திட்டங்களைப் பார்வையிட ஐ.நா. குழுவை அனுமதிக்கவேண்டும் என்று பல நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. மேலும் துருக்கி உட்பட சில நாடுகள் சமரச முயற்சியிலும் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் அணு ஆயுதங்களை தயாரிக்கவில்லை என்பதை ஈரான் நிரூபித்தால் அதன் மக்கள் நலனுக்கான அணுசக்தித் திட்டங்களை ஏற்றுக்கொள்வோம். மேலும் இப்பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார்.

இந்தத் தகவலை துருக்கி பிரதமர் தயிப் ஏர்டோகனிடம் கூறி அதை சுப்ரீம் தலைவர் அலிகமேனியிடம் தெரிவிக்கும்படி ஒபாமா கேட்டுக்கொண்டுள்ளார். (அ-2)

# ஆஸிக்கு எதிராக 449 ஓட்டங்களை குவித்தது மே.தீவுகள்



அவுஸ்திரேலியா – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 44 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அவ் அணி சார்பாக டேவிட் வோர்னர் மற்றும் எட் கோவுன் முறையே 27 மற்றும் 13 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

முன்னதாக 3 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 2-ம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடர்ந்தும் சிறப்பாக ஆடியது.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சாளர்கள் விக்கெட்டுக்களை கைப்பற்ற தடுமாறிய அதேவேளை, எல்லா மேற்கிந்தியத் தீவுகளின் துடுப்பாட்ட வீரர்களும் ஓட்டங்களைக் குவித்தனர்.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 449 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் தடுமாறிய டரன் பிராவோ 51 ஓட்டங்களைப் பெற்றார். தனது 25-வது சதத்தைப் பூர்த்தி செய்த சிவ்நரைன் சந்தர்போல் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களைப் பெற்றதோடு, அணித் தலைவர் டரன் சமி 36 பந்துகளில் 41 ஓட்டங்களைப் பெற்றார்.

முதல்நாள் ஆட்டத்தில் கீர்க் எட்வோட்ஸ் 61 ஓட்டங்களையும், கிறோய்க் பாரத்வைட் 57 ஓட்டங்களையும் பெற்று சிறந்த அடித்தளத்தினை வழங்கியிருந்தனர்.

பந்துவீச்சில் எந்தவொரு அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களாலும் சிறப்பாக பந்துவீசி விக்கெட்டுக்களை கைப்பற்ற முடியவில்லை.

டேவிட் வோர்னர், ரியான் ஹாரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், பென் ஹில் பென்ஹியூஸ், நேதன் லயன், ஷேன் வோட்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

2-ம் நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலிய அணி 405 ஓட்டங்களால் பின்னிலை வகித்த நிலையில் 3-ம் நாளாக நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது.

இதில் அவுஸ்திரேலிய அணி ஒரு கட்டத்தில் 86 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்று துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தது.

இப்போட்டியின் 4-ம் நாள் இன்றாகும்.



# கடைசி பந்தில் சிக்ஸர் அடித்து மும்பை அணி அபார வெற்றி

ஐ.பி.எல். போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும் டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் நேற்று மோதின. இந்தப் போட்டி விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான்சார்ஜர்ஸ் அணியின் தலைவர் குமார் சங்கக்கார முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

மும்பை அணியின் தலைவர் ஹர்பஜன் சிங்கிடம் கேட்டதற்கு நாணயச்சுழற்சியில் வென்றிருந்தால் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்திருப்பேன். இருப்பினும் டெக்கான் அணியை 150 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்த முயற்சிப்போம் என்றார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது சச்சினுக்கு காயம் ஏற்பட்டது. இதனால் அவர் முழுமையாக குணமடையாததால் நேற்றைய போட்டியிலும் ஆடவில்லை.

டெக்கான் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களாக பார்த்திப் பட்டேலும் தவானும் களமிறங்கினர். பார்திப் பட்டேல் ஒரு ஓட்டமெடுத்திருந்தபோது முனாப் பட்டேல் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.



இவரை அடுத்து வந்த பரத் சிப்லியும் முனாப் பட்டேலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இவரும் ஒரு ஓட்டத்தை எடுத்திருந்தார்.

இவரையடுத்து தவானுடன் டானியல் கிறிஸ்ரியன் ஜோடி சேர்ந்தார். தொடக்கத்தில் இரு விக்கெட்டை இழந்தாலும் தவான் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இறுதியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 138 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து 139 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 10 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட்டுகளை இழந்திருந்தாலும் பின் சுதாகரித்து அதிரடியாக விளையாடியது.

இறுதி ஓவரில் கடைசி பந்து வரை ஆடி அப்பந்தில் சிக்ஸர் அடித்து மும்பை இந்தியன்ஸ் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்ற சர்மா ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

**இன்றைய போட்டிகள்:**

மாலை 4 மணிக்கு பெங்களூரில் நடைபெறும் போட்டியில், பெங்களூர் எதிர் கொல்கத்தா அணிகளும்;

இரவு 8 மணிக்கு டில்லியில் நடைபெறும் போட்டியில் சென்னை எதிர் டில்லி டேர்டேவில் அணிகள் மோதுகின்றன.

# இந்தியா திரும்பினார் யுவராஜ்




புற்றுநோய் காரணமாக கடந்த 2 மாதம் அமெரிக்காவில் சிகிச்சையை முடித்துக்கொண்டு, இந்திய கிரிக்கெட் வீரர் யுவ்ராஜ் சிங் நேற்றுக்காலை 10 மணியளவில் புதுடில்லியை வந்தடைந்தார். விமான நிலையத்தில் தாயார் ஷப்னம் மற்றும் நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோர் யுவராஜை மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

மேலும் ஊடகவியலாளர்களின் கமெராக்களுக்கு காட்சி கொடுத்த பின்னர் காரில் புறப்பட்டுச் சென்றார். யுவராஜ் சிங் வந்திறங்கும்போது மிகவும் சாந்தமாகவும் சந்தோஷமாகவும் காணப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கு முன்பு டுவிட்டரில், இந்திய நண்பர்களையும், எனது குடும்பத்தினரையும் காண ஆவலாக இருப்பதாகவும், இன்னும் என்னால் பொறுக்க முடியாது எனவும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் கடந்த 10 தினங்களுக்கு முன்பு, சச்சின் அமெரிக்கா சென்று யுவராஜ் சிங்கை சந்தித்து நலம் விசாரித்ததும் குறிப்பிடத்தக்கது.

# சென்னை, மும்பை இம்முறை பட்டம் வெல்லாது ஜோதிடர்கள் கணிப்பு

ஐ.பி.எல் 5-வது சீசன் கோலாகலமாக தொடங்கி நடந்து வருகிறது.

தொடர்ச்சியாக 2 முறை பட்டம் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இம்முறை பட்டம் பெறும் முனைப்புடன் விளையாடி வருகின்றது.

அதேவேளையில் அதிரடி வீரர்களும், சகல துறை வீரர் பட்டாளங்களுடனும் உள்ள மும்பை அணியும் இம்முறை பட்டம் வெல்ல வேண்டும் என்ற இலட்சியத்துடன் விளையாடி வருகின்றது.

இந்த நிலையில் இந்த இரு அணிகளும் இம்முறை சம்பியன் பட்டம் வெல்ல வாய்ப்பில்லை என மும்பை ஜோதிடர்கள் கணித்துள்ளனர்.

காம்பீர் தலைமையிலான கொல்கத்தா அல்லது டிராவிட் தலைமையிலான ராஜஸ்தான் அணியே பட்டம் வெல்லும் என அவர்கள் கணித்துள்ளனர்.

கிரக ராசிப்படி காம்பீருக்குத் தான் அதிக வாய்ப்பு உள்ளதாக ஜோதிடர்கள் கருதுகின்றனர். இந்த இரு அணிகள் தவிர புனே, டில்லி, பெங்களூர் ஆகிய அணிகளுக்கும் வாய்ப்பு உண்டாம்.



வரலாற்று சிறப்புமிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவ படங்கள்

## தமிழினி தொடர்ந்து விளக்கமறியலில்

சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கும் வரை விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவு அரசியல் பொறுப்பாளர் தமிழினியை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சுப்பிரமணியம் சிவகாமி என அழைக்கப்படும் தமிழினி நேற்று சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டார்.

தமிழினி தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையின் முழு ஆவணமும் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இரகசிய பொலிஸார் நீதிமன்றில் குறிப்பிட்டனர்.

எனினும் சந்தேக நபர் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து சட்டமா அதிபர் இன்னும் ஆலோசனை வழங்கவில்லை என இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு பிரதம நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி தமிழினியை எதிர்வரும் மே மாதம் 07-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ரு-8;11)

## மக்களை பாதுகாக்க நான் இருக்கிறேன் —பொன்சேகா

மக்களைப் பாதுகாப்பதற்கு தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இரத்த பரிசோதனை அறிக்கையை வைத்திய அதிகாரிகளிடம் காண்பிப்பதற்காக சரத் பொன்சேகா நேற்றைய தினம் வைத்திய சாலைக்கு அழைத்துவரப்பட்டிருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அப்படி இருக்கையில், குமார் குணரட்ணம் மற்றும் திமுது ஆட்டிக்கல ஆகியோர் கடத்தப்பட்டமை கீழ்த்தரமான செயலாகும். இதனுடன் தொடர்பில்லை எனக் கூறி அரசாங்கம் இவற்றிலிருந்து தப்பிக்க முடியாது. தவறு இழைத்தவர்கள் அதிலிருந்து தப்பிக்கவும் முடியாது. அவர்களுக்கு எதிர்காலத்திலேனும் தண்டனை கிடைக்குமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரு-8,11)

## வடக்கில் இருந்து...

மே தினத்தை ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின அறைகூவல் வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவதேயாகும். வடக்கில் இராணுவம் நிரந்தரமாக இருக்கலாம் என கனவு காண முடியாது. எமது மண்ணில் நாங்கள் நிம்மதியாக உரிமையுடன் வாழ விரும்புகிளுறோம். அதற்காக நாம் எமது மக்கள் சார்ந்த போராட்டங்களை தீவிரப்படுத்த உள்ளோம். என்றார். (ரு-8;11)

## குணரட்ணம்...

கற்றார். பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவராக அவர் இருந்தார். குமார் இலங்கையில் இருக்கவில்லை என சிரேஷ்ட அரசாங்க அதிகாரியொருவர் கூறியுள்ளார். ஆனால் அவர் இலங்கையில் இருந்தார். எம்மோடு பேசினார். எம்முடன் வாழ்தார் என நாம் கூறுகிறோம். அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன.

மேற்படி அதிகாரி குணரட்ணத்தின் கடவுச்சீட்டை கோரியுள்ளார். அவரின் கடவுச்சீட்டு எங்குள்ளது என எமக்குத் தெரியாது ஆனால் அது அந்த அதிகாரியிடமே இருக்க வேண்டும். ஏனெனில் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட குமாரின் முதலாவது புகைப் படம் அவரின் கடவுச்சீட்டிலுள்ள புகைப்படமாகும்.

அவரை கடத்தியவர்கள் கணினி தகவல் சேமிப்புச் சாதனங்கள் உட்பட அனைத்து ஆவணங்களையும் கொண்டு சென்றுள்ளனர். எனவே இவை அரசாங்கத்திடம் தான் இருக்கக் கூடும் எனவும் அதனால்தான் அந்த அதிகாரி அவற்றை காட்டுதமாறு எம்மிடம் கேட்கிறார் என நாம் கருதுகிறோம் என அவர் தெரிவித்தார். (ரு-8 11)

## நாட்டிற்கு பொருத்த...

வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளன. நாம் அடைந்துள்ள சுதந்திரத்தை அனுபவிக்க நாம் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியின் 62-வது ஆண்டறிக்கை இன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும் நிதி அமைச்சர் என்ற வகையிலும் நான் ஆறு தடவைகள் மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை வெளியிடும் வைபவத்தில் கலந்து கொண்டுள்ளேன்.

உலக நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ள இக்காலகட்டத்தில் இலங்கை 8.3 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இந்த பொருளாதார வளர்ச்சியின் அனுகூலங்கள் நாட்டின் சாதாரண பிரஜைகளையும் சென்றடைவதை உறுதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புகளில் அரசு அர்ப்பணிப்புக்களுடன் செயற்பட்டு வருகின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ரு-8,11)

## ரோஹணவின்...

அவர் ஜே.வி.பி. யின் ஸ்தாபகத் தலைவர் ரோகண விஜயவீர நிறுத்திய இடத்திலிருந்து நாம் எமது பாதையை தொடரவுள்ளோம் என்றார்.

தமது கட்சியின் தலைவர் பிரேம்குமார் குணரட்ணம், திமுது ஆட்டிக்கல, லலித் குமார், குகன் முருகானந்த்ன் ஆகியோர் கடத்தப்பட்டமையானது இந்த நாட்டில் பொதுடமைக் கொள்கையை மீண்டும் நிலை நாட்டுவதற்கு தமது கட்சி மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த அச்சத்தின் விளைவாகும் என சேனாதீர குணதிலக மேலும் தெரிவித்தார்.

புதிய இடது சாரியின் முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன, ஐக்கிய சோஷலிச கட்சியின் தலைவர் ஸ்ரீதுங்க ஜெய சூரிய, லங்கா சமசமாஜக்கட்சியின் மாற்று அணியின் தலைவர் சான்க்யா சில்வா ஆகியோரும் சோஷலிச இயக்கத்தின் புத்துயிர்ப்பிற்கு ஆதரவளிப்பதற்காக இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். இத்தாலி, பாகிஸ்தான் உட்பட பல நாடுகளிலிருந்து சோஷலிச தலைவர்களும் இதில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ரு-8;11)

## ரணில் இந்தியாவில்...

சுற்றுப் பயணத்தை மேற்கொள்வார் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் புதுடில்லியில் நடத்தப்படுகின்ற அரசியல் சம்மேளனத்தின் விசேட விரிவுரை ஒன்றையும் ரணில் விக்கிரமசிங்க வழங்கவுள்ளார்.

இதேவேளைஅவர் தமது விஜயத்தின் போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவையும் சந்திக்கவிருப்பதாக எதிர்க் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரு-8;11)

## கோத்தபாயவின்...

பெண் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற படைத்தரப்பினர், அவ் வீட்டில் மின் இணைப்பை துண்டித்து விட்டு அவர்களை அமைதியாக இருக்கும்படி கூறியுள்ளனர்.

இந் நிலையில், பிரேம்குமார் குணரட்ணம் தவறுகள் எதுவும் செய்திருந்தால், அவர் மீது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவரின் தாயார் திருமதி டி.ஆர்.குணரட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார். பிரேம்குமார் குணரட்ணம் கடத்தப்பட்டமை தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தனது மகனின் அரசியல் தொடர்புகள் குறித்து தனக்கு தெரியாது எனவும், தனது மூத்த மகனின் கதி பிரேம்குமார் குணரட்ணத்திற்கு ஏற்படலாம் என அஞ்சவதாகவும் அவர் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

ஜே.பி.வி கிளர்ச்சியின் போது பிரேம்குமார் குணரட்ணத்தின் மூத்த சகோதரர் ரஞ்சிதம் குணரட்ணம் படைத்தரப்பினரால் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட நிலையில் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

அதேவேளை தனது சகோதரனை கண்டு பிடிப்பதற்கு உதவுமாறு சர்வதேச சமூகத்திடம் பிரேம்குமார் குணரட்ணத்தின் சகோதரி நிரஞ்சலி குணரட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது சகோதரனின் அரசியல் செயல்பாடுகள் குறித்து தான் அறிந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், சமூக அரசியல் மாற்றத்திற்கு ஊடாக அனைத்து இலங்கையர்களுக்குமான சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கே அவர் ஆர்வம் கொண்டிருந் ததாகவும் தெரி[illegible]

நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான
திருமண அழைப்பிதழ்கள்
மற்றும்
அனைத்துவிதமான அச்சுவேலைகளையும்
தரத்துடனும், குறைந்த செலவுடனும்
விரைந்து பெற்றுக்கொள்ளவும்
இவற்றுடன்....
கல்வெட்டுப் புத்தகங்களுக்கான
4 வர்ணக் கவர்களுக்கும்...
பாரதி பதிப்பகம்
இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3081

இறுக்கமானது பிரித்தானியா Student Visa சட்டம்
வேலைவாய்ப்பென்ற பேச்சுக்கே இடமில்லை
எனவே,
ஆஸ்திரேலியா சென்று கல்வி கற்போமா?
பின்வரும் மேலதிக வசதிகள் எமது ஆலோசனையுடன் உங்களிற்கு வழங்கத் தயாராக உள்ளோம்.

- விமான நிலையத்தில் சென்று இறங்கியவுடன் அழைத்துச் செல்லல்
- குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதி
- பகுதி நேரத் தொழில் வாய்ப்புகளிற்கான ஆலோசனை

ஆலோசனைகளுக்கு.....
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 021 221 9016



(சனி, ஞாயிறு, பொதுவிடுமுறை நாட்கள் உட்பட எல்லா நாட்களும் திறந்திருக்கும்)
புதுவருட தினத்தன்று ஆலோசனை பெறுபவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.


- 23 1/3, மகேஸ்வரி லேன், கொழும்பு 06. 011 2 366925
- 115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 021 2285544
- மெல்போன், ஆஸ்திரேலியா. Land line 0061390437100

(8134)

## மரண அறிவித்தல்

## நடராசா மனோகரதாஸ்

### (தாசன் சிகையலங்கரிப்பு நிலைய உரிமையாளர்)



நல்லூரரை பிறப்பிடமாகவும் அல்லாரை வெள்ளாம்பொக்கட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மனோகரதாஸ் நேற்றுமுன்தினம் (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் ராசநாயகியின் பாசமிகு கணவரும் காலஞ் சென்ற மயிலன் (இரத்தினம்), சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கனிஸ்ரன் (கனி) இன் அன்புத் தந்தையும் சந்திரதாசன் (தேவன்), பாவநிதி (பவானி), பாசநிதி (யசோ) ஆகியோரின் சகோதரனும் ஆனந்தராசா, புவனேந்திரன் (செட்டி), பூமணி, பூரணம், சரஸ்வதி (டென்மார்க்), சிவம், இராயேஸ்வரி (ஜெயா ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் நாகராசா, நடராசா (டென்மார்க்), சந்திரசேகர்(ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் ராணி, சறோ ஆகியோரின் சகோதரனும் ராஜப்பிரகாஸ், ராஜகல்யாணி, ராஜகௌரி, ராஜராம், கௌதமி, கௌசி, வினோத், றினோ, றினோசா, யெனோத், தனுசாந், சாகினி, கிருசாந், துஷாகினி, கிருஷாந் ஆகியோரின் மாமனாரும் கஸ்தூரி, கபிலன், நிலுக்சன், திலுக்சன், செல்வியா ஆகியோரின் பெரியப்பாவும் சிவநாதன், வசந்தராசா, சுரேஷ், தனேஷ், சிவாகரன், ரதன், அமிர்தன், றஞ்சித், சுபாஜினி கஜிவன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (12.04.2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அல்லாரை கொற்புளவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லாரை,
வெள்ளாம் பொக்கட்டி, கொடிகாமம்.

தகவல்: குடும்பத்தினர்

(8143)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை[illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.